Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20
දිනමුරසු වාරමලර්
செப்.26-ஒக்.02,1999
ரூபா 12/00

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 328

## சமரில் தோன்றும் திருப்பங்கள்



## தடுமாறும் வெளிநாட்டமைச்சு வியூகத்தில் நெருக்கடி



## ஜோடி தேடும் பிரசாந்த்

## ரஜினி காதலித்த பிரபல நடிகை

# முரசம்

## பொதி விளையாட்டு

***அன்புள்ள உங்களுக்கு, வணக்கம்.***

பொதியை முன்வைக்குமாறு
போராட்டங்கள் நடந்துள்ளன.
இது அரச தகவல் தொடர்பு
சாதனங்களது செய்திகள்!

இத்தகைய ஆர்ப்பாட்டங்கள்
பற்றி அரச ஊடகங்கள்
அதி முக்கியத்துவம் கொடுப்பதால்,
அவை யாரால் நடத்தப்பட்டன
என்பது தெளிவு!

இப் போராட்டங்களது
நோக்கம் என்ன?

பொதிக்கு ஆதரவாக
குரல் கொடுப்போர்
சமாதான விரும்பிகள் போன்றும்,
பேரினவாதத்துக்கு
எதிரானவர்கள் என்றும்
தோற்றம் காட்ட முனைகிறார்கள்!

ஆட்சியாளரது
தற்போதைய தீர்வுப் பொதியை
தமிழ் பேசும் மக்கள்
ஏற்றுக் கொள்ளவில்லை!

ஆட்சியாளருடன்
உறவாடும் தமிழ்க் கட்சிகளும்
உடன்படவில்லை!

கொஞ்சம் அழுத்தினால்
இவை உடன் படக்கூடும்
என்பது வேறு விடயம்.
ஆனால் தற்போதுவரை
உடன்பாடு காட்டவில்லை!

விடுதலைப் புலிகளோடு
பேச்சு இல்லாமல்
எத் தீர்வும் சாத்தியமில்லை
என்பதை ஆட்சியாளரே
ஏற்றுக் கொண்டுள்ளனர்!

அதன் மூலம்,
தமிழ் பேசும் தரப்பின்
பலமுள்ள பிரதிநிதிகளாக
விடுதலைப்புலிகளையே
ஏற்றுக் கொண்டுமுள்ளனர்!

தற்போதைய பொதியை
விடுதலைப்புலிகள்
முற்றாக நிராகரித்துள்ளனர்!

"தமிழ் பேசும் மக்களது
தாயக பூமியை
பல கூறுகளாகப் பிரித்து,
தமிழ்த் தேசியத்தை
அழித்தொழிக்கும் பொதி!"
என்று கூறியுள்ளனர்!

அதனைப் புலிகள்
கூறியிருப்பினும்,
தமிழ் பேசும் மக்களது
அபிப்பிராயமும் அதுவே!

"பொதி செத்துவிட்டது;
அதனால் பயனில்லை" என்று
அமைச்சர் அஷ்ரப் அவர்களும்
திட்டவட்டமாகக் கூறியிருக்கிறார்!

எனவே, பொதி
தமிழ் பேசும் தரப்பால்
நிராகரிக்கப்பட்டுள்ளது!

பொதிக்கு
தமிழ்க் கட்சிகள்
முன்வைத்த திருத்தங்கள்கூட
ஆட்சியாளரால்
குப்பைக் கூடைக்கு
அனுப்பப்பட்டு விட்டன!

தமிழ் பேசும் மக்களது
அபிலாசைகளை
கணக்கில் எடுக்காதபோது,
ஆரோக்கியமான தீர்வு
என்பது எட்டாக்கனி!

இந்நிலையில்,
தற்போதைய பொதியை
நாடாளுமன்றத்தில்
முன்வைக்குமாறு கோருவதும்,
பேரினவாத நலன் சார்ந்த
கோரிக்கைதான்!

'நாம் ஏற்காத பொதியை
யாருக்காக
முன்வைக்கப் போகிறீர்கள்?'
என்று ஒரு தமிழ்க் கட்சிகூட
கேள்வி எழுப்பவில்லை!

அரை குறைப் பொதிக்கு
அங்கீகாரம் தேடும்
எந்த முயற்சியுமே
தமிழ் பேசும் தரப்பின்
நலனுக்கு மாறானதே!

இந்தப் பொதியை
ஏற்கவைக்கவே
இந்தப்பாடு படுகிறோம்!

இதைவிட அதிகமாகக்
கொடுப்பது எப்படி?
என்று உலகுக்கு முன்னால்
நியாயம் உரைக்கவே
இந்த ஆரவாரங்கள்!

பேரினவாதிகள்
பொதியை எதிர்க்க
போதிய சந்தர்ப்பம்
வழங்கப்பட்டதற்கு
காரணமும் அதுதான்!

"இதற்கே எத்தனை
எதிர்ப்புப் பாருங்கள்"
என்று பூச்சாண்டி காட்டியே
அரைகுறைப் பொதியை
நியாயப்படுத்த நினைக்கிறார்கள்!

அரை குறைப் பொதியை
தமிழ் பேசும் தரப்பு
ஏற்கவில்லை என்பதை
உலகமறியக் கூறவேண்டியது
தமிழ் பேசும் தரப்பின்
முக்கிய பணியாகும்!

இதனைச் செய்யத் தவறுவது
பொதியைக் கூறிக்கூறியே
தமிழ்பேசும் தரப்பை
இராணுவத் தீர்வால் நசுக்கும்
சாணக்கியத்துக்கு
சாணை பிடிப்பதாகிவிடும்!

புத்திசாலித்தனமான
பொதி விளையாட்டை
தமிழ் பேசும் தரப்பும்
விவேகத்துடன் எதிர்த்தாடவேண்டும்!

*மீண்டும் மறுமடலில்*
*வந்து கலக்கும்வரை*

***என்றென்றும் அன்புடன்,***
***ஆசிரியர்***

# ஆன்மீகம்

## நிலைத்த அமைதி பெற...



மனித குலத்திற்குப் பரம்பொருளை வெளிப்படுத்தியவர் ஸ்ரீ ராமகிருஸ்ணர் என்பதில் ஐயமில்லை. இறையனுபூதி பெறுவதே சமயத்தின் இலட்சியம் என்றும், மனிதப் பிறவியின் உயர்ந்த குறிக்கோள் அதுவேயென்றும் ஸ்ரீ ராமகிருஸ்ணர் கூறியுள்ளார். இறையனுபூதி வாயிலாகத்தான் நிலைத்த அமைதி, உண்மையான ஆனந்தம், மகிழ்ச்சி முதலியவை கிடைக்கின்றன. இறைவனுக்காக நைந்து நைந்து உருகினால் இறையனுபூதி பெறலாம். ஆனால் அப்படிப்பட்ட ஏக்கம் தூய்மையான உள்ளத்தில்தான் தோன்றுகிறது.

நம்மனத்தினின்று காமமும், பணத்தாசையும் விலகும் பொழுதுதான் உள்ளத்தில் அருள் தாகம் ஊற்றெடுக்கிறது. இந்த இறையன்பு தியானமாக மலர்கிறது. தொடர்ந்த இடையறாத கடவுளைப் பற்றிய தியானம் இறை தரிசனத்தில் முடிகிறது.

இறைவன் பால் கொண்டுள்ள ஆழ்ந்த அன்பினாலும், ஏக்கத்தினாலும் நம் தூய இதயகமலத்தை மலரச் செய்வதன் வாயிலாக இறைவனுடைய பேரருளை உணர்ந்து அனுபவிக்கலாம்.

தொகுப்பு: அ. அரசரெத்தினம், மூதூர்.

## தீமைகளைத் தடுப்போம்

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நவின்றார்கள்: "உங்களில் எவர் ஒரு தீய செயலைக் காண்கிறாரோ, அவர் அதனைத் தனது கைகளால் தடுக்கட்டும். அவரால் அது முடியவில்லை எனில் அதை நாவால் தடுக்கட்டும். அவரால் அதையும் செய்ய முடியவில்லையெனில் அதை அவர்தம் மனதினால் வெறுக்கட்டும். இது இறை நம்பிக்கையில் மிகவும் பலவீனமான நிலையாகும்." (முஸ்லிம்)

மனிதர்களைப் பற்றி அச்சம், சத்தியத்தை அறிந்த பின்னரும் அதனை எடுத்துரைப்பதிலிருந்து உங்களைத் தடுக்க வேண்டாம். (திர்மிதி)

'கொடுமைக்காரனுக்கும், கொடுமை இழைக்கப்பட்டவனுக்கும் உதவுங்கள்' என்றார் ரசூலேகரீம் (ஸல்) அவர்கள். 'கொடுமைக்காரனுக்கு உதவுவது எப்படி?' என அவரிடம் வினவப்பட்டபோது, 'கொடுமை புரிவதிலிருந்து அவனை விலக்குங்கள்; அதுவே அவனுக்குச் செய்யும் உதவியாகும்' என்று நபிகள் நாயகம் பதிலளித்தார்கள். (புஹாரி)

மேற்கூறிய ஹதீஸ்களின் அடிப்படையில் தீமைகளையும் கொடுமைகளையும் எந்த இடத்தில், எந்தச் சந்தர்ப்பத்தில் கண்டாலும் தடுத்து நிறுத்த முயல்வோமாக.

அபூ கிஷோர், மருதமுனை.

# கவிதைப் போட்டி இல.325

**இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:**

### பரிசுக்குரிய கவிதை

## தலைவிதி

வெளிநாடு செல்ல
எண்ணிய தம்பி
வெலிக்கடையில்
எண்ணுகிறான் கம்பி

எஸ். கணேசமூர்த்தி-
அக்கரைப்பற்று-08.

### பலமும் பலவீனமும்

அடைப்பவன் கோழை!
உடைப்பவன் வீரன்!
உரிமை பெற
தடுக்குமெதனையும்
உடைத்தெறி!

அ. சந்தியாகோ-அசோகா
வித்தியாலயம், கண்டி.

### எது புலி?!

கூண்டில்
அடைபட்டால்
காட்டுப் புலி!
குண்டில் அகப்பட்டால்
நாட்டுப் புலி!

டி. ஜோர்ஜ்-ஹய்பொரஸ்ட்.



### பரிசு

அவசரகாலச்சட்டம்
தினம் தரும் பரிசு!

சி. அல்போன்ஸ்,
நீர்கொழும்பு.

### எது?

இது
லக்கி முகாமா?
மலர் மாளிகையா?
எதுவாயிருந்தாலும்
மனித வதை முகாம்தான்!

ச. சபேசன்- வவுனியா.

### வெ(க)டி

வெளியே விட்டால்..
வெடிக்கும் என்று;....
உள்ளே வைத்தார்கள்.
ஆனாலும்;
வெடிக்கிறது வெளியே!

ந. மதி-மோதர.

### வேலி

முள்வேலி என்றால்
உடைக்கலாம்!
இரும்பு வேலி என்றாலும்
உடைக்கலாம்!-இது
இனவேலியாச்சே...!

மா. சிவதசன்- திருகோணமலை.

### எங்கும்

பிறந்த மண்ணிலும் சோதனை.!
வந்த மண்ணிலும் வேதனை!?

எஸ். கிருபாளினி, மெல்புர- சிலாபம்.

### பிடித்து...

வந்தேறு குடிகள்
என்பார்,
குந்தென்று இங்கு
பிடித்து வைப்பார்!

க. நிலாப்தீன்-
மட்டக்களப்பு.

### உறுதி

சிறையினில் வைத்து
வதைத்திட்ட போதும்
சிதையாது எங்கள்
உரம் கொண்ட நெஞ்சம்!

வீ. ஜெயராஜ்- வாழைச்சேனை.

### பாதுகாப்புச் சட்டங்கள்

நாங்கள் இடறி விழுந்தாலும்
சிறைதான்!

த. நகுலேஸ்வரன்- மட்/கல்லடி, வேலூர்.

# கவிதைப் போட்டி இல.328



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 02.10.1999

**முகவரி:** கவிதைப் போட்டி இல.328
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

### எண்ணிப்பார்

சிறைவாழ்வை எண்ணி
சித்தம் கலங்காதே!
மகாத்மாவையும் மண்டேலாவையும்
ஒருகணம் எண்ணிப்பார்...!

இரா. சபாபதி- திக்வளை தோட்டம்,
ஆலிஎல.

### புரியாத மொழி?

அவர்கள் எதையோ
கேட்க?-நானும்
எதையோ சொல்ல;
கூட்டி வந்து...
கூண்டுக்குள்
குடியிருத்தி விட்டார்கள்!

ஏ. ஆர். நபீஸ்- புல்மோட்டை-01.

# வாசக(ர்)சாலை

## தூற்றட்டும்

முரசைப் போல தாமும் எழுதிப்பார்த்து, தாக்குதல் செய்திபற்றி முரசுப்பாணியிலேயே தர முயன்று தோற்றுப்போன பத்திரிகை ஒன்று முரசை சாடியிருக்கிறது. பாவம் தோற்றுப் போனவர்கள். தூற்றுவோர் தூற்றட்டும்! 'முரசு' நம்மால் போற்றப்படும்!

இ. கணேசராஜா, பாரீஸ்.

இனிய முரசே!

உன் மூலமாகத்தான் பல உண்மைகள் வெளிச்சத்துக்கு வந்தன. உன்னை திட்டித் தீர்த்து தம் பொறாமையைத் தீர்க்கும் சில பத்திரிகையாளர்களது நோக்கம் நாமறிந்ததே. அவர்கள் நோக்கம் ஈடேறாது தங்கள் பத்திரிகை விற்காத கோபத்தில் குலைக்கிறார்கள். குலைப்பார்கள். உன் பணி தொடரட்டும்.

வி. கஜேந்திரன், கனடா.

அன்புள்ள முரசுக்கு!

'தான் பிரீன்' தொடர் வெளியாவது கண்டு மகிழ்ச்சி. 'தாய்', 'தூக்கு மேடைக் குறிப்பு' போன்றவற்றை அடுத்து முரசு தரும் அற்புதமான கதை இது என்றால் மிகையல்ல.

ஆர். வாகீசன், கொழும்பு-05.

முரசே!

உனது பணி தொடர வாழ்த்துக்கள். 'தான் பிரீன்' தொடர் நன்றாக உள்ளது. இயக்குநர் சக்தியின் அனுபவங்கள், 'நில் கவனி முன்னேறு' ஆகியவையும் நன்று. நில் கவனி முன்னேறு தன்னம்பிக்கை ஊட்டுகிறது.

எம். குருபரன், சிலாபம்.

முரசுக்கு,

இடி அமீன் தொடர்ந்து மிரட்டுகிறார். ரசிகனின் கைவண்ணத்தில் இலக்கிய நயமும் அசத்துகிறது.

மு. ரொசான், வத்தளை.

அன்பின் முரசே!

நீ சுமந்து வருபவை யாவும் இன்ப சுகம் தருகின்றன. புவனா வழங்கும் 'மோனிக்கா' சிறப்பு. ரசிகன் தரும் 'இடி அமீன்' சிறப்பு.

மயூரி கமலநாதன்,
மல்லாவி.



தான் பிரீன் தொடர் காலத்துக்கேற்ற வெளியீடு. கட்டாயமாக நாமெல்லாம் அயர்லாந்து போராட்டம் பற்றி அறிந்திருப்பது அவசியம். தான் பிரீன் தொடரை முரசு தருவதற்கு நன்றி.

எம். ஜெயரூபன், திருமலை.

## வசை பாடட்டும்

முரசே!

உனது பணிக்கு பாராட்டுக்கள். முரசை வசைபாட என்றே ஒரு சிறு கூட்டம் இருக்கிறது. தாம் மட்டுமே பொதுநலத் தொண்டர்கள் ஏனையோர் எல்லாரும் பிழைக்க நினைப்பவர்கள் என்று அவர்கள் நினைக்கிறார்கள்; இதனை ஒருவிதமான மனநோய் என்றுகூடக் கருதலாம். இவற்றை கருத்தில் எடுப்பது முரசுக்கு பெருமையல்லோ. முரசுக்கு அவர்கள் திருஷ்டி கழிக்கிறார்கள்.

இ. குமாரதாஸ், கனடா.

முரசே!

சுமந்து வரும் அனைத்து அம்சங்களில் இருந்து திருப்தியான சேவையே முரசின் மூச்சு என்பதை நிரூபித்து விட்டாயே. 'மோனிக்கா' சூப்பர். உனது சேவை வளர எனது வாழ்த்துக்கள்.

வே. சுமதி, முருங்கன்.

வாரந்தோறும் மலரும் முரசின் அனைத்து விடயங்களும் அருமை. புதிய தொடராக ஆரம்பமான ஐரிஷ் விடுதலைப் போராட்ட வீரனின் வீரச்செயலை எடுத்து இயம்பும் 'வீரன் தான் பிரீன்' தொடர் ஆரம்பமே விறுவிறுப்பாக இருக்கின்றது. மேலும் கவியரசுவின் 'அரங்கம் அந்தரங்கம்' அருமையான படைப்பாகும்.

ஏ. செபஸ்தியன், உக்குவளை.

## அனுதாபம் கூறவில்லை

அன்பு முரசே!

மாணிக்கதாசனின் மறைவுக்கு அரசாங்க கட்சிகூட அனுதாபம் கூறவில்லை. மாணிக்கதாசன் தமிழ் மக்களுக்கு நன்மை செய்யாத ஒருவராக இருக்கலாம். ஆனால் படைக்கும், அரசுக்கும் பல வழிகளில் பிரயோசனப்பட்ட ஒருவர். அவ்வாறான ஒருவருக்குக்கூட அனுதாபம் தெரிவிக்க அரசாங்கம் முன்வரவில்லை. கூட்டணியில் ஒருவர் பலியானால் ஜனாதிபதியும் அமைச்சர்களும் வரிசையாக அனுதாபம் தெரிவிப்பதுண்டு.

ஆயுதம் ஏந்திய முன்னாள் இயக்கங்களை துஷ்டர்களாகவும், தேவை கருதி பயன்படுத்தப்படுவோராகவுமே அரசாங்கத்தினர் எண்ணுகின்றனர். இந்த உண்மை புரியாது, தமக்கு அரசாங்கம் மரியாதை செய்வதாக தமிழ்க் கட்சிகள் புளகாங்கிப்பது வேடிக்கையல்லவா.

இ. மகேந்திரன், வவுனியா.

## மக்களை விரட்டியவர்கள்

மக்களைத் தாக்குமளவுக்கு தமிழ்க் கட்சிகள் மாறிவிட்டன. இவர்கள் எல்லை இதுதான். வவுனியாவில் புளொட் விரக்தியின் விளிம்பில் நின்று அடிக்கடி மக்களைத் தாக்குகிறது. யாழ்ப்பாண மக்கள் தம் முகாம்கள் அருகே இருக்கக்கூடாது என்று விரட்டிய மக்கள் சேவகர்களும் புளொட்டினர்தான்.

பூ. மாசிலாமணி, வவுனியா.

'காதிலை பூ கந்தசாமி' தந்த விளையாட்டுச் செய்திகள் வெகுஜோர். தமிழ்க் கட்சிகளும் போரில் பங்காளிகளே என்று ராஜதந்திரியார் கூறியிருந்தார். உண்மையான கருத்து. போரில் தமிழ்க்கட்சிகள் அரச முகாமை சார்ந்து நிற்கின்றன. எனவே புலிகளது தாக்குதலை இவர்கள் எதிர்பார்த்து நிற்க வேண்டும். அதைவிடுத்து புலம்பக் கூடாது.

கு. நவரத்தினம்,
யாழ்ப்பாணம்.

அன்பின் முரசே!

நீ தாங்கி வரும் அனைத்து உண்மைகளும் சிறந்தவையே. அதில் 'மோனிக்கா என் மோனிக்கா' மிகவும் சிறந்ததாகவும் சுவாரசியமாகவும் காணப்படுகிறது. இதை வழங்கி வரும் புவனாவுக்கு எனது உள்ளங்கனிந்த வாழ்த்துக்கள். அத்துடன் 'இலக்கிய நயம்', 'இடி அமீ'னின் தொடர், 'துரையப்பா முதல் காமினி வரை' என்பன என்னை மிகவும் கவர்ந்துள்ளன. நீ மேலும் வளர வாழ்த்துக்கள்.

உனது நேயன்,
என். ஏ. கலைவாணன், முல்லைத்தீவு.

அன்பின் முரசே

நீ சுமந்து வரும் அத்தனை அம்சங்களும் ரொம்பப் பிரமாதம். அதிலும் 'மோனிக்கா என் மோனிக்கா'விலும் அசத்துகிறார் புவனா.

இ. கிஸ்மியா, ஏறாவூர்.

இனிய முரசே!

'கண்ணீரில் கரைந்த இரவை' எமக்கு தந்து எமை கண்ணீரில் கரையவிட்ட புவனா தற்போது 'மோனிக்கா என் மோனிக்கா'வை சுவைபட தந்துகொண்டு இருக்கின்றார். முரசுக்கும் புவனா அவர்களுக்கும் நன்றிகள்!

ந. குருபரன், மட்டக்களப்பு.


**மடல்கள் மற்றும் ஆக்கங்கள்- உட்பட சகல தொடர்புகளுக்கும்:**
**தினமுரசு வாரமலர்,**
**த.பெ.இல:-1772, கொழும்பு.**
**தொலை நகல் (Fax):- 074-513266**


## அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு,வேறுபிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

# ஒரு நாடு-இரு நீதி!

# சிங்கள புத்திஜீவிகளும் கண்டனம்!

"இலங்கைத்தீவு முழுவதும் ஒரே நாடாக இருக்க வேண்டும் என்று அரசாங்கம் கூறிவருகிறது. பல்லாயிரம் கோடி ரூபாய் களை செலவிட்டு யுத்தம் நடத்தி வருவதும் நாட்டைப் பிரிக்காது தடுப்பதற்காகவே என்றும் கூறப்படுகிறது.

ஆனால் அதே அரசாங்கத்தின் அணுகு முறைகள் நாட்டைப் பிரித்துக் காட்டுகின்றன!"

மேற்கண்டவாறு அரசியல் விமர்சகர்கள் பலர் கருத்துக் கூறியுள்ளனர்.

புதுக்குடியிருப்பில் தமிழ் மக்கள் விமானக் குண்டுவீச்சுக்கு இலக்கானதையிட்டு அரசாங்கம் கவலை தெரிவிக்கத் தவறியிருந்தது. அதேவேளை அம்பாறையில் சிங்கள மக்கள் மீதான தாக்குதல்கள் தொடர்பாக உடனடியாக கரிசனம் காட்டியிருந்தது. இதனையடுத்தே மேற்கண்டவாறான விமர்சனங்களும், அதிருப்திகளும் கிளம்பியுள்ளன.

குண்டு வெடிப்புக்கள், மற்றும் தாக்குதல்களில் பலியாவோரின் புகைப்படங்களோ, தொலைக்காட்சிப் படங்களோ வெளியிடுவதைத் தடை செய்வதாக ஜனாதிபதி விசேஷ அறிவிப்பு ஒன்றை முன்னர் வெளியிட்டிருந்தார்.

இதனால் வடக்கு-கிழக்கில் தாக்குதல்கள், குண்டு வீச்சுக்கள் என்பவற்றில் பலியானவர்களது படங்களை தமிழ்ப் பத்திரிகைகளும் வெளியிட முடியாதிருந்தது. தற்போதும் இத் தடை நீடிக்கிறது.

ஆனால் அம்பாறையில் சிங்கள மக்கள் கொல்லப்பட்ட காட்சிகளை அரச தொலைக் காட்சி விவரமாக ஒளிபரப்பியது. சிங்களப் பத்திரிகையான திவயினவும் படங்களை வெளியிட்டிருந்தது.

இது தவிர அரச பத்திரிகைகள், தொலைக்காட்சி, வானொலி என்பவற்றில் தொடர்ந்து இச் சம்பவம் விவரிக்கப்பட்டது.

புதுக்குடியிருப்புத் தாக்குதல் நடந்த மறுநாள் அது தொடர்பாக அரச பத்திரிகைகளில் எவ்வித செய்தியும் இடம்பெறவில்லை. முற்றாக இருட்டடிப்பு செய்யப்பட்டிருந்தது.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த விமர்சகர்கள், "அரசாங்கமும், அதன் கட்டுப்பாட்டிலுள்ள நிறுவனங்களும் தங்களை பௌத்த சிங்கள பாதுகாவலர்களாக இனம் காட்டியுள்ள தருணம் இதுவாகும்" என்று கூறியுள்ளனர்.

"அம்பாறையில் நடைபெற்ற தாக்குதல் பாரதூரமானது. கண்டிக்கப்பட வேண்டியது என்பது உண்மைதான். ஆனால் அரசாங்கம் முழு நாட்டுக்கும் உரியது. ஒரு கண்ணில் வெண்ணெய், மறுகண்ணில் சுண்ணாம்பு என்ற நிலைப்பாடு ஏற்றதல்ல" என்று விமர்சகர்கள் பலர் ஒருமித்துக் கருத்து வெளியிட்டுள்ளனர்.

புதுக்குடியிருப்பு, அம்பாறை தாக்குதல்கள் தொடர்பாக அரசாங்கம் கையாண்ட அணுகுமுறை பேரினவாதிகளைத் திருப்திப் படுத்துவதாகவே இருந்துள்ளது என்று சிங்களப் புத்திஜீவிகள் சிலரும் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

"புதுக்குடியிருப்புத் தாக்குதல் தொடர்பாக 'விசாரணை நடத்தப்படும்' என்று வழக்கமான சமாளிப்பு வார்த்தைகூட கூறப்படவில்லை.

புதுக்குடியிருப்புத் தாக்குதல் தொடர்பாக கூறப்பட்ட இறுமாப்பான கருத்துக்கள் பேரினவாதிகளுக்கு மகிழ்ச்சியூட்டும் நோக்குடனேயே கூறப்பட்டது" என்று கொழும்பில் இருந்து வெளியாகும் சிங்கள முற்போக்கு பத்திரிகை ஒன்றின் ஆசிரியர் தெரிவித்துள்ளார்.

## வவுனியாவில் இரண்டு புளொட்

## இணைப்புக்கு முயற்சிகள்!

வவுனியாவில் புளொட் மாணிக்கதாசன் அணியும், சித்தார்த்தன் அணியும் இரு வேறு பிரிவுகளாக முகாம்கள் அமைத்துள்ளனர்.

மாணிக்கதாசன் பிரிவுக்கு தலைமை தாங்கும் ஹரிபாபு கைதுசெய்யப்பட்டதை அடுத்து, சித்தார்த்தன் அணியினர் வவுனியா சென்றனர்.

பொலிஸ் பாதுகாப்போடு சென்ற அவர்கள் வைரவப் புளியங்குளம் பகுதியில் முகாம் அமைத்து தங்கியுள்ளனர்.

இந்த முகாமுக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. மறு அணியினர் இரம்பைக்குளம், கோவில்குளம் ஆகிய பகுதிகளில் உள்ளனர்.

ஹரிபாபு கைதானதை அடுத்து தாசன் அணிக்கு ஜெகன் பொறுப்பாக இருக்கிறார். தற்போது இவர் தலைமறைவாகி உள்ளார். அதனால் அன்ரன் என்பவரே தற்போது நிர்வாகத்தைக் கவனித்து வருகிறார்.

மாணிக்கதாசன் அணியோடு இருந்த சிலரை சித்தார்த்தன் அணியினர் தமது பக்கம் இழுத்துள்ளனர். அப் பிரிவில் சிலரைத் தவிர ஏனையோரை தம்மோடு இணைக்க முயற்சித்து வருகின்றனர்.

இதற்கிடையே நிதி திரட்டும் முயற்சியிலும் இறங்கியுள்ளனர். மதுபானக் கடை உரிமையாளர்கள், வர்த்தகர்கள் ஆகியோரிடம் நிதிஉதவி கோரியுள்ளனர்.

மாணிக்கதாசனின் இடத்துக்கு ஆர்.ஆர். என்பவரை நியமிக்க சித்தார்த்தன் அணி முடிவு செய்துள்ளதாம்.

## கிழக்கு திமோரில் தலையீடு

## இங்கும் திரும்பிப் பாருங்கள்

புதுக்குடியிருப்பு பகுதியில் நடைபெற்ற விமானக் குண்டுத் தாக்குதல் தொடர்பாக வன்னிப் பிரஜைகள் குழு ஐக்கிய நாடுகள் சபை செயலாளர் கொபி அனானுக்கு மகஜர் ஒன்றை அனுப்பிவைத்துள்ளது.

அம் மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: "திடீர் என்று அதிர்ச்சியூட்டக் கூடிய வகையில் தொடர்ச்சியான குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

குண்டு வீச்சு நிகழ்ந்த இடத்தில் உடல்கள் சிதறி குடிமக்கள் கொல்லப்பட்டிருந்தனர். சதைத் துண்டங்கள் அப்பகுதி எங்கும் சிதறிக்கிடந்தன. இரத்தம் வெள்ளமாய் தேங்கிக் கிடந்தது. கடந்த சில ஆண்டுகளாகத் தொடரும் இராணுவ நடவடிக்கையினால் மக்கள் இடம் பெயர்ந்து தங்கியுள்ள பகுதிகளிலேயே தாக்குதல் நடைபெற்றுள்ளது.

இந்தக் குண்டு வீச்சினால் 22 தமிழர்கள் பலியானார்கள். 33 பேர் காயமடைந்தனர். இந்தக் குரூரமான தாக்குதலில் படுகாயமடைந்தவர்களது எதிர்காலம் கேள்விக் குறியாகியுள்ளது. சில குழந்தைகள் தப்பிப் பிழைத்தபோதும் தாய் அல்லது தந்தையை இழநதவர்களாகவும், சில குழநதைகள் இருவரையுமே இழந்தவர்களாகவும் உள்ளனர்.

கிழக்குத் திமோர் மக்களுக்கு ஒரு நீதியான தீர்வினை வழங்க பாரிய முயற்சிகளை மேற்கொண்டுள்ள நீங்கள் எமது பிரச்சனையையும் செவிமடுக்க வேண்டும்!" என்று மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## குழந்தைக்காக உயிர் தந்த தாய்!

## குண்டுத்தாக்குதலில் பரிதாபச் சம்பவம்!

"எனது மகள் 'கிபீர் இரையுதம்மா' என்று கூறினாள். அடுப்புக்குள் வைத்த சிரட்டைதான் சீறுதென்று நான் சொல்லி முடிப்பதற்கு முன்னரே குண்டுத் தாக்குதல் நடந்தது. நாங்கள் நின்ற பகுதி அதிர்ந்தது. நல்ல வேளையாக உயிர் தப்பினோம்" என்று புதுக்குடியிருப்பு தாக்குதல் பற்றி கூறியுள்ளார் ஒரு குடும்பப் பெண்.

புதுக்குடியிருப்பு சந்தை மீன் வியாபாரி ஒருவர் கூறுகையில், "எனக்கு இரண்டு பிள்ளைகள். வேறு உதவி எதுவும் கிடையாது. குண்டுத் தாக்குதலில் நான் காயமடைந்து விட்டேன். பிள்ளைகள் என்ன கதி ஆனார்களோ தெரியாது. மருத்துவமனையில் நான் இருப்பது அவர்களுக்குத் தெரியுமோ தெரிய வில்லை!" என்று கூறினார்.

### கிபீர் சத்தம்

இன்னுமொரு பெண் அழுதழுது கூறிய சோகச் சம்பவம் இது: "கிபீர் சத்தம் கேட்டது. ஓடுவதற்கு நேர அவகாசம் இல்லை. நான் விழுந்து படுத்துவிட்டேன். என்னை காப்பாற்றுவதற்காக அம்மா என்மீது படுத்துவிட்டார். குண்டு வெடித்த சத்தம் கேட்டது. எங்குமே புகைமண்டலமாகக் கிடந்தது.

என் மேல் கிடந்த அம்மா உடல் சிதறி பலியாகிக் கிடந்தார். என்னைக் காப்பாற்றுவதற்காக தன்னுயிரை தந்துவிட்டார்" என்று கதறியழுதார் அப் பெண்மணி.

50 வயதான சந்தை வியாபாரி சரஸ்வதி, கணவரையும் பிள்ளையையும் குண்டுத்தாக்குதலில் பறிகொடுத்துவிட்டு தனி மரமாக நிற்கிறார். அவரும் காயமடைந்துள்ளார். பலியாகியுள்ள மகன் திருமணம் முடித்து மூன்று மாதம்.

### அங்க இழப்பு

தனராஜா தனுஜன் என்னும் 2 1/2 வயதுக் குழந்தை குடலில் காயமடைந்து மருத்துவ மனையில் இருக்கிறது. இக் குழந்தையின் தாயாரும் குழந்தைமீது படுத்தே குழந்தையைக் காப்பாற்றியிருக்கிறார். ஆனால் அந்தத் தாய் பலியாகிவிட்டார்.

புதுக்குடியிருப்பு வைத்திய அதிகாரி சிவமோகன் கூறும்போது: "காயமடைந்தவர்களை உடனடியாக மருத்வமனைக்கு கொண்டு வந்து சேர்த்தனர். சில மணி நேரத்தில் ஏழுபேர் உயிர் இழந்தனர். அவர்களில் சிறுவர்களும், வயோதிபர்களும் இருந்தனர். தொடர்ந்து 34 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர்" என்று கூறினார்.

பலியானவர்கள் பலர் தலைகள் அற்ற நிலையிலும், உடல் சிதறியுமே காணப்பட்டனர். காயமடைந்துள்ள பலர் ஏதாவது ஒரு அங்கத்தை இழக்கும் நிலையில் உள்ளனர்.

## புலிகள் வெளியிடும் ஆதாரம்

## சர்வதேச அரங்கில் பிரசாரம்

புதுக்குடியிருப்பு விமானக்குண்டு வீச்சின் முழுப் பரி மாணங்களும் புலிகளது நிதர்சனம் படப்பிடிப்பு குழுவினரால் பதிவு செய்யப்பட்டுள்ளன.

பொது மக்களது இலக்குகள்மீது தாக்குதல் நடத்தப்படவில்லை என்று அரசாங்கம் கூறியிருந்தது. அக் கூற்று பொய்யென்று நிரூபிக்கும் வகையில் வீடியோ பிரதிகளாக உலகெங்கும் அனுப்பப்பட உள்ளனவாம்.

வெளிநாட்டு இராஜதந்திர வட்டாரங்களுக்கு இவை காண்பிக்கப்பட உள்ளன. பாதிக்கப்பட்ட மக்கள் பலரும் பேட்டியளித்துள்ளனர்.

## அகதிகளைத் தாக்கத் திட்டம்

## பொலிசார் எச்சரிக்கை வேட்டு!

வவுனியாவில் பூந்தோட்டம் கல்வியியற் கல்லூரிக்கு அருகே நலன்புரி நிலையங்கள் அமைந்துள்ளன.

இவை வவுனியாவில் சிங்களக் குடியேற்ற கிராமங்களை அண்டியதாகவே அமைந்துள்ளன. 20.09.99 அன்று இரவு கத்தி, பொல்லு சகிதம் கும்பல் ஒன்று நலன்புரி நிலையங்களை நோக்கி வந்துள்ளது.

காவலுக்கு நின்ற பொலிசார் ஆகாயத்தை நோக்கி எச்சரிக்கை வேட்டுக்களைத் தீர்த்தனர். அதன்பின்னரே கும்பல் திரும்பிச் சென்றது.

மடு கந்தை, குடாகச்சைக்கொடி, கரடிக்குளம் போன்ற சிங்களக் கிராமங்கள் வவுனியா நலன்புரி நிலையத்தை அண்டியதாக உள்ளன. இவை முன்னர் தமிழ்க் கிராமங்களாக இருந்தவை. தற்போது சிங்களக் கிராமங்களாக உள்ளன.

இக் கிராமப் பகுதிகளில் தற்போதும் புலிகள் நடமாடுவதுண்டு. புலிகளோடு இக் கிராமவாசிகள் சிநேக பூர்வமாகவே இருந்து வருகின்றனராம்.

## வீரமுனையில் தாக்குதல்

(காரைதீவு நிருபர்)

வீரமுனைப் பகுதியில் கடந்த இருவார காலமாக இரவானதும் சீருடையினர் வீதியால் செல்லும் பொதுமக்களுக்கு அடித்து தாக்கியதாக கூறப்படுகிறது.

கடந்த 19.09.99 அன்று மக்களைப் பிடித்து வேலைவாங்கியபின் சிற்றூண்டி வழங்கி புத்திமதி கூறியுள்ளனராம். அதன் பின்பு தாக்குதல் தணிந்ததாகத் தகவல்.

இதேவேளை அக்கரைப்பற்று தமிழ் ட்ராக்டர் உரிமையாளர்களிடமிருந்து ஒரு தொகை நிதியை சீருடையினர் வசூலித்து வருவதாகவும் புகார் தெரிவிக்கப்படுகின்றது. நிதி வழங்காதவர்கள் தண்டிக்கப்படுவார்களாம்.

## அதிகாலையில் புலிகள் தாக்குதல்!

## பெண் புலிகளும் பங்கேற்பு!

அம்பாறை 31ம் கொலனியில் நடைபெற்ற தாக்குதல் குறித்து கிடைத்துள்ள தகவல்கள் பின்வருமாறு;

19.09.99 அன்று அதிகாலை 2.30 அளவில் புலிகளது விசேஷ அணி 31ம் கொலனிக்குள் புகுந்தது.

ஆண்களும், பெண்களுமாக நூறுபேர் வரையான புலிகள் அந்த அணியில் இருந்தனர். சிலர் சீருடை அணிந்திருந்தனர்.

நாய்கள் குரைக்கும் சத்தங்கள் தவிர ஊரே அமைதியாக இருந்தது. அந்த அமைதி அடுத்த சில நிமிடங்களில் குலைந்தது.

வீட்டுக் கதவுகளை உடைத்துக் கொண்டு உள்ளே புகுந்தவர்கள், தூக்கத்தில் இருந்தவர்களைப் படுக்கையில் வைத்தே வாளால் வெட்டினார்கள். சிலரை வெளியே இழுத்து வந்து கழுத்தில் வெட்டினார்கள்.

எங்கும் மரண ஓலங்கள் கேட்டுக் கொண்டிருந்தன. பலர் தப்பி ஓடினார்கள். அவர்களும் துரத்திச் சென்று வெட்டிச் சாய்க்கப்பட்டனர்.

புலிகளிடம் துப்பாக்கிகளும் இருந்தன. ஆனால் ஒரு வேட்டுக்கூட தீர்க்கப்படவில்லை. துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டால், அருகிலுள்ள இராணுவ முகாம்களுக்கு கேட்டுவிடும் என்பதாலேயே கத்திகள், வாட்கள் போன்ற ஆயுதங்கள் மட்டுமே பயன்படுத்தப்பட்டன.

தாக்குதல் நடந்து கொண்டிருந்தபோது 31ம் கொலனியைச் சுற்றி புலிகளது அணியொன்று ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தது.

இராணுவத்தினர் தற்செயலாக வந்தால் தாக்குதல் நடத்தி தடுத்து நிறுத்துவதற்காகவே அந்த அணி நிறுத்தப்பட்டிருந்தது.

உடனடியாகவும் பின்னர் மருத்துவமனையில் பலியானவர்களுமாக மொத்தம் 59 பேர் பலியாகியுள்ளனர். அவர்களில் 18 பேர் பெண்கள். இவர்களில் இருவர் கர்ப்பிணிகள். 08 சிறுவர்களும் கொல்லப்பட்டுள்ளனர்.

அன்று இரவு மஹா ஓயாப் பகுதியில் பெரிய புல்லுமலைக்கு சமீபமாகவுள்ள பொறபொல கிராமத்திலும் தாக்குதல் ஒன்று தொடுக்கப்பட்டது.

இச் சம்பவத்தில் மூன்று ஊர்காவல் படையினரும், ஒரு சிறுவனும் பலியானார்கள்.

இத் தாக்குதல் தொடர்பாக தமிழீழ விடுதலைப்புலிகள் எவ்வித கருத்தையும் வெளியிடவில்லை. உரிமை கோரவும் இல்லை. செய்தியாக மட்டுமே தமது வானொலியில் வெளியிட்டனர்.

'வன்னியில் 22 தமிழர்கள் கொல்லப்பட்டதற்கும், 43 பேர் காயமடைந்ததுக்கும் பதிலடியாக புலிகள் இதனை நடத்தியதாக சிறீலங்கா அரசு கூறுகிறது!' என்று புலிகளின் செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

## சுற்றிவளைப்பும் தாக்குதலும்

அம்பாறை 31ம் கொலனியில் புலிகள் தாக்குதல் நடத்திய பின்னர், அம்பாறையில் உள்ள தமிழ்க் கிராமங்கள் சில படையினரால் சோதனைக்கு உள்ளாகின.

19.09.99 அன்று வீரச்சோலை என்னும் கிராமம் விசேஷ அதிரடிப்படையினரால் சுற்றிவளைக்கப்பட்டது.

அதிரடிப்படையினரது தேடுதலுக்கு உதவியாக ஈ.பி.ஆர்.எல்.எஃப். உறுப்பினர் தியாகு என்பவரும் வந்திருந்ததாகவும், அவர்தான் பொதுமக்களைத் தாக்குவதில் முன்னணியில் நின்றதாகவும் கிராம மக்கள் புகார் கூறியுள்ளனர்.

தியாகு என்பவர் ஈ.பி.ஆர்.எல்.எஃப். குழுவினரின் காரைதீவு முகாமில் தற்போதும் இருந்து வருகிறார்.

தாம் படையினரோடு இணைந்து செயற்படுவதில்லை என்று ஈ.பி.ஆர்.எல்.எஃப். குழுவினர் கூறிவருவது குறிப்பிடத்தக்கது.

## வினாத்தாள் வீட்டுக்குச் சென்ற விவகாரம்!

## பரீட்சை மேலதிகாரிக்கு எதிராக வழக்கு!

பரீட்சை நடைபெறுவதற்கு முன்னரே பரீட்சை வினாத்தாள்களை பரீட்சை மேலதிகாரியொருவர் தனது வீட்டிற்கு எடுத்துச் சென்ற விவகாரம் மட்டக்களப்பில் நடந்துள்ளது.

இதுபற்றித் தெரிய வருவதாவது: இவ்வருட ஆஸ்கட் மாதம் நடைபெற்ற க.பொ.த. (உ.த) பரீட்சை வினாத்தாள்கள் பரீட்சை விதிகளுக்கு முரணான விதத்தில் பிரதம பரீட்சை மேற்பார்வையாளர் ஒருவரால் அவரது வீட்டிற்கு எடுத்துச் செல்லப்பட்டிருக்கிறது.

கல்லடியிலுள்ள உயர்தரப் பெண்கள் பாடசாலையின் அதிபர் மட்டக்களப்பு வின்சன்ற் மகளிர் கல்லூரியில் பிரதம பரீட்சை மேற்பார்வையாளராகக் கடமையாற்றினார்.

கடந்த 18.08.99 அன்று காலை 10.45 அளவில் மேற்படி பரீட்சை மேற்பார்வையாளரின் நம்பிக்கைக்குப் பாத்திரமான சிற்றூழியர் எஸ்.மகாதேவன் என்பவர், முன்னரே வெளியாகாத பரீட்சை வினாத்தாள்களையும் விடையெழுதும் தாள்களையும் எடுத்து வந்த காரணத்திற்காக சோதனைச் சாவடியில் இருந்த படையினரால் கைது செய்யப்பட்டார்.

தொடர்ந்து மேற்கொண்ட விசாரணைகளில் இருந்து, பரீட்சை வினாத்தாள்களும், விடையெழுதும் தாள் கட்டுகளும் பரீட்சைப் பிரதம மேற்பார்வையாளரான தனது மேலதிகாரியின் கட்டளைக்கு அமைவாகவே அவரது வீட்டிலிருந்து எடுத்து வருவதாகத் தெரிவித்திருந்தார்.

சிற்றூழியரின் வாக்கு மூலத்தையடுத்து பிரதம பரீட்சை மேற்பார்வையாளர் கைது செய்யப்பட்டு மாவட்ட நீதிபதியின் வாசஸ்தலத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு, பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

தனது பிள்ளைகள் யாரும் இம்முறை மேற்படி க.பொ.த. (உ.த) பரீட்சைக்குத் தோற்றவில்லை என்றும் அவர் வாக்கு மூலம் அளித்துள்ளாராம்.

ஆனால் அவரது மூத்த புதல்வியான த.மனோஜினி என்பவர் இதே பரீட்சைக்காக மட்டக்களப்பு புனித மைக்கேல் கல்லூரியில் பரீட்சை எழுதியுள்ளார் (சுட்டெண் 9779946).

## மறைந்திருந்து தாக்குதல்—கண்ணிவெடிகள் மீட்பு

மட்டக்களப்பு-சித்தாண்டியில் இரவு நேர காவலில் ஈடுபட்ட படையினர் புலி இயக்கத்தின்ரைக் கண்டு தாக்கியதில் ஒரு புலி கொல்லப்பட்டார். சர்வதேச செஞ்சிலுவை சங்கம் ஊடாக சடலத்தைப் புலிகளிடம் ஒப்படைக்க ஏற்பாடாகியுள்ளது.

மறுநாள் செல்லும் இராணுவ வாகனத் தொடரணிக்கான வீதிப்பாதுகாப்புக்காக முதல் நாள் இரவே படையினர் இப்பகுதியில் பதுங்கியிருப்பது வழக்கமாகும்.

அது போலவே 18.09.99 அன்று மாலைக்குச் சற்றுப் பிந்தி வேறு வழியால் வந்து பதுங்கிக் கொண்டனர். வழக்கமாக இரவு 10 மணி அளவிலேயே படையினர் அவ்வாறு நடவடிக்கைக்கு வருவதுண்டு. ஆனால் அன்றைய தினம் நேர காலத்துடன் வந்து பதுங்கிக் கொண்டனர்.

இதனை அறிந்திராத புலிகள் ஏழுபேர் மறுநாள் செல்லவிருக்கும் இராணுவ வாகனத்தொடரணியைக் குறிவைத்து கிளைமோர் கண்ணிவெடிகளைப் பொருத்தும் முயற்சியில் ஈடுபட்டிருந்தனர். அவர்களது நடமாட்டத்தை அவதானித்த படையினர் தாக்குதல் தொடுத்தனர்.

சம்பவத்தில் ஒரு புலி கொல்லப்பட்டார். அந்த இடத்தில் 2 கிளைமோர் கண்ணிவெடிகள், 2 கிரனேற்றுக்கள், 75 யார் வயர் என்பன மீட்கப்பட்டன.

கண்ணி வெடிகளைப் பொருத்துவதற்காக வந்த ஏனைய 6 புலிகளும் காயங்கள் எதுவுமின்றித் தப்பிச் சென்றுவிட்டனர்.

## கிழக்கில் கடும் வரட்சி

## குடி நீருக்குப் பஞ்சம்!

கடந்த வருடங்களைவிட கிழக்கில் இம்முறை கடும் வரட்சி நிலை நீடித்துள்ளதால் கிணறுகள், ஆறுகள், வாவிகள், நீர் நிலைகள் என்பன வற்றிவரண்டு விட்டன.

மேட்டு நிலக்கிணறுகள் அனைத்தும் வற்றிவிட்டதால் அப்பகுதிகளில் குடிநீருக்கும் பஞ்சம் ஏற்பட்டுள்ளது. கிராமவாசிகள் தண்ணீருக்காக அலைகிறார்கள். மட்டக்களப்பின் பல இடங்களில் குடிநீர் அதிக விலைக்கு விற்கப்படுகிறது.

விவசாயச் செய்கை முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது. மரக்கறிகளுக்கு விலை அதிகரித்துள்ளது. விவசாயிகள் பெரும் கஷ்டத்தை எதிர் நோக்கியுள்ளார்கள். கால் நடைகள் நீருக்காகவும் தீவனத்திற்காகவும் அலைகின்றன. நீண்ட கால பயன் தரும் மரங்களும் கருகி இறந்துள்ளன.

தகிக்கும் உஷ்ணத்தினால் பகல் வேளையில் காலை 10 மணிக்குப் பின்னரும் மாலை 4 மணிக்கு முன்னரும் வெளியில் நடமாட முடியாத நிலை தோன்றியுள்ளது.

மட்டக்களப்பு, திருக்கோணமலை, அம்பாறை மாவட்டங்களில் கடந்த பல மாதங்களாகக் கடும் வரட்சி நிலவுகிறது. திருமலையில் 39.6 பாகை செல்ஸியசை வெப்பநிலை தாண்டிவிட்டது. இதனால் தோல் நோய்களும், தொண்டை நோ போன்ற உஷ்ணத்தினால் ஏற்படும் வேறு பல நோய்களும் பரவியுள்ளன.

வறள்வலயத் தாவரங்களான கள்ளிச் செடிகளும் வரட்சி தாங்காது கருகிப் போயுள்ளன.

## உலர் உணவு நிறுத்தம்

எங்கள் பகுதியில் அரசால் வழங்கப்பட்டு வந்த உலர் உணவுக் கூப்பனை அதிகமான மக்களுக்கு எமது பகுதி அரச அதிபர் இடை நிறுத்தம் செய்துள்ளார்.

எமது பகுதியில் இடம் பெயர்ந்து வந்த தமிழ்- முஸ்லிம் மக்கள் உறவினர், வாடகை வீடுகளில் 1990 முதல் வசித்து வருகின்றனர். சென்ற மாதத்தில் வழங்கப்பட்ட கூப்பன் அதிகமான மக்களுக்கு வழங்கப்படவில்லை!?

காரணம் வினவப்பட்டபோது "சொந்த வீடு எடுத்து இருக்கிறீர்கள் வருமானம்கூட இருக்கிறது அதனால் உங்களுக்கு நிவாரணம் தேவையில்லை," என்று கூறப்பட்டது.

ஆனால் 1983ம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை பெரும்பான்மை இன மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

"எங்களுக்கு மட்டும் ஏன் இந்த பார பட்சம்?

ஏ.எம். சதாம், பலகத் துறை, நீர்கொழும்பு.

## முதல் தடவையாக பஸ் சேவைகள்!

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு நகரத்திற்குத் தென்பகுதியில் அமைந்துள்ள தாந்தாமலைக்கு விரைவில் மட்டக்களப்பு நகரத்திலிருந்து பஸ் சேவை நடாத்தப்படவுள்ளது. சரித்திரத்தில் தாந்தாமலைக்கு நாளாந்தம் பஸ் சேவை நடாத்தப்படுவது இதுவே முதல் முறையாகும்.

இந்த பஸ் சேவை அப்பகுதியில் நடாத்தப்படுவதால் சுமார் 1000க்கு மேற்பட்ட குடும்பங்களின் போக்குவரத்துச் சிரமங்கள் நீங்கும்.

மட்டக்களப்பிலிருந்து ஆரம்பித்து களுவாஞ்சிக்குடி, போரதீவு, பழுகாமம், திக்கோடை, 39ஆம் குடியேற்றக் கிராமம் வழியாக இந்த பஸ் சேவை தாந்தாமலையைச் சென்றடையும்.

அந்தப் பகுதி மக்கள் தாம் நீண்ட காலமாக அனுபவித்து வரும் போக்குவரத்துச் சிரமங்களை நீக்குமாறு விடுத்த வேண்டுகோளை ஏற்றே தாம் இந்த பஸ் சேவை ஆரம்பிக்கவிருப்பதாக கிழக்கு புதிய பஸ் நிறுவனத்தின் அதிகாரி எஸ்.சந்திரசேகரம் தெரிவித்தார்.

கிழக்கில் பிரசித்தி பெற்ற முருகன் ஆலயம் தாந்தாமலையில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

இதே வேளை மட்டக்களப்பிலிருந்து மாலையில் புறப்பட்டு திருமலையை இரவில் சென்றடையக் கூடியதான பஸ் சேவை ஒன்றும் மக்களின் வேண்டுகோளுக்கிணங்க விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக மட்டக்களப்பு பஸ் டிப்போவின் செயலாற்றுப்பகுதி ஆலோசகர் எஸ். சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

சுமுக நிலை ஏற்பட்ட பின்னர் பகல் வேளைப் போக்குவரத்து ஏற்பட்டது. அதே வேளை மட்டக்களப்பு- திருமலைக்கு மாலை நேர பஸ் சேவை இடம் பெறப்போவது இதுவே முதற் தடவையாகும்.

## கட்டணத்தில் குளறுபடி

### பாவனையாளர் அதிர்ச்சி

(திருமலை நிருபர்)

திருக்கோணமலை தொலைபேசி பாவனையாளர்களில் ஜூலை மாதக் கட்டணப்பட்டியல் தாறுமாறான தொகை அதிகரிப்புடன் காணப்படுவதாக பெருந்தொகையானோர் ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்திடம் புகார் செய்துள்ளனர்.

சாதாரணமாக அறவிடப்படும் தொகையைப் போல் இரண்டு அல்லது மூன்று மடங்காக இத்தொகை எவ்வித காரணமும் இன்றி அதிகமாகக் காணப்படுவதாக இவர்கள் முறையிட்டுள்ளனர். பல நூற்றுக்கணக்கானோர் இவ்வாறு முறையிட்டதன் பிரகாரம் முறைப்பாட்டாளர்களில் கட்டணப்பட்டியலை மீளாய்வு செய்ய மேற்படி நிறுவனம் ஒத்துக் கொண்டுள்ளது.

தொலைபேசி மீட்டர் ரெலிகொம் நிறுவனத்திலேயே இருப்பதால், இந்த மீளாய்வு எத்தனைத் தூரம் நம்பகரமானது என்ற கேள்வியும் தொலைபேசிப் பாவனையாளர் மத்தியில் காணப்படுகிறது. "அவர்கள் சரியாக மீளாய்வு செய்கிறார்களா இல்லையா என்பதைக்கூட எங்களால் தீர்மானிக்க முடியாதுள்ளது." என்கிறார் ஒரு பாவனையாளர்.

'நீர், மின்சாரம் என்பவற்றுக்கான மீட்டர் அவரவர் வீட்டிலேயே பொருத்தப் படுவதைப் போல் தொலைபேசி மீட்டரையும் பொருத்த நடவடிக்கை எடுத்தால் எங்கள் தொலைபேசிப் பயன்பாட்டை நாமே அளவிட்டுக் கொள்ளலாம் அல்லவா?' என்று இன்னொருவர் தெரிவித்தார்.

மனிதர்கள் பிழை விடலாம். கணனிகள் பிழை விடலாமா?




### மலையாள மாந்திரிகம்



மலையாள மாந்திரிகத்தை இலங்கையில் திட்டவட்டமாக கற்றவர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கே இடம். நிச்சயமாக ஒருவரை விரும்பினால் திருமணம் செய்வதென்று முடிவெடுத்தால் பரிபூரண உதவி செய்வார். காதலர்களை சேர்த்து வைப்பது, பிரிந்த காதலை ஒன்று சேர்ப்பது, பிரிந்தவரை அழைத்து எடுப்பது, திருமண தோஷத்திற்கு சாந்தி பரிகாரம் செய்வது, பிறந்த திகதி, மாதத்தை வைத்து வாடிக்கையாளரை கண்ட மாத்திரத்தில் இதுதான் இவர்களின் பிரச்சனை என்று கூறுவதுடன் கணவன் மனைவி பிரச்சனை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டுப் பிரயாண தடைநீங்க, இன்னும் மாந்திரிக வேலைகளுக்கும் ஜாதக வேலைகளுக்கும் வெளிநாட்டிலும் உள் நாட்டிலும் 33 வருட உண்மை சேவை புரிவதாலும் வாடிக்கையாளர் மனதை கோணாது செயல்படுவதாலேயும் இன் நிறுவனம் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கடல் கடந்து செயல்படக்கூடிய எத்தனை எத்தனையோ வசிய யந்திரங்கள் உண்டு.

தேவையான வெளிநாட்டவர்கள் உங்கள் ஆடர்களை இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையே தொலைபேசி அல்லது பெக்ஸ் ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

**தேவைகளுக்கு உலக மாந்திரிக சக்கரவர்த்தி**

**Dr.P.K. SAAMI J.D.G.A.N&JP**

**SRI DURGAADEVI MANTHIRIKA UCHCHADA PEEDAM**

**NO. 162, KOTAHENA STREET, MAY FIELD ROAD, COLOMBO-13.**

நுவரெலியாவிலும் வழமையான சேவைகள் நடைபெறுகின்றன.

வெளிநாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி

**Fax-00941342464.**

**Tel-00941431137.**

உள்நாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்

**342463-344831**



### வெளிநாட்டு, உள்நாட்டு வேலைவாய்ப்பு தேடிவரும் பயிற்சி

**A Training To Repair The Fridge And A/C**

குளிர்சாதனங்களைத் திருத்துவதற்கான பயிற்சி

வீட்டில் இருந்தவாறே உங்கள் முயற்சிகளுக்கு எதுவித தடையுமின்றி தபால் மூலம் படித்து மூன்றே மாதங்களில் நீங்களும் குளிர்சாதனப்பெட்டி திருத்தக்கூடியவராகலாம். மேலும் ஒரு மாதத்தில் A/C திருத்தவும் முடியும். மாதம் ஒரு செயல்முறை வகுப்பு உங்களுக்கு வசதியான இடத்தில் நடாத்த ஒழுங்கு செய்யப்படும்.

பயிற்சி முடிந்தவர்களுக்கு சர்வதேச தரமுடைய டிப்ளோமா சான்றிதழ் வழங்கப்படுவதுடன் வெளிநாட்டு, உள்நாட்டு வேலைவாய்ப்புகளுக்கும் ஒழுங்கு செய்யப்படும்.

விபரங்களுக்கு கீழே உள்ள விலாசத்திற்கு 3/50 முத்திரை ஒட்டிய, உங்கள் விலாசம் எழுதிய கடித உறை அனுப்பவும்.

**HALAL REFRIGERATION Est.**

97/1, Sri Sumangala Mw., Ratmalana.

T.P: 729174, 430313, Fax : 430313



### தபால் மூலம் விஞ்ஞானம்

G.C.E. (A/L) ~ இரசாயனவியல்

Year - 9, 10, 11 ~ விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்

Year - 5 ~ ஆரம்ப விஞ்ஞானம்

ஆசிரியர்: குமார் சிவப்பிரகாசம்

விபரங்களுக்கு சுயவிலாசமிட்ட தபாலுறையுடன் விண்ணப்பிக்கவும்

**P.T.C** 14, Covington Road, Batticaloa.



### மாபெரும் இசை நிகழ்ச்சி

உங்கள் தினமுரசின் அனுசரணையுடன்

அறிவிப்பாளர் சீதாராமன்–இக்பால், ஜெகனுடன் வழங்கும்

**சித்தாராவின் இசைமாலை**

பிரபல பாடகர்களுடன் உங்கள் அபிமான தொலைக்காட்சி, வானொலி அறிவிப்பாளர்கள் ஒரே மேடையில்

நீர்கொழும்பு இந்து இளைஞர் மண்டபத்தில் 26.09.1999

ஞாயிறு மாலை 3.30க்கும் / 6.30 க்கும்

இரண்டுகாட்சிகள் | டிக்கட் : 100/- 150/- 200

இணை அனுசரணை:~ பிரீமியர் டின்மீன்களை வழங்கும் ஞானம் இம்போட்ஸ்,

ஸ்டார் லைட் சலவைத்தூளை உற்பத்தி செய்து விநியோகிக்கும் ஸ்டார் இண்டஸ்ரீஸ்,

மீவோன் சுவையூட்டிகளை விநியோகிக்கும் பீகொம்பூட்ஸ் நிறுவனம்,

நீர்கொழும்பு கிரீன் வீதி புஷ்பா ஜுவலர்ஸ்.


## 60ம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 18 ☆ 02 ☆ 1932



உதிர்வு 15 ☆ 07 ☆ 1999

**வல்லிபுரம் உமாபதிசிவம் M.A.Dip-in Ed; Dip-in Hc.**

(வட்டுக்கோட்டை பிராந்திய தொலைக்கல்வி நிலைய ஒய்வுபெற்ற விரிவுரையாளர், ஒய்வு பெற்ற மதிய கல்லூரி ஆசிரியர்)

இவரது ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கும் மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


### மனோதத்துவ வைத்தியம்

பிரபல மனோதத்துவ நிபுணர் Dr. P. ஆறுமுகம் அவர்களை

**கொழும்பில் செப்டெம்பர் 20 முதல் 28 வரை சந்திக்கலாம்**

**Dr. P.Arumugam S.A.M.P. REG.9492**

**SRI SAWBAKIYA INN, 67/A, WOLFENDHAL ST. COLOMBO-13.**

(5 லாம்புச்சந்தியில் இருந்து 100 யார் தூரத்தில் உம்பிச்சி பிளேஸ் பள்ளி வாசலுக்கு முன்னால் உள்ளது) T.P:- 338165-338166, 338164, Fax:- 338161, செல்டெல் No. 072-609388

**கல்முனை ஒக்டோபர் 02,03ம் திகதிகளில் சந்திக்கலாம்**

T.M.M. பார்மசி–கல்முனை. T.P. 067-29329

**வவுனியாவில் ஒக்டோபர் 09, 10 ம் திகதிகளில் சந்திக்கலாம்**

(தயவு செய்து பதிவுசெய்து கொள்ளவும்)

(Vanni Inn) 2ம் குறுக்குத் தெரு, ஞான வைரவர் கோயில் ஒழுங்கை, வவுனியாவில் சந்திக்கலாம் T.P.024-22074,

கடிதத்தொடர்பு:- **Resident T.P. 065-24019**

**Dr. P.Arumugam S.A.M.P.**

No. 51/5, Koolavady Road, Batticaloa . SRI LANKA.



என்றும் முதல் தரம் 'சன்வே' கிரா..பிக்ஸ்

**SUNWAY GRAPHICS**

Photographer, Videographer, Wedding Album Makers, Laminating and Duragard

Contact:

**K.S. JAYAKODI (MANI)**

25/1A, Sagara Road, Bambalapitiya. Colombo-04.

Tel: 597879 Hot Line: 0722-72119.


## உதவி கோருகிறார்



**கே. பத்மநாதன் ஆச்சாரி**

காலத்தையை பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட எனது கணவர் பத்மநாதன் ஆச்சாரி என்பவர் தனது இரண்டு சிறுநீரகங்களும் பழுதடைந்த நிலையில் உயிருக்கு போராடிக்கொண்டு இருக்கிறார். அவரின் உயிரைக் காப்பாற்ற சிறுநீரக சத்திர சிகிச்சை செய்யவேண்டும் என்று டாக்டர்கள் கூறிவிட்டார்கள். ஆகவே இந்த சத்திர சிகிச்சையை டாக்டர் றிஸ்வி சரீப் செய்கிறார். இந்த சத்திர சிகிச்சைக்காகவும் தொடர்ந்து ஒரு வருடத்திற்கான சிகிச்சைக்கும் வாழ்நாள் முழுவதும் மாத்திரை மருந்துகளுக்காக போதிய நிதியைத் தேடிக்கொள்வதில் மூன்று குழந்தைகளுக்கு தாயான நானும் எனது கணவரும் பெரும் சிரமத்தை எதிர்நோக்கி நிற்கிறோம். எனவே நாங்கள் இவரது சத்திர சிகிச்சைக்காக பரோபகாரமான மன முடையோரிடமிருந்து உதவிநிதி கோரி நிற்கிறோம். இவரது சத்திர சிகிச்சைக்கு உதவிநிதி வழங்கவிரும்புவோர். செட்டியார் தெரு அட்டன் நஷனல் வங்கி 0210474018 என்ற வங்கி கணக்கிற்கு அனுப்பி வைக்குமாறு பணிவன்புடன் கோருகிறோம்.


### ஹோமியோபதி

தமிழ்நாட்டின் பிரபல ஹோமியோபதி சிகிச்சை நிபுணர்

**Dr. R. தியாகராஜன் D.H.M.S. AMRSH (Lond)**

நீரிழிவு, ஆஸ்துமா, ஆண்மைக் குறைவு போன்ற நாட்பட்ட வியாதிகளுக்கு சிறப்பான சிகிச்சை அளிக்கிறார்.

**ஹோட்டல் கிறீன்லண்ட்ஸ்.** தொ.பே: 585592 - 581986

**22.09.1999 -27.09.1999**

இந்தியத் தொ.பே: 0091-431-432946, 0091-[illegible]1-432046

வெளிநாடுகளில் இருப்பவர்களுக்கும் சிகிச்சை அளிக்கப்படும்.


## 4ம் ஆண்டு நினைவலைகள்

பிறப்பு 24 ✣ 09 ✣ 1981



இறப்பு 22 ✣ 09 ✣ 1995

### செல்வி அல்போன்ஸ் அமலவிஜி

**நாகர்கோவில் மகாவித்தியாலய 9ம் ஆண்டு மாணவி.**

நான்கு வருடங்கள் மறைந்தாலும் புன்னகை ஓயாத உன் முகமும் மைபூசாத அழகிய கண்விழிகளும் எங்கள் நெஞ்சைவிட்டு ஒரு நொடியேனும் மறைய வில்லையம்மா.

எம்மோடு நீடூழி காலம் வாழாத குறை தீர்க்க வாழ்நாளெல்லாம் எம்மோடு உறவாடி அருகில் இருந்தும், அன்புமொழி பேசியும் அகமகிழ்வுடனே மகிழ்வித்தாய் எம்மையே. பள்ளிக்கு சென்ற நீ! பாடங்கற்று வருவாய் என்றிருந்தோம். வந்ததுவோ உன் மரணச் செய்தி. ஆனாலும் மறக்கவில்லை உனது அழகு முகம். பிறந்தநாளை நினைத்திருந்த அமலவிஜியே உன் இறப்பு நாளை நினைவு கூருகின்றோம்.

உனது பிரிவால் துயருறும், அப்பா அல்போன்ஸ், அம்மா சிசிலியா, அக்காமார் ராஜி, றொஜி, யசி, அண்ணா ராஜன், அத்தான்மார் அசோக், தவம், கேதீஸ், தொட்டப்பா ஸ்ரீபன், றெஜினா, அப்பம்மா மரியநாயகி அம்மையா செல்வநாயகம், சித்தப்பாமார் டேவிற், துரமணி, அன்ரன் றஞ்சன், மாமிமார் றூபி, இன்பம், றோஸ், வினோ, பெரியம்மா, சூரியமலர், அக்காமார், சூரியகலா, சந்திரகலா, இந்திரகலா, அண்ணன் நிர்மலதாஸ், பங்குத்தந்தை ஏ.ஜே. யாவிஸ், உற்றார் உறவினர் நண்பர்கள்.

*தகவல்: ம. அல்போன்ஸ்,*

*328/9C. அழுத்மாவத்தை, கொழும்பு-15.*

*074-614363*

## 90ம் நாள் கண்ணீர் அஞ்சலி

**21.09.1999**

பூவலகில் பூத்தது 14 * 01 * 1995



பூஜைக்காக பூத்தது 21 * 06 * 1999


### செல்வி நாகராஜ் நவீனா

நவீனா உன் நளினமான சிரிப்பை-அன்று
நாம் சேர்ந்து இரசித்தோம்; சுவைத்தோம்- இன்று
நாடுவிட்டு நாடு சென்று- செல்லமே
நீ இறைவனடி சென்று விட்டாய்- செல்வமே
நீ போட்ட அன்புப் பாலம்-எம்
நெஞ்சங்களில் என்றும் போடும் கண்ணீர்க் கோலம்.

உன் பிரிவால் வாடும்
அப்பா, அம்மா,
அன்புத் தங்கை,
உற்றார்,
உறவினர்,
நண்பர்கள்.


### Timint Cream (Herbel) டைமின்ட் கிரீம்

விந்தின் சக்தியின்மை, வீரியமின்மையை போக்கி தாம்பத்ய வாழ்க்கையில் நீண்ட நேர இன்பத்தை கொடுக்கும். நீண்ட நேர தாம்பத்ய சுகம் புத்துணர்ச்சி, இன்பத்தை ஏற்படுத்தும்.



**SUPER X 50 சுப்பர் X 50**

வீரியமின்மை, விந்தின் சக்தி குறைவினால் ஏற்படும் பலவீனம், நரம்புத் தளர்ச்சியை போக்கி புத்துணர்ச்சியையும், விந்தின் சக்தியை அதிகரிக்கவும் உதவுகிறது. இல்லற வாழ்வில் தெவிட்டாத இன்பத்தையும் நீண்ட நேர சுகத்தையும் கொடுக்கின்றது. 100% இயற்கை தாவரச் சாறுகளினால் தயாரிக்கப் பட்டுள்ளது. வயது முதிர்வினால் ஏற்படும் பலவீனத்தை போக்கி நீண்ட நேர இன்பத்தை தரவல்லது.

**விநியோகிப்போர்:**

யூனியன் கெமிஸ்ரி, யூனியன் பிளேஸ், மெக்ஸ் பாமஸி (கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்) நியூ லீ மெடிக்கல், தலதா வீதி, கண்டி, சிங்ககிரி பாமஸி, பண்டாரவளை, ஆருணா பாமஸி, மாத்தறை, தங்கல்ல, குருநாகல் மெடிக்கல் குருநாகல், சுஹத பாமஸி சிலாபம், நியூ கண்டி மெடிக்கல் கேகாலை, விஜய நிட்டம்புவ, றோயல் கந்தானை, சமீரா சாரங்க பாமஸி மஹரகம, எஸ்.எம்.எஸ். ட்ரக்ஸ் நீர்கொழும்பு, பேராதெனிய மெடிக்கல் பேராதெனிய, சாலுகா பாமஸி ஆமர் வீதி, லங்கா மெடிக்கல், மெயின் வீதி இரத்தினபுரி, பம்பலப்பிட்டி பாமஸி (விஜய கொம்பிளெக்ஸ்) பம்பலப்பிட்டி, சிடி பாமஸி, மலபார் வீதி, கம்பளை.

R.No: 183272

# திருப்பங்களும் பதிலடிகளும்!

வன்னியில் ரணகோஷ 05 தோல்வியில் முடிந்ததையடுத்து, 15.09.99 அன்று புதுக்குடியிருப்புக்கு குண்டு வீச்சு விமானங்கள் பறந்து போயின.

புலிகளின் இலக்குகள் என்று அவை போட்ட குண்டுகளில் 22 தமிழர்கள் உடல் சிதறி, சதைத் துண்டங்களாகக் கிடந்தனர். அவர்களில் குழந்தைகள், பெண்களும் அடங்குவர்.

முல்லைத்தீவு புலிகளது தளமாக மாறிய பின்னர் புதுக்குடியிருப்பே பிரதான நகராக இருக்கிறது. புலிகளது அலுவலகங்கள் உட்பட, அரச அலுவலகங்கள், தொண்டர் நிறுவன அலுவலகங்கள் போன்ற பலவும் அங்குதான் உள்ளன.

12.09.99 அன்று ரணகோஷ 05 இல் ஏற்பட்ட பின்னடைவை ஜீரணிக்க முடியாத நிலையில்தான், புலிகளது தளப் பிரதேசத்தின் பிரதான நகர்மீது தாக்குதல் நடத்தப்பட்டது என்பது அப்பட்டமான உண்மை.

இதுபற்றி நோக்குவதற்கு முன்னர் ரணகோஷ 05 இன் பின்னர் தோன்றியுள்ள ஆச்சரியங்கள், ஊகங்களை பார்த்துவிடலாம்.

ரணகோஷ 05 இன் பின்னடைவு அரச மட்டத்திலும் அதிர்ச்சிகளை ஏற்படுத்திமிருக்கிறது. இவ்வாறான பெரும் இழப்பை அரச தரப்பு எதிர்பார்க்கவில்லை.

அமெரிக்காவில் விசேஷ பயிற்சி பெற்று திரும்பிய மேஜர் ஜெனரல் வசந்தபெரேரா வன்னி நடவடிக்கைக்கு பொறுப்பேற்றார். அவர் பொறுப் பேற்ற இரண்டு வாரங்களுக்குள் ரணகோஷ 05 முன்னெடுக்கப்பட்டது.

மும்முனைகளில் முன்னேறி புலிகளது பலத்தை பரவலாக்கிவிட்டு, சிராட்டிக்குளத்தின் ஊடாக நகர்ந்து பெரியமடு பள்ளமடு பாதையைக் கைப்பற்றுவதே ரணகோஷ 05 இன் பிரதான இலக்காகும்.

ஒரு சமரில் எதிரியின் தந்திரோபாயத்தை ஊகித்து வியூகம் வகுப்பதும், பதில் நடவடிக்கை எடுப்பதுவுமே மறுதரப்பின் வெற்றிக்கு வழி கோலும்.

படையினரின் மும்முனை நகர்வில் பிரதான நகர்வு எது என்பதை புலிகள் கணித்து அதற்கேற்பவே சண்டையிட்டனர்.

அதன் காரணமாகவே படையினரால் நினைத்த இலக்கை எட்டமுடியாமல் பின்னடைய வேண்டியிருந்தது.

புலிகளது துரிதமான பதிலடி நகர்வுகள், கணிப்புக்களைக் கண்டு படைத்தரப்பு மட்டுமல்ல பொது இராணுவ விமர்சகர்களே வியந்து நிற்கிறார்கள்.

இந்த வியப்பை தணிக்கவும், பின்னடைவை நியாயப்படுத்தவும் புலிகள் பல குழல் பீரங்கிகளாலும், ஆட்டிலெறிகளாலும் சரமாரியாகத் தாக்கியதாக செய்திகள் வெளியாகி உள்ளன.

ஆங்கில பத்திரிகை ஒன்றில் பல குழல் பீரங்கிகள், ஆட்டிலெறிகள் என்பவற்றால் புலிகள் தாக்கியதால்தான் பலத்த இழப்பு ஏற்பட்டதாக கூறப்பட்டுள்ளது.

உண்மை என்ன தெரியுமா? ரணகோஷ 05ஐ முறியடிப்புச் சமரில் ஆட்டிலெறிகளை புலிகள் பயன்படுத்தவே இல்லை. பல குழல் பீரங்கி என்று கூறப்படுவதையும் பயன்படுத்தவில்லை.

சண்டை நடைபெற்ற புவியியல் சூழ்நிலை, சண்டை நடைபெற்ற விதம் என்பவற்றை அறியாமல் புலிகளிடம் இருப்பதாக கருதப்படும் ஆயுதங் கள் எல்லாமே பயன்படுத்தப்பட்டதாக செய்தி போட்டுவிடுகிறார்கள்.

ரணகோஷ 05 நகர்வின் முக்கியமான சண்டை நடந்த களம் சிராட்டிக்குளம்.

அடர்ந்த காட்டுப் பகுதி சார்ந்ததே சிராட்டிக்குளப் பிரதேசம். காட்டுப்பகுதி ஊடாக முன்னேறும் படையினரை குறிவைத்து ஆட்டிலெறியால் தாக்கமுடியாது.

ஏனெனில் ஆட்டிலெறிகள் புலிகளது பிரதான தளத்திலேயே உள்ளன. அங்கிருந்து ஒரு குத்துமதிப்பாக ஷெல்களை ஏவினால், முன்னேறும் படையினருக்கு அருகருகே நின்று சண்டையிடும் புலியணிகள் மத்தியிலும் விழுந்து வெடித்து விடும்.

ரணகோஷ 05 நகர்வுக்கு உதவியாக விமானப்படை விமானங்கள் பறந்து திரிந்தன. அந்த நேரத்தில் ஆட்டிலெறியை உபயோகப்படுத்தினால், ஆட்டிலெறி நிலைகள் எங்குள்ளன என்பதை எறிகணைகள் எழுந்து பறந்து வரும் திசையை வைத்தே விமானங்கள் இனம் கண்டு குண்டுகளைப் பொழிந்துவிடும். ஆட்டிலெறிகளை துரிதமாக இடம் மாற்றுவது கடினம்.

அதுதவிர புலிகளிடம் மோட்டார்கள் பல ரகங்களில் தாராளமாக உள்ளதால் முன்னேறும் படையினரை தாக்குவதற்கு ஆட்டிலெறி தேவையே இல்லை.

உண்மையில் ஆட்டிலெறியின் பயன்பாடு என்பது நீண்டதூரத்தில் உள்ள இலக்குகளை தாக்குவதில்தான் இருக்கிறது.

உதாரணமாக முல்லைத்தீவில் இருந்தபடியே ஆனையிறவு முகாம்மீது மோட்டார்கள் மூலம் ஷெல் ஏவ முடியாது. அதற்கு ஆட்டிலெறிதான் பயன்படும். ஆனால் புலியணிகள் களத்தில் முன்னேறி உட்புகுந்துவிட்டால் பின்னர் ஆட்டிலெறி பயன்படாது. மோட்டார்கள்தான் பயன்படும்.

ஆட்டிலெறி என்றால் ஏதோ சித்து வேலைகளை செய்யும் ஆயுதமல்ல. நீண்டதூரம் எறிகணை ஏவக்கூடியதுதான் அதன் விசேஷ தகுதி. மற்றப்படி ஆட்டிலெறி போலவே பலத்த சேதங்களை ஏற்படுத்தக்கூடிய மோட்டார்கள் உள்ளன. இவற்றுக்கான எறிகணைகள் ஆட்டிலெறி எறிகணைகளைவிட விலையும் குறைந்தவை. உள்ளூரிலும் தயாரிக்கலாம். எனவே தாராளமாகப் பயன்படுத்தலாம்.

புலிகளது பீரங்கிப் படையணி மோட்டார்களை இலாவகமாக கையாள்கிறது. அந்த அணியின் உத்திகள் பல குழல் பீரங்கிகளால் தாக்குவது போன்ற பிரமையை ஏற்படுத்துகின்றன. உண்மையில் பல குழல் பீரங்கியை பயன்படுத்துவதாக இருந்தால் ஒரு மணி நேரத்துக்குள் கோடிக் கணக்கான ரூபாய்கள் பெறுமதியான எறிகணைகளை பாவிக்க வேண்டியிருக்கும். நிதிக்கு எங்கே போவது?

ஒரு அரசாங்கத்துக்குக் கூட பல குழல் பீரங்கியை பயன்படுத்தினால் கட்டுபடியாகாது. கார்க்கில் போர்முனையில் இந்தியா கூட பல குழல் பீரங்கிகள் இருந்தும் பயன்படுத்தாதது அதனால்தான்.

படையினரின் நகர்வுகளுக்கு எல்லாம் புலிகள் ஆட்டிலெறிகள், பல குழல் பீரங்கிகள் போன்றவற்றை பயன்படுத்தினால் ஒரு மாதத்தில் கஜானா காலியாகிவிடும்.

பல படைமுகாம்கள் வன்னியில் இருந்தும் புலிகள் ஆட்டிலெறிகளை சிக்கனமாக பயன்படுத்துவதும் அதனால்தான். பயன் உண்டு என்று நன்கு தெரிந்தால்தான் ஆட்டிலெறியால் தாக்குவார்கள். கண்டபடி பயன்படுத்த முடியுமானால் அடிக்கடி ஆனையிறவு, வவுனியா, தள்ளாடி, மணலாறு முகாம்கள்மீது புலிகள் எறிகணைகளை ஏவிக் கொண்டிருக்கலாம். அப்படிச் செய்தால் படையினருக்கு அச்சுறுத்தலாக இருக்கும்தான். ஆனால் தேவையான சமயத்தில் பயன்படுத்த கையிருப்பில் எறிகணைகள் இல்லாமல் போய்விடும்.

எனவே, புலிகளது கள வெற்றி என்பது, படைநகர்வின் நோக்கங்களை துல்லியமாகக் கணிப்பது, பிரதான முனையைக் கண்டறிவது, அதற்கேற்ப முறியடிப்புச் சமர் வியூகங்களை வகுப்பது என்பதில்தான் தங்கியுள்ளது.

இதனை ஒப்புக்கொள்வது புலிகளது திறனை விளம்பரப்படுத்துவதாக அமைந்துவிடும் என்பதால், ஆட்டிலெறிகளாலும், பல குழல் பீரங்கிகளாலுமே தாம் பின்னடைந்ததாக படைத்தரப்பும் கூறிவிடுகிறது.

ரணகோஷ 05 இல் பலியான படையினரில் பலர் துப்பாக்கிச் சூட்டிலேயே பலியாகியுள்ளனர். அதனால்தான் உடல்களை படையினர் மீட்க முடிந்தது. உடல்களைப் புலிகளும் ஒப்படைக்க முடிந்தது. ஆட்டிலெறி ஷெல் மழையில் மாட்டியிருந்தால் உடல்கள் சிதறிப் போய்விடும்.

சிராட்டிக்குளம் பகுதியில் படையினரை முன்னேற அனுமதித்துவிட்டே புலிகள் தாக்கியதாக கடந்தவாரம் கூறியிருந்தோம். அதனை பின்னர் வந்த பத்திரிகைச் செய்திகளில் படைத்தரப்பும் உறுதி செய்துள்ளது.

புலிகள் பதுங்கு குழிகளில் இருந்து தாக்கியதால் படையினருக்கு அதிக இழப்பு ஏற்பட்டிருக்கலாம் என்றும் ஒரு கருத்து உள்ளது. அது மிகத் தவறான கருத்து.

பதுங்கு குழிகள், காப்பரண்கள் என்பவை புலிகளது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் முன்னரங்க நிலைகளை ஒட்டியே அமைக்கப்பட்டிருக்கும். அவற்றுக்கு வெளியே அமைத்தால் அது படையினருக்கே வாய்பாகிவிடும். அவற்றைப் பிடித்து தமக்கு சாதகமாக்கிவிடுவர். அதனூடாக நகர்ந்தே புலிகளது முன்னரங்க நிலைவரை முன்னேறி விடுவர்.

சண்டை நடந்த பகுதி ஏற்கனவே படையினர் முன்னேறி முகாம் அமைத்து திரும்பிய பகுதியாகும்.

படையினரது முன்னரங்க நிலைகளுக்கும், புலிகளது முன்னரங்க நிலைகளுக்கும் அப்பால் உள்ள இடைப்பட்ட பகுதியில்தான் சண்டை நடந்துள்ளது. எனவே பதுங்கு குழிகளுக்குள் புலிகள் மறைந்திருந்து தாக்க வாய்ப்பிருக்கவில்லை.

ஒரே ஒரு வாய்ப்பு யாதெனில், படையினர் முன்னேறத் தொடங்கிய பின்னர், புலிகள் காட்டுப் பகுதிகளுக்குள் எங்கு மறைந்து நிற்கிறார்கள் என்பதை படையினரால் கண்டுகொள்ள முடியாது. புலிகளால் படையினரை காணமுடியும்.

இது தேடிச் செல்லும் படைக்கு உள்ள வழக்கமான பாதகம்தான். காட்டுப்புற சண்டைகளில் இதனால் ஏற்படும் இழப்பு வீதம் அதிகமாக இருக்கும்.

சுருக்கமாகச் சொல்வதானால் ரணகோஷ 05 பின்னடைவுக்கு காரணம் புலிகளது போர் அனுபவமும், நகர்வின் குறி அறிந்து வியூகம் வகுக்கும் வழி நடத்தலுமேயாகும்.

இதனை சரிவரப் புரிந்துகொள்ளாத சிங்கள, ஆங்கில விமர்சகர்கள் படையதிகாரிகள் மீது பழிபோடுகிறார்கள். அதிகாரிகளை மாற்றினால் வெற்றிபெறலாம் என்கிறார்கள். கப்பல் கப்பலாக புலிகளுக்கு ஆயுதம் வந்ததால்தான் இப்படி தாக்குகிறார்கள் என்கிறார்கள். போர்க்கள நிலவரம் அவர்களுக்கு நம்பமுடியாத ஆச்சரியமாக உள்ளது.

ஒரு பெரிய படையை சிறிய படை எதிர்த்து நிற்பது என்பது அதன் அடிப்படை



மட்டக்களப்பில் ராசிக் மீது தாக்குதல் நடத்திய கரும்புலி மேஜர் அரசப்பன் இவர்தான். ஜெயந்தன் படைப்பிரிவைச் சேர்ந்தவர். கரும்புலிகளுக்குரிய உடையணிந்து தனது உறவுக்கார சிறுவர்களிடமிருந்து விடைபெறும் காட்சியும் உள்ளது.

சூட்சுமத்தை அறியாதவர்களுக்கு ஆச்சரியமாகவே இருக்கும். எனவே மேலும் மேலும் புதிய ரக ஆயுதங்களது பெயர்களைக்கூறி அவற்றால்தான் சமரில் திருப்பங்கள் ஏற்படுவதாகக் கூறிக் கொண்டிருக்க வேண்டியதுதான்.

எந்தச் சமரிலும் ஆயுதங்கள் என்பவை இரண்டாம் பட்சம்தான். வழி நடத்தல், களக் கணிப்புக்கள், சமருக்கேற்ற உத்திகள், போரிடும் தரப்பின் மன உறுதி என்பவற்றுக்கு அடுத்த படியாகத்தான் ஆயுதங்கள் இடம்பெறுகின்றன.

ஆனால் தமது எதிர்பார்ப்புகள், கணிப்புக்கள், கோடி கோடியாக கொள்வனவு செய்த ஆயுதத்தளபாடங்களது வலிமைகள், அமெரிக்க பயிற்சிகள், ஆலோசனைகள் என்று சகலதுமே பின்னடைவைச் சந்திக்கும்போது படையினர் கோபமுறுகின்றனர். அரசாங்கமும் அதிர்ச்சியுறுகிறது. இதன் விளைவாக மூர்க்கமான முயற்சிகளில் இறங்குகின்றனர்.

அவ்வாறான முயற்சிகளில் ஒன்றுதான் புதுக்குடியிருப்பு மீதான விமானத் தாக்குதல். தரையால் நகர முடியாத கோபத்தை, வான் பரப்பால் புலிகளின் தளத்துக்குள் புகுந்து காண்பிக்க நினைத்திருக்கிறார்கள்.

கடைகள், சந்தைகள், வீடுகள் என்று பொதுமக்கள் கூடும் இடங்களில் குண்டுகள் வீழ்ந்திருக்கின்றன. இது அப்பட்டமான பழி வாங்கும் பதிலடி.

புலிகள் தாக்கினால் பொதுமக்களை தாக்கும் நிகழ்வுகள் இதுவரை தரையில்தான் நடந்தன.

இதற்கு முன்னரும் பல தடவைகள் குடியிருப்புக்கள, தேவாலயங்கள் போன்றவைமீது குண்டுத் தாக்குதல்கள் நடந்துள்ளன. ஆயினும் அவை பதிலடியாக நடைபெறவில்லை. அதாவது ஒரு இராணுவ நகர்வு பலத்த பின்னடைவை சந்தித்த பின்னர் அதற்கு பதிலடியாக பொது மக்கள்மீது விமானத்தாகுதல் நடைபெற்றிருப்பது இதுவே முதல் முறை.

இந்த நடவடிக்கையின் நெஞ்சை உலுக்கும் விளைவுகள் ஒரு புறமிருக்க, இதனை நியாயப்படுத்த கூறப்பட்ட விளக்கங்கள் வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல்தான் இருந்தன.

புலிகளைத் தாக்கினோம் என்று உறுதியாக அடித்துக் கூறினார் இராணுவப் பேச்சாளர். ஆனால் புதுக்குடியிருப்பில் சர்வதேச தொண்டர் நிறுவனங்கள் இருப்பதை அரசாங்கம் மறந்துபோனது.

உடனடியாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் பொதுமக்கள் பலியானதை உறுதி செய்தது. இதன் பின்பாவது, ஒரு சம்பிரதாயத்துக்கு என்றாலும், தவறு நடந்துள்ளதை அரசாங்கம் ஒப்புக்கொண்டிருக்கலாம். ஆனால் அகங்காரமான தொனியில்தான் விளக்கங்கள் கூறப்பட்டன.

"நேட்டோ நாடுகள்கூட இலக்குத் தவறி குண்டு போடுவதில்லையா?" என்று பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் கேள்வி எழுப்பினார். அத்தோடு நிறுத்தவில்லை, "தாக்குதலில் பொதுமக்கள் பலியாகி இருந்தால்கூட, யுத்த விபத்தாகவே இதனை எடுத்துக் கொள்ளுவோம்" என்று கூறியிருந்தார்.

இந்த அவலம் குறித்து ஒரு அனுதாப வார்த்தைகூட அரச தரப்பில் இருந்து வரவேயில்லை.

இதனையடுத்து புலிகள் ஒரு பழிக்குபழி தாக்குதலை அம்பாறையில் நடத்தியிருக்கின்றனர். இதற்கு புலிகள் உரிமை கோராது விட்டாலும், தாக்குதல் நடத்தியது புலிகள் தான் என்பது நூறுவீதம் உறுதியானது.

கல்லோயாக் குடியேற்ற திட்டத்தின் பகுதிகளில் ஒன்றான 31ம் கொலனியில்தான் புலிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

கல்லோயாக் குடியேற்றத்தின் பிரதான நகரம் அம்பாறை. அதனை அடுத்து உஹனை இருக்கிறது. உஹனை பொலிஸ் பிரிவுக்குள் இருப்பதுதான் 31ம் கொலனி. இதனை கொலனி என்று குறிப்பிட்டால் குடியேற்றம் என்று தெரிந்துவிடும் என்பதால் கோணாகலை என்றும், பூஞ்சிகிரியா என்றும் குடியேற்ற வாசிகள் பெயர் வைத்துள்ளனர்.

இக் கிராமம் வெல்லாவெளி தமிழ் பிரிவுக்குள் முன்னர் இருந்தது. கல்லோயாக் குடியேற்றத்திட்டத்தின் பின்னர் சிங்களவர்கள் குடியேற்றப்பட்டனர்.

கல்லோயா திட்டத்தின்கீழ் சில கொலனிகள் மட்டும் தமிழர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. சிங்கள குடியேற்ற வாசிகளால் அவர்களும் விரட்டியடிக்கப்பட்டுவிட்டனர்.

31ம் கொலனிக்கு அருகே இருந்த கெவுளியாமடு என்னும் தமிழ்க்கிராமத்தில் இருந்த தமிழர்கள் 31ம் கொலனி குடியேற்ற வாசிகளால் விரட்டியடிக்கப்பட்டுள்ளனர். இப்போது அவர்கள் அகதிகளாகியுள்ளனர்.

இது தொடர்பாக மட்டக்களப்பில் செப்டம்பர் 10ம் 11ம் திகதிகளில் நடைபெற்ற ஆளுநர் இடம்பெயர் சேவையின்போது அரச சார்பற்ற நிறுவனங்களது பொதுமன்றம் சுட்டிக்காட்டியிருந்தது. எனினும் ஆளுநர் கருத்தில் கொள்ளவில்லை.

குருநாகல் போன்ற பகுதிகளில் இருந்து கல்லோயாத் திட்டத்தின்கீழ குடியேற்றப்பட்ட சிங்கள மக்களே 31ம் கொலனியில் வாழ்ந்து வருகின்றனர்.

அம்பாறை 31ம் கொலனியை இலக்கு வைத்து புலிகள் தாக்குதல் நடத்தியதற்கு பின்வரும் காரணங்கள் கூறப்படுகின்றன.

(1) கல்லோயாத் திட்டத்தின் பொன்விழாவை அரசாங்கமும், எதிர்க்கட்சியும் இணைந்து கொண்டாடியதற்கு பதிலடி கொடுப்பது.

(2) பொன்விழா கொண்டாட்டத்தின் பின்னர், வீரவிதான இயக்கம் தமிழ் பேசும் மக்கள் அம்பாறையில் இருந்து வெளியேற வேண்டும் என்று பிரசுரங்கள் மூலம் எச்சரிக்கை விட்டதற்கு பதிலடி கொடுப்பது.

(3) புதுக்குடியிருப்பு தாக்குதலை நியாயப்படுத்திய அரசாங்கத்துக்கு பலத்த அதிர்ச்சி கொடுப்பது.

இந்த மூன்றுமே புலிகளது பிரதான நோக்கங்களாக இருந்தன.

ஆனால் புலிகள் எதிர்பார்க்காத விளைவு ஒன்றையும் அரசாங்கத்தின் நடவடிக்கை ஏற்படுத்திக் கொடுத்துவிட்டது.

தமிழ் பேசும் மக்கள் தற்போதைய ஆட்சியின்மீது உச்சபட்ச அதிருப்தி கொள்ளக்கூடிய நிகழ்வுகள் நடந்துவிட்டன.

புதுக்குடியிருப்பு தாக்குதல் பற்றி அரசாங்கமோ, அமைச்சர்களோ முதலில் விளக்கம் கூறவில்லை. படை அதிகாரிதான் விளக்கமளித்தார். பின்னர் சர்வதேச கண்டனத்தை அடுத்தே பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கருத்துக் கூறியிருந்தார்.

ஆனால் அம்பாறைத் தாக்குதலை அடுத்து ஜனாதிபதி உடனடியாக அனுதாபம் விட்டிருந்தார். நஷ்டஈடு வழங்கப்படும் என்று உத்தரவாதம் அளித்திருந்தார். பிரதிப் பாதுகாப்பு அமைச்சரும், வேறு அமைச்சர்கள் சிலரும் 31ம் கொலனிக்கு விரைந்தனர்.

அரச செலவில் மரணச் சடங்குகள் நடந்தன. நிவாரணங்கள் வழங்கப்பட்டன. பாதுகாப்புக்கு இராணுவ முகாம்கள் அமைக்க உத்தரவிடப்பட்டது. அம்பாறையில் உள்ள தமிழ்க் கிராமங்கள் சில படையினரால் சுற்றி வளைக்கப்பட்டு சோதனையிடப்பட்டன.

புதுக்குடியிருப்பு படுகொலைகள், அம்பாறைப் படுகொலைகள் இரண்டுமே மனித உயிர்கள்மீது அக்கறை உள்ளவர்கள் விரும்பத்தகாத நிகழ்வுகள்தான்.

ஆனால், அரசாங்கம் தன்னை சிங்கள மக்களது அரசாங்கம் போல கருதி நடந்து கொண்டதாகவே பொதுவான அபிப்பிராயம் தமிழ் பேசும் மக்களிடம் ஏற்பட்டுள்ளது.

இத்தகைய அபிப்பிராயம் ஏற்படக்கூடிய விதமாக அரசாங்கம் செயற்பட்டமை புலிகளுக்கு அரசியல் ரீதியில் பெருவெற்றிதான்.

அரசாங்கமும், அதன் பாதுகாப்பு படைகளும் தமக்குரியவை அல்ல என்று தமிழ்பேசும் மக்கள் நினைக்குமளவுக்கே நிகழ்வுகள் தொடருவது, புலிகளது அரசியல், இராணுவ தளம் விரிவடையவும், வலுவடையவுமே வழிகோலுகின்றன.

புதுக்குடியிருப்பு சம்பவம் நடைபெற்ற சூட்டோடு அம்பாறையில் புலிகள் தாக்கியதால், புலிகள் தாமாக தாக்கவில்லை, பதிலடியாகவே தாக்கியுள்ளனர் என்னும் அபிப்பிராயத்தையே சர்வதேச செய்தி நிறுவனங்களும் வெளியிட்டுள்ளன. இதனால் புலிகள் மீதான கண்டனங்களாக மட்டும் இல்லாது, அரசுமீதான கண்டனங்களும் இணைந்தே வெளியாகின்றன.

இதனால் புலிகள் மட்டுமே பொதுமக்களை தாக்குகின்றனர் என்று அரசாங்கம் குற்றம் சாட்ட வழியில்லாமல் போய்விட்டது.

புலிகள் கடந்த சில வருடங்களாக சிங்களப் பொதுமக்களுக்கு சேதம் ஏற்படாதவிதமான நடவடிக்கைகளையே தென்னிலங்கையில் மேற்கொண்டு வந்தனர்.

இதனை மனதில் கொண்டே காணாமல் போன படைவீரர்களது சங்கத்தின் தலைவர், "அம்பாறைத் தாக்குதலுக்கு அரசே பொறுப்பேற்க வேண்டும்!" என்று கூறியிருக்கிறார்.

தென்னிலங்கை சிங்கள மக்களுக்கும் புதுக்குடியிருப்பு கொலைகளுக்கான பதிலடியாக அம்பாறைத் தாக்குதல் தெரிந்தமையால் தான் பதற்றம் எதுவும் ஏற்படவில்லை.

தற்போதைய சூழ்நிலை இஸ்ரேல், பாலஸ்தீன யுத்தம் போலாகிவிட்டது.

இஸ்ரேல் படைகள் பாலஸ்தீன மக்களைத் தாக்கினால் பாலஸ்தீன கெரில்லாக்கள் இஸ்ரேலுக்குள் புகுந்து தாக்குவதுண்டு. அதேபோல பாலஸ்தீன கெரில்லாக்களுக்கு பதிலடியாக இஸ்ரேல் படையினரும் தாக்குதல்கள் நடத்துவதுண்டு. இங்கும் அதே சூழல்தான் தோன்றியுள்ளது. ●

நாரதர்

## அதிரடி அய்யாத்துரை



**சம்பந்தமானவர்** சற்று நிம்மதியாக இருப்பதற்காக இலண்டனுக்கு பறந்து விட்டார். போகும்போது ரெண்டு எழுத்து ஆலோசகரையும் சந்திக்க உள்ளதாகத் தனக்கு நெருக்கமான சிலரிடம் 'கப்ஸா' விட்டாராம். இவர் தலைகீழாக நின்றாலும் ஆலோசகர் இவரைப் பார்க்க மாட்டார். கிழக்கின் சிங்கத்தாரிடம் சம்பந்தமானவரைப் பற்றி கிழி கிழியென்று கிழித்தவரல்லோ ஆலோசகர்!

**கழக மாணிக்கத்தின்** வலது கரமாக இருந்தவர் ஹரிபாபு. அவர் சொன்ன பல காரியங்களை செய்து முடிப்பவர்களில் ஒருவர். அப்படியாகப்பட்டவரை தந்திரமாக மாட்டவைத்துப் போட்டுது மறுதரப்பு. அவர் வவுனியாவில் இருந்தால் தமது அணி அங்கு போகமுடியாது என்பதால், ஆளை மாட்டவைத்துவிட்டுப் போய் இறங்கியுள்ளனராம். டொல்பின் வேன்களில் பந்தாவாகச் சென்று வவுனியாவில் கால் பதித்திருக்கிறது மறு அணி. தேர்தல் நெருங்குவதால் கப்பென்று ஏரியாவைப் பிடித்திருக்கினம்.

**மட்டக்களப்பு** துணைப்படைக்கும் தமக்கும் தொடர்பில்லை என்று முன்னாள் வடக்கு-கிழக்கு மாகாண கட்சியின் செயலாளர் பத்திரிகை ஒன்றுக்குக் கூறியுள்ளார். அப்படியானால் துணைப்படையின் தற்போதைய தலைவர் வீட்டுக்குப் போய் சமீபத்தில் விருந்துண்டு மகிழ்ந்தது பொய்யோ ஐயா? சரி அதுதான் போகட்டும், அதே பத்திரிகைப் பேட்டியில் முன்னாள் முதல்வரான தமது தோழரை கிண்டலடித்துள்ளார் செயலாளர். "தனியாக வந்தார். தனியாக இருக்கிறார்" என்று கூறியுள்ளார். அடியடா படலையிலே எண்டானாம். அதே பத்திரிகையில் சில மாதங்களுக்கு முன்பு தனது பெயரில் அன்னார் விடுத்த அறிக்கையில், "எமக்குள் எந்தப் பிரச்சனையும் கிடையாது. பத்திரிகைகள் கதை கட்டுகின்றன," என்று கூறியிருந்தவர் அல்லோ? இப்போது அவரைக் கிண்டல் அடிக்கிறார். அப்படியானால் முரசு சொன்னது உண்மை என்பது அவர் வாயாலேயே உறுதியாகிப் போச்சுதல்லோ? பத்திரிகை ஒன்று சேறு பூசுகிறதாம். ஹி... ஹி... ஹி... ஏற்கனவே சேற்றுக்குள்ளேதானே நிற்கிறார்? பிறகேன் பூசவேண்டும்?

**புதுக்குடியிருப்பு** குண்டு வீச்சுப் பற்றி அதிகாரத்தரப்பின் முக்கியமானவர் கூறும்போது, "நேட்டோ நாடுகள்கூட இலக்குத் தவறி குண்டுகள் போடவில்லையோ?" என்று கேட்டிருந்தார். நேட்டோ நாடுகள் செய்வதெல்லாம் சரி என்று யார் கூறியது? அப்படியானால் நேட்டோ குண்டு வீச்சால் மக்கள் பாதிக்கப்பட்டதை அரசாங்கம் கண்டித்தது ஏனாம்? யுத்த விபத்து என்று பேசாமல் இருந்திருக்கலாமல்லோ? சரி அதுதான் போகட்டும், இவை எப்போது குண்டுவீச ஆரம்பித்தார்களோ, அப்போதிருந்தே தவறுதலாகத்தானே வீசிக்கொண்டிருக்கினம்?! எப்போதாவது ஒருமுறைதானே இலக்கைப் பார்த்து போட்டிருக்கினம்! எப்போதாவது ஒருமுறை தவறு நிகழ்வதை, எப்போதுமே நிகழும் தவறுடன் ஒப்பிடலாமோ?!

**சீருடைத்தரப்பின்** முன்னாள் பேச்சாளர் தற்போதைய உயர் பதவியை ராஜினாமா செய்து கடிதம் அனுப்பியுள்ளாராம். அரச பத்திரிகை நிறுவனத் தலைவரும் ராஜினாமா செய்யப் போகிறாராம். அவருடைய இடத்திற்கு சீருடைப் பிரிவைவிட்டு ராஜினாமா செய்யும் அதிகாரி நியமிக்கப்படலாம் என்றும் ஒரு தகவல்.

**அடுத்தடுத்து** இரண்டு இராஜதந்திர மூளைகள் சிந்திப்பதை நிறுத்திக் கொண்டன. ஹமீடைக் தொடர்ந்து நெவில் கனகரட்ன மரணமாகியிருக்கிறார். அவர்கள் இருக்கும்போது, அவர்கள் கூறிய கருத்தை யாரும் காதில் வாங்கவில்லை. இறந்த பிறகு சமாதான காவலர்களை இனி எங்கே தேடுவோம்? என்று டுப்போட்டு வசனம் பேசுகினம்.

**நாடெங்கும் மின்மாற்றிகள்** தாக்கப்படுகின்றன. தலைநகரான கொழும்பில்கூட பல மின் மாற்றிகள் தாக்கப்பட்டன. ஆனால் தமிழ் பேசுவோரின் பகுதிகளில் உள்ள மின்மாற்றிகள் தாக்கப்பட்டால் மட்டும் பாதுகாப்புக் கொடுக்க முடியாது என்று கழற்றி வைப்பது ஏன்? ஏன்? வவுனியாவில் சுலபமாக மின்மாற்றிகளைத் தாக்கக்கூடிய இடங்களில் ரெண்டு எழுத்தார் தாக்கவில்லை. பாதுகாப்பான இடமாகக் கருதப்படும் இடங்களில்தான் தாக்கினவையாம். ஆனால் சீருடையினர் ரெண்டு எழுத்தார் தாக்காத பகுதிகளில் உள்ளவற்றையும் கழற்றி வைக்குமாறு கூறிவிட்டனராம்.

**வவுனியாவில் கழக** முகாமில் இருந்த அரிசி மூட்டைகள் உட்பட பல பொருட்கள் சீருடையினரால் எடுத்துச் செல்லப்பட்டதாம். கழகத்தினர் பலர் ரெண்டு எழுத்தாரிடம் தப்பி ஓடிக்கொண்டிருக்கின்றனர். கழகம் பலவீனமானதால் அதன் போட்டி இயக்கம் பாடு கொண்டாட்டம். தேங்காய் எண்ணெய் வியாபாரமும் செய்கினம். வரி வசூலும் ஜோராக நடக்குதாம்.

**நீலமானவரின் கொலை** தொடர்பாக இளைஞர்கள் சிலர் கொழும்பில் கைதாகினர். அவர்களில் சிலரை விடுதலை செய்துவிட்டு ஏனையோரைத் தடுத்துவைத்துள்ளனர். அதில் ஒருவர் யார் தெரியுமோ? கூட்டான கட்சியின் சங்கதியாரின் மகன் முறையானவராம். இந்தச் சங்கதி வெளியே தெரியாமல் கூட்டான கட்சியினர் அமுக்கி வைத்திருக்கிறார்களாம்.

**இவ்வாரப் பொன்மொழி:**

> "உன் பொறுப்புக்களை நீ தட்டிக்கழிக்கலாம். அதன் விளைவுகளிலிருந்து நீ தப்பிக்க முடியாது!"

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

அரசியல் தொடர் அற்புதன் எழுதுவது




"1992 பெப்ரவரி 04ம் திகதியன்று கொழும்பில் ஈழக்கொடி பறக்கவிடப்பட்டிருந்தது. இதனை அரசாங்கம் எப்படி அனுமதித்தது?"

இப்படியொரு கேள்வியை நாடாளுமன்றத்தில் எழுப்பியிருந்தார், அப்போது எதிர்க்கட்சி வரிசையில் இருந்த லக்ஷ்மன் ஜெயக்கொடி. தற்போது (1999) இவர் அமைச்சராக இருப்பதுடன், அரச தொல்லை தவிர்ப்புக் குழுவின் தலைவராகவும் இருக்கிறார்.

லக்ஷ்மன் ஜெயக்கொடி அவ்வாறான கேள்வியை எழுப்பியதற்குக் காரணமாக இருந்தது ஈழக் கொடியல்ல; ஈ.பி.டி.பி கொடி.

ஈ.பி.டி.பி கட்சியின் அலுவலகம் கொழும்பு பூங்கா வீதியில் இருக்கிறது. அங்குதான் அக் கட்சியின் கொடி பறந்து கொண்டிருந்தது.

அதனைத்தான் ஈழக்கொடி பறப்பதாக யாரோ தகவல் கூறியதை நம்பி, நாடாளுமன்றத்தில் பிரச்சனை கிளப்பினார் லக்ஷ்மன் ஜெயக்கொடி.

ஆளும் கட்சியைச் சாட ஒருவாய்ப்புத் தேவை. அவ்வாளவுதான். தகவல் உண்மையா? பொய்யா? என்று ஆராயத் தேவையில்லை. இதுதான் அன்று எதிர்க்கட்சியாக இருந்தவர்களது நடைமுறை. இன்று எதிர்க்கட்சியாக இருப்போரின் நடைமுறையும் இதுவே.

## படை நடவடிக்கை

17.03.92ல் மணலாற்றுப் பகுதியில் மீண்டுமொரு பாரிய படையெடுப்பு அரச படைகளால் மேற்கொள்ளப்பட்டது.

'ஒப்பரேசன் கஜபாரா' என்று அதற்கு பெயர் சூட்டியிருந்தனர்.

யாழ் குடாநாட்டில் படை நகர்வு ஒன்றை மேற்கொள்வது போன்று போக்குக் காட்டப்பட்டது.

அவ்வாறு போக்குக் காட்டினால் வன்னியில் உள்ள புலிகளும் குடாநாட்டுக்கு அழைக்கப்பட்டு அங்குதான் தயாராய் இருப்பார்கள். அச் சந்தர்ப்பத்தில் எதிர்ப்பு இல்லாமல் மணலாற்று நகர்வை வெற்றிகரமாக முன்னெடுக்கலாம் என்று கருதியது படைத்தரப்பு.

யாழ்குடாநாட்டில் போக்குக் காட்டிக் கொண்டே மணலாற்றில் மூவாயிரம் படையினரும், சீனத் தயாரிப்பு சண்டை டாங்கிகள், கவசவாகனங்கள், பீரங்கிகள் என்பனவும் மணலாற்று நகர்வுக்குத் தயாராகின.

விமானப்படை, கடற்படை உதவிகளும் பெறப்பட்டு, 17.03.92 அன்று பெரும் எடுப்போடு படையினர் நகர்ந்தனர்.

கொக்குத்தொடுவாய் இராணுவ முகாமிலிருந்து வடக்கு நோக்கி முன்னேறி கரையோரப் பகுதிகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதுதான் இந்த நடவடிக்கையின் நோக்கமாக இருந்தது.

கரையோரப் பகுதிகளை தமது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவருவதால் புலிகளுக்கு மணலாற்றில் நெருக்கடி கொடுத்து அங்கிருந்து பின்வாங்கச் செய்வதுதான் திட்டம்.

மணலாற்றுப் பகுதியில் இவ்வாறு அடுத்தடுத்து பல நடவடிக்கைகளை தொடர்ந்தது காரணத்தோடுதான்.

வடக்கு-கிழக்கை இரண்டாகத் துண்டாக்குவது ஒரு இலக்கு. வடக்கில் இருந்து கிழக்குக்கான புலிகளது விநியோகப் பாதையை தடுப்பது இரண்டாவது இலக்கு.

'ஒப்பரேசன் கஜபாரா கட்டம் ஆறு' என்ற பெயரில் மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கை எதிர்பார்த்தது போன்று சுலபமாக இருக்கவில்லை.

புலியணிகள் எதிர்தாக்குதல் தொடுத்தன. கடும் சண்டை மூண்டது. படை நகர்வின் முதுகெலும்பாக இருந்த டாங்கிகளும், கவசவாகனங்களும் பல புலிகளது தாக்குதலால் சேதமடைந்தன.

முப்பதுக்கு மேற்பட்ட படையினர் பலியானார்கள். 80ற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். ஆறு கவசவாகனங்கள் புலிகளால் சேதமாக்கப்பட்டன.

இச் சண்டையில் டாங்கி எதிர்ப்பு பீரங்கி ஒன்றும் புலிகளால் கைப்பற்றப்பட்டது. புலிகளது பலத்த எதிர்த்தாக்குதல் காரணமாக 'ஒப்பரேசன் கஜபாரா கட்டம் ஆறு' எதிர்பார்த்த திட்டப்படி முன்னெடுக்கப்படவில்லை. முடிவுக்கு வந்தது.

அரச படைகளது முக்கிய தளபதியான டென்சில் கொப்பக்கடுவ வழி நடத்திய இச் சண்டை நினைத்த இலக்கை எட்டவில்லை.

இந்த நடவடிக்கைக்கு முன்பாக 'வன்னி விக்கிரம 03' என்னும் நடவடிக்கையும் படையினரால் நடத்தப்பட்டது.

அதுவும் புலிகளது எதிர்ப்பினால் தடைப்பட்டது. அதுபற்றி கருத்துக் கூறிய டென்சில் கொப்பக்கடுவ, "இது ஒரு பரீட்சார்த்த இராணுவ நடவடிக்கை மட்டுமே. புலிகள் எவ்வாறு நடந்து கொள்கிறார்கள்? என்று பார்ப்பதே இதன் நோக்கம்!" என்று கூறியிருந்தார்.

புலிகளது இராணுவத் தந்திரோபாயத்தை நுணுக்கமாகக் கண்டறிந்து, அதற்கேற்ப படை நகர்த்த திட்டமிட்டிருந்தார் டென்சில் கொப்பக்கடுவ.

எனினும் அந்த நகர்த்தலும் எதிர்பார்த்த பலனைக் கொடுக்காது முடிவுற்றது.

# மணலாற்றில்- கைப்பற்றிய பீரங்கி

கஜபாரா ஆறாம் கட்ட நடவடிக்கையில் புலிகளால் கைப்பற்றப்பட்ட 106 மில்லி மீட்டர் எம்.40 ரக பீரங்கி, டாங்கிகளை தகர்க்க வல்லது. இது பின் உதைப்பற்றது.

அமெரிக்கத் தயாரிப்பான இப் பீரங்கி 32ற்கு மேற்பட்ட நாடுகளில் டாங்கி எதிர்ப்பு பீரங்கியாக பயன்பட்டு வருகிறது.

இந்தப் பீரங்கி 34 மீட்டர் நீளத்தையும், 209.05 கிலோ எடையையும் கொண்டது. நிமிடத்திற்கு ஒரு குண்டு என்ற வீதத்தில் சுடவல்லது.

ஒரு கிலோ மீட்டருக்கு அப்பாலுள்ள டாங்கிகளை இதனால் தாக்கமுடியும். இதனை மோட்டார் எறிகணைபோலவும் பாவிக்கலாம். அவ்வாறுதான் படையினர் பாவித்தனர்.

மோட்டார் எறிகணை போன்று பாவித்தால் ஏழு கிலோ மீட்டருக்கு அப்பால் குண்டை ஏவலாம்.

இம் மாதிரியான பின் உதைப்பற்ற பீரங்கிகளில் மூன்று வகையான குண்டுகளை உபயோகிக்கலாம்.

(1) டாங்கி எதிர்ப்பு உயர் சக்தி வெடி மருந்து. (2) பிளாஸ்ரிக் உயர்சக்தி வெடி மருந்து. (3) துருப்பு எதிர்ப்பு வெடிமருந்து.


இப் பீரங்கியைக் கைப்பற்றிய புலிகள் உடனடியாக அதனை யாழ் குடாநாட்டுக்கு கொண்டு சென்றனர்.

11.04.92 அன்று பலாலி இராணுவ தளம் மீது புலிகளால் தாக்குதல் ஒன்று தொடுக்கப்பட்டது.

விமான ஒடு பாதைகளில் ஷெல்கள் வந்து விழுந்து வெடித்தன.

இத் தாக்குதல் மணலாற்றில் கைப்பற்றிய பீரங்கியை பரிசீலித்துப் பார்க்கவே நடத்தப்பட்டது.

படையினரிடம் இருந்து புலிகள் முதன் முதலில் கைப்பற்றிய கனரக பீரங்கி இதுதான்.



புலிகள் கைப்பற்றிய பீரங்கி இதுதான்

## சமாதான முயற்சி

சுவீடனில் உள்ள உப்சலா பல்கலைக்கழக பேராசிரியர் பீட்டர் ஷாக் சுவீடன் வெளிவிவகார அமைச்சுக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார்.

இலங்கை இனப்பிரச்சனையை முடிவுக்கு கொண்டுவர சுவீடன் மத்தியஸ்தம் செய்யத் தயாராக இருக்கிறதா? என்று அவர் தனது கடிதத்தில் கேட்டிருந்தார்.

இதற்குப் பதில் தெரிவித்து 08.03.92 அன்று சுவீடன் வெளி விவகார அமைச்சர் கடிதம் அனுப்பியிருந்தார்.

"இரு தரப்பாரும் சுவீடன் நாட்டின் தலையீட்டை விரும்பிக் கேட்டால், சமரச முயற்சியில் இறங்கத் தயார்!" என்று சுவீடன் வெளிநாட்டமைச்சர் கூறியிருந்தார்.

இச் செய்தி பெரிதாக வெளியானபோதும் இலங்கை அரசு மௌனமாக இருந்துவிட்டது. விடுதலைப் புலிகள், சுவீடன் வெளிநாட்டமைச்சர் மாகரீத்தா அவ் உக்கிளஸ் அவர்களுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்தனர்.

அப்போது புலிகளது சர்வதேச பிரதிநிதியாக இருந்த லோரன்ஸ் திலகர் அக்கடிதத்தை அனுப்பியிருந்தார். அதில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டிருந்தது:

"இலங்கைத்தீவில் இன்றைய முரண்பாட்டை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக சிறீலங்கா அரசுடன் நிபந்தனையற்ற முறையில் பேசுவதற்கு விடுதலைப் புலிகள் என்றுமே தயாராக உள்ளனர்.

இலங்கைத் தீவில் இரு தேசிய இன மக்களும் சுதந்திரத்துடனும், சமத்துவத்துடனும் வாழக்கூடிய கட்டமைப்பு ஒன்றை உருவாக்குவது தொடர்பாக சிறீலங்கா அரசுடன் பேச்சுவார்த்தை நடத்த நாம் தயார்.

தமிழ் மக்களின் மறுக்கப்பட முடியாத சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதன் அடிப்படையிலேயே நிரந்தரத் தீர்வு ஒன்றைக் காணமுடியும் என்பதே எமது கருத்து.

இப்பிரச்சனையில் சம்பந்தப்பட்டவர்களான விடுதலைப்புலிகளுக்கும், சிறீலங்கா அரசுக்கும் இடையே நடுவராக செயற்பட சுவீடன் அரசு எடுக்கும் எத்தகைய முன்முயற்சிகளையும் நாம் வரவேற்கிறோம்.

அத்தோடு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பிரதிநிதிகள் குழு ஒன்று தங்களைச் சந்தித்து, சம்பந்தப்பட்ட பிரச்சனைகள் குறித்து கலந்துரையாடுவது உங்கள் முயற்சிக்கு முன்னோடியாக அமையலாம் என்னும் கருத்தையும் முன்வைக்கிறோம்" என்று திலகர் தனது கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

## 140 பேர் பலி

1992 ஜனவரி முதல் பெப்ரவரி 25ம் திகதி வரையான காலப்பகுதியில் புலிகள் பரவலான தாக்குதல்களை நடத்தியிருந்தனர்.

இந்த இரண்டு மாதங்களுக்குள் இராணுவத்தினருக்கு பலத்த இழப்பு ஏற்பட்டிருந்தது.

இரு மாதங்களுக்குள் உயிரிழந்த படையினரின் எண்ணிக்கை 145. இவர்களில் 98 படையினர் திடீர் தாக்குதல்களில் பலியானார்கள்.

இதற்கு முந்திய காலங்களில் இரண்டு மாதங்களுக்குள் இவ்வளவு தொகையான படையினர் பலியானதில்லை என்று இராணுவ வட்டாரங்கள் கூறியிருந்தன.

இராணுவத்தில் சேரும் புதியவர்களுக்கு தற்போது ஆறுவாரப் பயிற்சியே தரப்படுகிறது. முன்பு மூன்று முதல் ஆறு மாதம் பயிற்சி கொடுக்கப்பட்டது.

இராணுவத்தில் ஆள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. அதனால் எவ்வளவு துரிதமாக போர்முனைக்கு அனுப்ப முடியுமோ அவ்வளவு துரிதமாக அனுப்பப்படுகின்றனர். இவைதான் அதிக இழப்புக்கள் ஏற்படக் காரணம் என்று இராணுவ உயரதிகாரிகள் கூறினார்கள்.

பயிற்சிக் குறைவான இராணுவத்தினர் வெறிச்சோடிய பாதைகள், காட்டு வழிகள் போன்றவற்றால் செல்லும்போது கவனக்குறைவாக இருக்கின்றனர். அதனால் இலகுவாகத் தாக்கப்படுகின்றனர்.

இழப்புக்கள் அதிகரித்துள்ளபோதும் ரோந்துகளை மேற்கொள்ள வேண்டி இருக்கிறது என்று ஒரு அதிகாரி கூறியிருந்தார்.

## பிரிட்டன் கருத்து

இலங்கை பிரச்சனையில் வெளிநாடுகளது உதவிகளை தமக்கு சார்பாக மட்டுமே இலங்கை அரசாங்கங்கள் எதிர்பார்க்கின்றன. தமிழ் பேசும் மக்களுக்கு சாதகமாக அமையக் கூடிய விதமான உதவிகளை நிராகரித்தே வருகின்றன.

பிரேமதாசா ஆட்சியிலும் பலநாடுகள் மத்தியஸ்தம் செய்ய பகிரங்கமாகவே விருப்பம் தெரிவித்தன.

கண்டியில் பௌத்த மதகுருவான மல்வத்தை மகாநாயக்க தேரோவை இலங்கைக்கான பிரிட்டனின் அப்போதைய தூதர் எட்வேட் கோன் பீல்ட் சந்தித்தார்.

சந்திப்பின்போது இனப்பிரச்சனை தொடர்பாகவும், யுத்தம் தொடர்பாகவும் பேசப்பட்டது. அப்போது பிரிட்டனின் தூதர் பின்வருமாறு கூறினார்.

"வடக்கு-கிழக்கு பிரச்சனையில் சம்பந்தப்பட்டோர் இலங்கை அரசும், விடுதலைப் புலிகளுமே. இந்த இரு சாராரும் நல் நோக்குடன் தீர்வு காண முயற்சிக்காதுவிட்டால், இங்கு தீர்வு என்பதே சாத்தியமற்றுப் போய்விடும்!"

பிரிட்டிஷ் உட்பட பல நாடுகள் தாம் மத்தியஸ்தம் செய்ய விரும்புவதாகக் கூறியும் பிரேமதாசா அரசாங்கம் அதனை ஏற்கவில்லை.

அதேபோல தற்போதும் பிரிட்டன் போன்ற நாடுகள் மத்தியஸ்தம் செய்ய விருப்பம் தெரிவித்துள்ளன. இன்றைய சந்திரிக்கா அரசாங்கமும் அதனை விரும்பாது நிராகரித்து வருகிறது.

வெளிநாட்டு உதவிகளைப் பெற்றே இலங்கை அரசாங்கங்கள் போரை நடத்தி [illegible]கின்றன. அமெரிக்கா போன்ற நாடுகள் அ[illegible]களையும், பயிற்சிகளையும் ஆலோச[illegible]களையும் வழங்கி நேரடியாகவே தலையிடுகின்றன.

ஆனால் இனப்பிரச்சனைத் தீர்வுக்கு மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் என்றால் மட்டும் இலங்கை அரசாங்கம் மறுத்துவருகிறது.

## தொண்டா புகழாரம்

அமைச்சர் தொண்டமான் 22.03.92 அன்று 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகைக்கு பேட்டி ஒன்றை வழங்கியிருந்தார்.

அப்பேட்டியில் புலிகள் பற்றி அவர் கூறிய கருத்து சிங்கள பத்திரிகைகளிலும், பேரினவாதிகளிடமும் பெரும் சர்ச்சையைக் கிளப்பியது.

அவர் கூறியது இதுதான்:

"தமிழ் மக்களையும், விடுதலைப் புலிகளையும் பிரித்துப் பார்க்க முடியாது.

விடுதலைப் புலிகளை தோல்வி காணச் செய்வது என்பதும், புலிகளை அழிப்போம் என்பதும் தமிழ் மக்களை தோல்வி காணச் செய்வோம், தமிழ் மக்களை அழிப்போம் என்று கூறுவதற்கு சமனாகும்.

தமிழ் மக்கள் உள்ளவரை இலட்சிய உ[illegible] கொண்ட விடுதலைப் புலிகளும் இரு[illegible]கள்.

ஏனைய குழுக்கள் களைப்பினாலோ, அல்லது வேறு காரணங்களாலோ போராட்டத்தைக் கைவிட்டிருக்கலாம். அவர்கள் போல புலிகள் தங்கள் இலட்சியங்களை காற்றில் பறக்க விடுபவர்கள் அல்ல. அவர்கள் சுதந்திர வீரர்கள்!" என்று கூறியிருந்தார் தொண்டமான்.

(தொடர்ந்து வரும்)

---

**ரா**ஜீவ் கொலை வழக்கில் தூக்குத் தண்டனை பெற்று, மேன் முறையீட்டில் விடுதலையானவர் புகைப்படப் பிடிப்பாளர் சுபா சுந்தரம். ராஜீவ் கொலை வழக்கு தொடர்பான புதிய தகவல்கள், விசாரணை நடந்த முறைகள் பற்றி அவர் கூறும் தகவல்கள் புதியவை. கண்டிப்பாக நாம் அறிந்து கொள்ள வேண்டியவை.

# மறுபிறவி

## சுபா சுந்தரம்




இதோ சாந்தனது குரல்...!

"சிவராசன் எல்.ரி.ரி.ஈ. மிலிடரி பிரிவு ஆள் என்று எனக்குத் தெரியும். அவர் உ.பி.யில் (உத்தரப்பிரதேசத்தில்) பயிற்சி எடுத்தவர்.

சிவராசன் மற்றும் டெலோவைச் சேர்ந்த 28 பேர் அதை விட்டு விலகி 1984 ஆரம்பத்தில் சென்னை வந்து சேர்ந்தார்கள். சிவராசன், யோகியுடன் ஆறாவது பேட்ச்சில் தமிழ் நாட்டில் பயிற்சி எடுத்தவர். 1989 மே மாதத்தில் இந்தியப் படையுடன் நடந்த சண்டையில் யாழ் கோட்டையில் வைத்து சிவராசனின் இடதுகண் போய்விட்டது.

15.02.90 அதிகாலையில் நானும் சிவராசனும் இந்தியா வந்து சேர்ந்தோம். ஒரு படகில் கோடியக்கரைக்கு வந்து அங்கிருந்து பஸ்ஸில் வேதாரண்யம் சென்றோம். 16-ந் தேதி காலையில் பஸ்ஸில் சென்னை போய்ச் சேர்ந்தோம்.

வடபழனியில் கங்கையம்மன் தெருவில் இருந்த நாகராஜன் என்ற இலங்கைத் தமிழர் வீட்டுக்கு சிவராசன் என்னை அழைத்துச் சென்றார். அன்றே என்னை நெ.3, இரண்டாவது தெரு ஜக்ரியா காலனி, கோடம்பாக்கம் என்ற முகவரியில் உள்ள MIET-க்கு கூட்டிச் சென்றார்கள்.

MIET-ல் சேர்ந்த இரண்டு வாரம் கழித்து நான் ஒருநாள் சிவராசனை காலை பத்தரை மணி அளவில் வள்ளுவர் கோட்டத்தில் வைத்து சந்தித்தேன். ஈ.பி.ஆர்.எல்.எஃப். தலைவர் பத்மநாபாவைக் கவனித்து வைக்குமாறு என்னிடம் சொன்னார்.

90' மே போல, பத்மநாபா சென்னைக்குத் திரும்பி அலுவலகம் சென்று வருவது பற்றிய தகவல் எனக்குத் தெரிந்தது. அதை நான் சிவ ராசனுக்குத் தெரியப்படுத்தினேன். 19.06.90 அன்று, சிவராசன் என்னை கோடம்பாக்கம் பாலத்தருகே மாலை ஆறுமணியிலிருந்து காத்திருக்கச் சொல்லிவிட்டு போனார்.

6.45 மணிக்கு ஒரு வெள்ளை அம்பாசிடர் காரை டேனியல் ஓட்டிக்கொண்டு வர, அதில் சிவராசன் வந்தார். காரில் டேவிட், குமார் இருந்தனர். அவர்கள் எல்லோரும் பத்மநாபா வீடு இருந்த பவர் அப்பார்ட்டுமண்ட் பக்கம் போனார்கள். அப்போது மணி 7.10 இருக்கும்.

சற்று நேரத்தில் துப்பாக்கிச் சத்தம் கேட்டது. சில நிமிடங்களில் அவர்கள் எல்லோரும் நான் இருக்கும்இடத்திற்கு வந்துவிட்டார்கள்.

எல்லோரும் காரில் ஏறிக்கொண்டோம். தாங்கள் கொண்டு வந்திருந்த ஏ.கே.47 துப்பாக்கிகளின் மூலமாக ஈ.பி.ஆர்.எல்.எஃப். தலைவர்களான பத்மநாபா, கிருபாகரன் மற்றும் தோழர்களை சுட்டுக்கொன்றுவிட்டு வந்ததாக அறிந்துகொண்டேன்.

நாங்கள் தாம்பரம், செங்கல்பட்டு வழியாக தஞ்சாவூர் நோக்கிச் சென்றோம். வழியில் செங்கல்பட்டுக்கு முன்னால் போலிசார் மறித்தார்கள். அவர்களை அடித்து மிரட்டிவிட்டு தொடர்ந்து காரில் சென்றோம். மல்லிப்பட்டினத்திலிருந்து படகில் ஏறி இலங்கை வல்வெட்டித்துறைக்குச் சென்றடைந்தோம்.

சிவராசன் என்னிடம், பத்மநாபா கொலைக்குப் பிறகு பிரபாகரனின் கவனம் தன்மீது பட்டிருப்பதாகச் சொன்னார்.

முக்கியமான அலுவல்கள் தனக்குத் தரப்பட்டிருப்பதாகவும் சுபா, தணு ஆகிய இரண்டு பெண்களும் ராஜீவ்காந்தியை ஒழித்துக்கட்ட உதவப் போவதாகவும் அவர் என்னிடம் சொன்னார்.

நான் 13.05.91 லிருந்து 28.05.91 வரை ஜெயக்குமார் வீட்டில்தான் இருந்தேன். 15.05.91ந் தேதிபோல், மதியம் ஒரு மணி சுமாருக்கு சீனிவாசய்யா, ஜெயக்குமார் வீட்டுக்கு வந்து சிவராசனைச் சந்தித்தார்.

சிவராசன் சீனிவாசய்யாவை எனக்கு அறிமுகம் செய்துவைத்தார். நமக்கும் எல்.ரி.ரி.ஈ.க்கும் மிகுந்த உதவிகள் செய்துவருவதாக சொன்னார். சீனிவாசய்யா,

வை.கோபால்சாமியை உண்மையான தமிழினத் தலைவர் என்றும், கலைஞர் பதவியில் இருப்பதற்காக மட்டுமே நாடகமாடுகிறார் என்றும் அடுத்த தி.மு.க. தலைவர் வை.கோ என்றும் சொன்னார்.

சிவராசனும் சீனிவாசய்யாவும் மொட்டைமாடியில் முக்கால் மணிநேரம் பேசிக் கொண்டிருந்தார்கள். சீனிவாசய்யாவின் முகவரி எனக்குத் தெரியாது."

பத்மநாபா கொலையில் தொடங்கி ராஜீவ் கொலைக்கான சதி திட்டம் வரை விரியும் சாந்தனின் வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கியமான நபர் சீனிவாசய்யா.

தி.மு.க. தலைமை பற்றி கருத்து தெரிவிக்கும் இந்த சீனிவாசய்யா யார்? அவருக்கு இந்த வழக்கில் என்ன தொடர்பு?

**சீ**னிவாசய்யா என்று கேள்விப்படாத நபர் இந்த வழக்கிற்குள் எப்படி தலையை நுழைத்தார் என்பது எல்லோருக்கும் ஆச்சரியமாக இருந்தது. சாந்தனிடம் வாக்குமூலம் வாங்கிய சி.பி.ஐ. அதிகாரிகளுக்கே சீனிவாசய்யாவைப் பற்றி எதுவும் தெரியவில்லை. 'மல்லிகை'யில் நான் விசாரணைக்குச் சென்று வந்தபோது சீனிவாசய்யாவைப் பற்றி என்னிடம் விசாரிக்கத் தொடங்கினார்கள்.

"தி.மு.க.வில் சீனிவாசய்யா என்று யாராவது இருக்கிறார்களா? அவரை உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்டார் விசாரணை அதிகாரி. நான் யோசிக்கத் தொடங்கினேன்.

திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் ஆகிய இயக்கங்களின் பெருந்தலைவர்களெல்லாம் என்னிடம் நன்கு பழகக் கூடியவர்கள்.

இன்றைக்கு அந்தக் கட்சி அலுவலகங்களில் இருக்கும் தலைவர்களின் படங்களில் பெரும்பாலானவை நான் எடுத்தவைதான். எனக்குத் தெரிந்தவரை தி.மு.க.வில் சீனிவாசய்யா என்ற பெயரில் முக்கிய நபர் யாரும் கிடையாது. அதை விசாரணை அதிகாரிகளிடமும் சொன்னேன்.

"நீங்கள் சொல்கிற பெயரில் தி.மு.க.வில் யாரும் கிடையாது. இந்த பெயர் ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்தவரின் பெயரைப்போல இருக்கிறது. எனக்குத் தெரிந்த அண்ணாவின் நண்பர் சீனிவாசன் தி.மு.க.வில் இருந்தார். அவரும் இறந்துவிட்டார். சீனிவாசய்யா என்று நீங்கள் குறிப்பிடும் நபர் பற்றி எனக்கு எதுவும் தெரியாது" என்றேன். அதற்கு மேல் இதுபற்றி என்னிடம் அவர்கள் எதுவும் கேட்கவில்லை.

(தொடர்ந்து வரும்)

# சர்வதேச அரங்கில் சரிந்துவரும் செல்வாக்கு!

**அலசுவது - இராஜதந்திரி**

இலங்கை வெளிநாட்டமைச்சு சர்வதேச ரீதியாக வகுத்துவரும் வியூகங்கள் தற்போது நெருக்கடியைச் சந்தித்து வருகின்றன.

சந்திரிக்கா அம்மையார் பதவிக்கு வந்த புதிதில் சர்வதேச அரங்கில் இலங்கை ஆட்சியாளரது ஒவ்வொரு நகர்வுக்கும் வரவேற்பு கிடைத்தது.

சமாதான தேவதையாகவும், இனபேதமற்ற ஒருவராகவுமே சந்திரிக்கா அம்மையார் நோக்கப்பட்டார். அவரது புன்னகைக்கு உலக ஆதரவை ஈர்க்கும் சக்தி இருப்பதாகவும் அப்போது விபரிக்கப்பட்டது.

பெண்கள் என்றால் இயல்பாகவே மென்மையானவர்கள் என்ற அபிப்பிராயம் பொதுவாக உலகளவில் நிலவுகிறது.

உலகின் பலநாடுகளில் ஆண்களே தலைமைப் பதவிகளில் உள்ளனர். அவர்கள் பெண் தலைவிகளைவிட தாம் உறுதியானவர்களாக, பலமானவர்களாக உள்ளூர நினைத்துக் கொள்கின்றனர்.

இதனால் ஒரு சில நாடுகளில் பெண்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்கும்போது, அந்த ஆண் தலைமைகள் ஒருவிதமான அனுதாபப் பார்வையைச் செலுத்துகின்றன. நட்புறவிலும் மென்மையான போக்கைக் கையாள்கின்றன.

<u>பெண்கள் ஆட்சிப் பொறுப்பில் உள்ள நாடுகளில் அடக்குமுறைகள் தலைவிரித்தாடும்போது குறிப்பிட்ட காலத்திற்கு உலக சமூகம் அதனை நம்ப மறுக்கிறது.</u>

இலங்கையின் முதல் பெண் பிரதமர் மட்டுமல்லாது உலகின் முதலாவது பெண் பிரதமரும் சிறிமாவோ பண்டாரநாயக்காவேயாகும்.

அவரது ஆட்சிக் காலத்தில் ஜே.வி.பி. கிளர்ச்சி ஏற்பட்டபோது சீனா, இந்தியா போன்ற நாடுகள் விழுந்தடித்து உதவிகள் செய்திருந்தன. அந்த உதவிகள் காரணமாகவே அவரது ஆட்சியும் காப்பாற்றப்பட்டது.

அதேசமயம் அவரது ஆட்சியில்தான் பல நூற்றுக்கணக்கான ஜே.வி.பி இளைஞர்கள் சுட்டு கொல்லப்பட்டு களனி கங்கையில் வீசப்பட்டனர்.

அதேபோல தமிழ்பேசும் மக்களது உரிமைப் போராட்டம்மீது கடும் அடக்குமுறை பிரயோகிக்க ஆரம்பிக்கப்பட்டதும் அம்மையாரின் ஆட்சியிலேயேயாகும். நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்கள் பல ஆண்டுகாலமாக அவசரகால சட்டத்தின்கீழ் சிறையில் தள்ளப்பட்டனர்.

<u>தமிழ் பேசும் மாணவர்களது கல்விக்கு குழிபறிக்கும் தரப்படுத்தல் கொண்டுவரப்பட்டதோடு, இலங்கையை பௌத்த சிங்கள நாடாக பிரகடனம் செய்யும் அரசியலமைப்பு கொண்டு வரப்பட்டதும் அம்மையாரின் ஆட்சிக்காலத்திலேயாகும்.</u>

எனவே, உலகின் முதல் பெண் பிரதமர் ஆட்சிக்காலத்தில்தான் உள்நாட்டுக் கலகம் ஒன்று கடுமையாக தண்டிக்கபட்டு ஒடுக்கப்பட்டது.

அதே ஆட்சிக் காலத்தில்தான் இனப்பிரச்சனைக்கு அடக்குமுறை மூலம் தீர்வு காணும் முனைப்பும் மேலோங்கியது. அதன் விளைவாகவே ஆயுதப் போராட்ட அவசியம் உணரப்பட்டு, அதற்கான அமைப்புக்களும் தமிழ்பேசும் மக்களிடையே உருவாகின.

அதேபோன்று இந்தியாவிலும் இந்திரா காந்தியின் ஆட்சிக்காலத்தில்தான் அவசரகால சட்டம் பிரகடனம் செய்யப்பட்டு, அவரது அரசியல் எதிரிகள் வேட்டையாடப்பட்டனர். பயங்கரமான ஒடுக்குமுறை நாடெங்கும் கட்டவிழ்த்துவிடப்பட்டது.

<u>அவ்வாறிருந்தபோதும் இந்திரா காந்தி அவர்களது தோற்றம் உலகை வசீகரித்தது. இவரது ஆட்சியிலா இப்படி நடக்கிறது என்று உலகத் தலைவர்கள் நம்பமுடியாது நின்றனர்.</u>

ஆனால் இந்திய மக்கள் அவரை தோற்கடித்து தண்டித்தபோதுதான் உலகமே உண்மையை உணர்ந்துகொண்டது.

பின்னர் அவசரகால சட்டத்தின் கீழ் நடைபெற்ற தவறுகளுக்கு இந்திரா அம்மையார் பொது மன்னிப்புக் கோரியிருந்தார்.

இலங்கையில் இன்றைய ஜனாதிபதி சந்திரிக்கா அவர்கள்தான், இங்கு சர்வ அதிகாரமிக்க முதலாவது பெண் ஜனாதிபதி என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.

சந்திரிக்கா அம்மையாரின் ஆட்சியில்தான் முன்னெப்போதும் இல்லாதளவுக்கு தமிழ் மக்கள் இடம் பெயர்ந்தும், பாரிய துன்ப துயரங்களைச் சுமந்தும் நிர்க்கதியாகியுள்ளனர். இனப்பிரச்சனைக்கு இராணுவத்தீர்வு காணும் முனைப்பு சந்திரிக்கா அம்மையார் ஆட்சியில்தான் மிக உக்கிரம் பெற்றுள்ளது.

<u>எனவே ஆட்சிப் பொறுப்பில் ஆண் இருந்தால் என்ன, பெண் இருந்தால் என்ன, அது முக்கியமான விடயமல்ல. அவர்கள் யாருடைய நலன்களைப் பேணுகிறார்கள்? என்பதுதான் முக்கியமானதாகும்.</u> அதன் அடிப்படையிலேயே அவர்களது ஆட்சியின் ஒவ்வொரு நகர்வும் மேற்கொள்ளப்படும்.

இலங்கைத் தீவில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த கட்சிகளில் யார் பதவிக்கு வந்தாலும் பேரினவாத நலனை பாதுகாப்பதும், பேரினவாத சக்திகளிடம் நற்பெயர் எடுத்து தமது ஆட்சியை தக்கவைப்பதிலுமே குறியாக இருந்து வருகின்றனர்.

ஜனாதிபதி சந்திரிக்கா அம்மையார் பௌத்த மதகுருவுக்கு பென்ஸ் கார் பரிசளித்ததும், பௌத்த பீடங்களது ஆதரவைக் கோரி நின்றதும் இதற்கு சமீபகால உதாரணமாகும்.

இந்த உண்மைகளை உலகம் மிக நுணுக்கமாக கண்டறியும் என்று கருதிவிடலாகாது. அந்த அவசியமும் வெளி உலகுக்கு கிடையாது.

<u>இலங்கைத்தீவில் பெண் ஒருவர் ஜனாதிபதியாக இருக்கிறார். பெண் ஜனாதிபதியாக இருப்பதால் மென்போக்குடன் நடந்து கொள்வார் என்று வழக்கமான, மேலோட்டமான கருதுகோள்தான் வெளி உலகத்திடம் இருந்து வந்தது.</u>

இந்தக் கருதுகோளைத் தக்கவைக்கும் விதமாகவும், இங்கு முன்னெடுக்கப்படும் இராணுவத் தீர்வு முனைப்பையும், அதன் விளைவுகளையும் தீர்வுப் பொதியைக் காட்டி பூசி மெழுகவுமே வெளிநாட்டமைச்சு வியூகங்களை வகுத்திருந்தது.

முன்னர் இலங்கையின் வெளிநாட்டு தூதரகங்கள் சர்வதேசப் பிரசாரங்களில் அதிகம் ஈடுபாடு காட்டுவதில்லை.

பிரேமதாசா ஆட்சியில் இலண்டனில் இருந்த இலங்கைத் தூதரகம் மட்டும் சற்றுச் சுறுசுறுப்பாக இயங்கிவந்தது.

புலிகளின் மூத்த தளபதியான கிட்டு இலண்டனில் தங்கி நின்றதால், அவரது நடமாட்டங்கள், பிரசாரங்கள் என்பவற்றை கண்காணித்ததோடு, கிட்டுவை இலண்டனை விட்டு வெளியேற வைப்பதிலும் இலண்டன் தூதரகம் வெற்றியைப் பெற்றிருந்தது.

எனினும் சந்திரிக்கா அம்மையாரின் வெளிநாட்டமைச்சுத்தான் இதுவரைகாலம் இருந்த வெளிநாட்டமைச்சுக்களில் சுறுசுறுப்பாக செயற்பட்டு வருகிறது.

<u>உலகின் பலநாடுகளில், குறிப்பாக இலங்கைத் தமிழர்கள் கணிசமாக உள்ள நாடுகளில் இருக்கும் இலங்கைத் தூதரகங்கள் சுறு சுறுப்பாக செயற்பட வைக்கப்பட்டுள்ளன.</u>

தமிழிலும் வெளியீடுகள் வருகின்றன. செம்மணி புதைகுழியில் பாம்புத் தலையும், தவளைகளும் கிடப்பதாக தூதரகம் வெளியிட்ட பத்திரிகை ஒன்றில் செய்தி வெளியாகி இருந்தது.

நீலன் திருச்செல்வத்தின் மரணம் தொடர்பாகவும், அது தொடர்பாக வெளியான அனுதாபச் செய்திகள், அறிக்கைகளைத் திரட்டியும் ஆங்கில நூல் ஒன்றை வெளிநாட்டு அமைச்சகம் வெளியிட்டுள்ளது. இவை தூதரகங்கள் ஊடாக விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

வெளிநாட்டமைச்சர் கதிர்காமர் அடிக்கடி வெளிநாட்டு பத்திரிகையாளர்களை சந்தித்து மாநாடுகள் நடத்தி வருகிறார்.

அடிக்கடி வெளிநாட்டுச் சுற்றுப் பயணங்களை மேற்கொண்டு புலிகளை பயங்கரவாதிகளாக பிரகடனம் செய்யுமாறு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்.

இலங்கை வெளிநாட்டைச்சு வகுக்கும் வியூகங்கள் மூன்று இலக்குகளைக் குறிவைக்கின்றன.

(1) புலிகளையும், தமிழ் பேசும் தரப்பையும் சர்வதேச ரீதியாக தனிமைப்படுத்துவது

(2) இராணுவத் தீர்வு முனைப்பை பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கையாக சித்தரித்து உலக உதவியைப் பெறுவது.

(3) மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் செய்ய எந்த நாடும் முன்வராது தடுப்பது.

இந்த மூன்றும்தான் இலங்கை வெளிநாட்டமைச்சின் முக்கியமான இலக்குகளாகும்.

இவற்றுக்காகவே வெளிநாட்டு அமைச்சு, வெளிநாட்டமைச்சர், வெளிநாட்டு தூதரகங்கள், அரச சார்பான தமிழ்க் கட்சி பிரமுகர்கள் போன்ற பல்வேறு வழிகளில் பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பெண் ஜனாதிபதி, சமாதானத் தேவதை, பொதியை முன்வைத்தவர் என்னும் மூன்று முக்கிய அம்சங்களை சாதகமாகப் பயன்படுத்தியே வெளிநாட்டமைச்சு தனது வியூகங்களை வகுத்திருந்தது.

ஆனால் தற்போது நிலமை மாறியிருக்கிறது. சர்வதேச அரங்கில் இலங்கை ஆட்சியாளரது சமாதான தோற்றப்பாடு சரிவு கண்டு வருகிறது.

இந்தச் சரிவுக்கு பின்வரும் காரணங்கள் பிரதானமாக உள்ளன.



படுகொலைகளுக்கு எதிராக கிழக்கு திமோர் மக்களின் ஆவேசம்

(1) அரசியல் தீர்வு என்று பேசிப் பேசியே இழுத்தடிக்கும் தந்திரத்தின் சாயம் வெளுத்துள்ளது. (2) விடுதலைப் புலிகளது இராணுவ பலம் நிரூபிக்கப்பட்டு வருகிறது. அதனால் புலிகள் சிறு பயங்கரவாதக் குழு என்ற பிரசாரம் வலுவிழந்துள்ளது.

(3) செம்மணி புதை குழியை தவிர்க்க முடியாது தோண்டும் நிர்ப்பந்தமும், அதனால் அம்பலமாகும் உண்மைகளும்.
(4) எதிர்க்கட்சியின் பிரசாரங்கள்.

இவை தவிர, சர்வதே அரங்கில் ஏற்பட்டுவரும் நிகழ்வுகளும் இலங்கை ஆட்சியாளருக்கு கசப்பானதாகவே விளங்குகின்றன.

கொசோவா பிரச்சனையில் உலக நாடுகள் தலையிட்டன. செர்பியர்களது இனவெறியும், இனப்படுகொலைகளும் உலக கண்டனத்திற்கு உள்ளாகியுள்ளன.

<u>தற்போது கிழக்குத் திமோரிலும் உலக நாடுகள் தலையிட்டு, சமாதானம் ஏற்பட உதவுகின்றன. அவுஸ்திரேலியாவின் தலைமையில் அங்கு அமைதிப்படை சென்றிருக்கிறது.</u>

கிழக்குத் திமோர் பிரச்சனையும் நம் பிரச்சனையை ஒத்ததேயாகும்.

1975ம் ஆண்டு வரை போர்த்துக்கல் காலனியாகவே கிழக்குத் திமோர் இருந்து வந்தது. போர்த்துக்கல் காலனித்துவம் விலகியதும் இந்தோனிசியாவால் கிழக்குத் திமோர் ஆக்கிரமிக்கப்பட்டது.

அப்போதிருந்தே தமது தலைவிதியை தாமே நிர்ணயிக்கும் சுயநிர்ண உரிமைக்காக கிழக்கு திமோர் மக்கள் வீரம் செறிந்த போராட்டத்தை நடத்தி வருகின்றனர்.

கிழக்கு திமோரில் தற்போதுவரை இரண்டு இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் இந்தோனிசிய ஆக்கிரமிப்பு படையினரால் கொன்று குவிக்கப்பட்டுள்ளனர்.

இழப்புக்கள் பெரும் துயரங்கள் என்பவற்றை எதிர்கொண்டு தளராது போராடிய பின்பே கிழக்கு திமோர் பிரச்சனையில் ஐ.நா.சபையும் வெளி உலகமும் தலையிட்டுள்ளன.

30.08.99 அன்று கிழக்குத் திமோரில் ஐ.நா.சபையினால் வாக்கெடுப்பு ஒன்று நடத்தப்பட்டது. இந்த வாக்கெடுப்பில் 78.5 வீதமான கிழக்குத் திமோர் மக்கள் தமது நாட்டை தாமே ஆளுகின்ற, தமது தலைவிதியை தாமே நிர்ணயிக்கின்ற சுயநிர்ணய உரிமை வேண்டும் என்று வாக்களித்துள்ளனர்.

இலங்கைத் தீவிலும் போர்த்துக்கல் காலனித்துவ ஆட்சியில்தான் 1619இல் யாழ்ப்பாண இராச்சியம் கைப்பற்றப்பட்டது. 1621இல் யாழ்ப்பாண மன்னன் சங்கிலியனுக்கு மரணதண்டனை வழங்கப்பட்டது. யாழ்ப்பாண இராச்சியத்தை 35 ஆண்டுகாலம் போர்த்துக்கேயர்கள் ஆண்டு வந்தனர்.

எனினும் 1832ம் ஆண்டுவரை வன்னி தமிழ் இராச்சியம் அந்நியப் படையெடுப்புக்களை வெற்றிகரமாக முறியடித்து நின்றது.

பிரிட்டிஷ் படைகள் 1815இல் கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றிய பின்னரும் பண்டாரவன்னியன் தலைமையில் வன்னி இராச்சியம் பிரிட்டிஷ் படைகளை எதிர்த்து போராடியது. இறுதியில் 1832ம் ஆண்டில்தான் வன்னியின் தமிழ் இராட்சியத்தையும் பிரித்தானியர்கள் கைப்பற்றினார்கள். அதன்பின்னரே இலங்கைத்தீவு முழுவதையும் ஒரே நாடகாகப் பிரகடனம் செய்தனர்.

எப்படியிருப்பிலும் போர்த்துக்கல் காலனியாக மாறியதன் பின்பே இங்கும் தமிழ் மக்களது பாரம்பரிய தாயகம் சிங்கள மக்களது தேசத்துடன் இணைக்கப்படும் முயற்சிகளுக்கு வழிகோலப்பட்டது.

அந்த வகையில் கிழக்கு திமோர் பிரச்சனையுடனும், இலங்கைத் தமிழர் பிரச்சனையிலும் போர்த்துக்கல் சம்பந்தப்பட்டுள்ளது. <u>அதுமட்டுமன்றி இலங்கைத்தீவில் உள்ள தமிழ் பேசும் மக்களும், கிழக்கு திமோர் மக்களைப் போன்று, அவர்களது சம்மதமின்றியே சிங்கள தேசத்துடன் ஒன்றாக்கப்பட்டனர்.</u>

> **கொசோவா—**
> **கிழக்குத் திமோர் பிரச்சனைகளும் அவற்றுக்கான தீர்வுகளும் தமிழ்பேசும் தரப்பின் சுய நிர்ணய உரிமை போராட்டத்துக்கு சாதகமான நிகழ்வுகளாகும்!**

எனவே கிழக்கு திமோர் மக்களுக்குள்ள சுயநிர்ணய உரிமை தமிழ் பேசும் மக்களுக்கும் உண்டு. தாம் எவ்வாறு வாழவேண்டும் என்பதை தமிழ் பேசும் மக்கள்தான் தீர்மானிக்க வேண்டுமே அல்லாது சிங்கள மக்களோ, சிங்கள ஆட்சியாளரோ தீர்மானிக்க முடியாது என்று கருத்து தற்போது வலுப்பெற்றுள்ளது.

<u>கொசோவா, கிழக்குத் திமோர் பிரச்சனைகளும், அங்கு உலக நாடுகளது தலையீடுகளும் இங்கும் மூன்றாம் தரப்பு தலையீட்டுக்கான சூழல்களையே உருவாக்கி வருகின்றன.</u>

இத்தகைய சூழல்கள் இலங்கை ஆட்சியாளருக்கும், வெளிநாட்டு அமைச்சுக்கும் பிடித்தமான நிகழ்வுகளல்ல.

இதனால்தான் இலங்கை இனப்பிரச்சனையை தமது பொதியால் தீர்த்துவிடலாம் என்றும், பயங்கரவாதப் பிரச்சனைதான் இங்குள்ளது என்றும் தந்திரமாக கதையளந்து வருகிறார்கள்.

இக் கதைகளை செம்மணிப் புதைகுழி விவகாரம் தகர்த்தெறிந்துள்ளது.

அண்மையில் புதுக்குடியிருப்பில் மேற்கொள்ளப்பட்ட விமானத் தாக்குதலும், 22 அப்பாவி குடிமக்கள் கொல்லப்பட்டமையும் இலங்கை ஆட்சியாளருக்கு மற்றொரு பேரிடியாகும்.

இப் படுகொலைத் தாக்குதலை மூடிமறைக்க கூறப்பட்ட காரணங்களும், நியாயப்படுத்தல்களும் உலக அரங்கில் பொல்லைக் கொடுத்து அடிவாங்கிய கதையாக முடிந்துள்ளன.

இந்திய சரக்குக் கப்பலை தாக்கிவிட்டு புலிகளது ஆயுதக் கப்பலைத் தாக்கியதாக ஜனாதிபதிச் செயலகமே முன்பு அறிக்கை வெளியிட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

எனவே, படைத்தரப்புத்தான் தவறான நியாயப்படுத்தலை முன்வைத்ததாகக்கூறி, ஆட்சியாளரின் பங்கினை குறைத்து மதிப்பிட்டுவிட முடியாது.

ஆனால் தமிழ்க் கட்சிகள் வழக்கம்போல ஜனாதிபதியிடம் முறையிட்டு நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளன. எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படப் போவதில்லை என்பதை இப்போதே திட்டவட்டமாகக் கூறிவிடலாம்.

தற்போதைய ஆட்சியிலும் குண்டு வீச்சுக்கள் நடப்பது இது முதல் முறையல்ல. 1995ம் ஆண்டு முன்னேறிப் பாய்ச்சல் நடவடிக்கையின்போது குடிமக்கள் நவாலி சென் பீற்றர்ஸ் தேவாலயப் பகுதியில் புகலிடம் தேடியிருந்தனர். அங்கு புக்காரா குண்டு வீச்சு நடத்தியது.

குழந்தைகள், பெண்கள் உட்பட 126 பேர் உடல் சிதறிப் பலியாகியிருந்தனர். இக் குண்டுத்தாக்குதல் தொடர்பாக விசாரிக்கப்படும் என்று ஜனாதிபதி உத்தரவாதம் வழங்கியிருந்தார். நான்கு வருடங்களாகியும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாதது ஒருபுறமிருக்க, நஷ்ட ஈடு கூட வழங்கப்படவில்லை.

இதேபோல வன்னியில் கிறிஸ்தவ தேவாலயம் ஒன்று குண்டுத் தாக்குதலுக்கு உள்ளானபோதும்,அது பற்றி விசாரிக்கப்படும் என்று கிறிஸ்தவ மதகுருமாருக்கு ஜனாதிபதி உறுதி கூறியிருந்தார்.

<u>இவ்வாறான உறுதிமொழிகள் யாவுமே காற்றில் பறந்துள்ளன. வெளியுலக கண்டனங்ளைத் தவிர்க்கவே இவ்வாறான உறுதிமொழிகள், உத்தரவாதங்கள் வழங்கப்படுவது வழக்கமாகும்.</u>

இம்முறை சர்வதேச செஞ்சிலுவைச்சங்க அலுவலகம் மட்டும் புதுக்குடியிருப்பில் இருந்திருக்காது விட்டால் பலியான 22 பொதுமக்களும் புலிகள்தான் என்று சாதித்திருப்பார்கள்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமும், சர்வதேச மன்னிப்புச் சபையும் வாய் திறந்த பின்னர்தான், ஒருவேளை தவறுதலாக நடந்திருக்கலாம் என்று சமாளிக்கப் பார்த்தனர்.

எனினும் இந்தச் சமாளிப்பு பயன் அற்றுப் போய்விட்டது. முழுப் பூசணிக்காயை ஒரு கோப்பை சோற்றுக்குள் மறைக்க ஆட்சியாளர்கள் முயற்சி செய்தனர் என்றே உலகம் குறித்துக் கொண்டது.

<u>இலங்கை அரசின் சமாதான தோற்றப் பாட்டுக்கு விழுந்துள்ள மற்றொரு பேரிடிதான் புதுக்குடியிருப்புத் தாக்குதலாகும்.</u>

பிரிட்டனில் இலங்கைத் தமிழர்கள் சிலர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததுக்காக இலங்கை வெளிநாட்டமைச்சு மிகவும் உருக்கமாக அறிக்கைகள் வெளியிட்டிருந்தது.

பிரிட்டிஷ் குடி மக்களுக்கு புலிகளால் ஆபத்து என்றும் கரிசனப்பட்டிருந்தது.

ஆனால் இலங்கைத் தீவில் அப்பாவிக் குடிமக்கள் குண்டு வீச்சுக்களால் அடிக்கடி கொல்லப்படுவது தொடர்பாக வெளிநாட்டமைச்சு என்ன விளக்கம் கூறப்போகிறது? "எங்கள் குடிமக்களைப் பற்றி கவலைப்படுவது இருக்கட்டும், உங்கள் நாட்டு மக்களை முதலில் காப்பாற்றுங்கள்" என்று பிரிட்டன் கூறினால் முகத்தை எங்கு கொண்டு போய் வைப்பது?

மொத்தத்தில், இலங்கை அரசாங்கமும், வெளிநாட்டமைச்சும் இராணுவத் தீர்வு முனைப்பை மூடிமறைக்க தொங்கவிட்டிருந்த சமாதானத்திரையை, அதே அரசின் இராணுவ நகர்வுகளும், தாக்குதல்களுமே அறுத்தெறிந்து வருகின்றன. இது தவிர்க்க முடியாததேயாகும். ■

## சந்திக்கு வராத சங்கதிகள்

**நக்கீரன்**

தமிழ்க் கட்சிகளை உதைக்கும் படலம் வெகு தீவிரமாக ஆரம்பமாகியுள்ளது.

தமிழ்க் கட்சிகளுக்கு எவ்வாறான முடிவு காத்திருக்கிறது என்பதற்கு நிகழ்கால உதாரணங்கள் மிகச் சிறந்த முன்னறிவிப்புக்கள்.

15.09.99 அன்று வவுனியாவில் புகையிரத நிலைய வீதியில் விசேஷ அதிரடிப்படையினர் சோதனையிட்டுக் கொண்டிருந்தனர்.

அவ்வழியே வாகனத்தில் வந்த ஈ.பி. ஆர். எல்.எ.்.ப் உறுப்பினரை கீழே இறங்குமாறு அதிரடிப்படையினர் கூறினார்கள்.

"நான் ஈ.பி.ஆர்.எல்.எ.்.ப். உறுப்பினர். எதற்காக இறங்கவேண்டும்?" என்று அந்த உறுப்பினர் கேட்க, அவரை தூக்கி எடுத்து, தெருவில் வைத்து நையப்புடைத்தார்கள்.

இப்படியொரு சம்பவம் நடைபெற்றதாகவே ஈ.பி.ஆர்.எல்.எ.்.ப். மூச்சுக் காட்டவில்லை.

இதே ஈ.பி.ஆர்.எல்.எ.்.ப். குழுவினர் தான் புலிகள் தும்மினால்கூட ஜனநாயக விரோதம் என்று விழுந்தடித்து அறிக்கைகள் விடுவதுண்டு.

வவுனியாவில் படையினரால் பலியான ஈ.பி. ஆர்.எல்.எ.்.ப். உறுப்பினரையும் தற்போதும் பயங்கரவாதி என்றே பிடிவாதமாக கூறிவருகிறது படைத்தரப்பு.

வவுனியாவில் புளொட் உறுப்பினர்கள் பலர் கைதாகி உதைபட்டுள்ளனர். இதே புளொட் பொது மக்களைப் பிடித்து வதைமுகாம்களில் வைத்திருந்தபோது படையினர் தலையிடவில்லை.

தமது முகாமில் இருந்தவர்களை பகிரங்கமாக விடுதலை செய்து, தாம் வதை முகாம் நடத்துவதை உறுதி செய்தபோதும் படையினர் பார்த்துக் கொண்டிருந்தனர்.

மாணிக்கதாசனின் மரணத்தின் பின்னர் புளொட்டுக்குள் புலிகளது ஊடுருவல் இருப்பதாக சந்தேகித்ததும்தான், புளொட் உறுப்பினர்களை சந்தேகத்தோடு நடத்த ஆரம்பித்துள்ளனர். கைதுகளும் நடந்துள்ளன.

இதுவரை காலமும் புளொட் வவுனியாவில் தமக்காக செய்த கொலைகளை, கைதுகளை, காவலரண் பணிகளை எல்லாம் ஒரே வாரத்தில் மறந்துபோனார்கள்.

ஏற்கனவே ரெலோவுக்கும் இதுதான் நடந்தது வவுனியாவில்.

நேற்று: ரெலோ, இன்று: புளொட், ஈ.பி. ஆர்.எல்.எ.்.ப்... நாளை?

***

## சமாதான நகரும், வேட்டோசைகளும்!

எத்தனையோ நிகழ்வுகள், சாதுரியமான காய் நகர்த்தல்கள் நடந்து கொண்டிருக்கின்றன.

'தீயதைக் கேளாதே, தீயதைப்பாராதே, தீயதைப் பேசாதே' என்று காந்திப் பொம்மைகள் பார்த்திருக்கிறோம்.

அந்தபொம்மைகள் போலத்தான் தமிழ்க் கட்சிகளும் கண், காது, வாய் மூடிக் குந்தியிருக்கின்றன.

வலிகாமம் காணிச் சுவீகரிப்பு திட்டம் தொடர்கிறது. புதிய வர்த்தமானி அறிவித்தலும் வெளியிடப்பட்டுள்ளது.

திருமலையை சமாதான நகராக பிரகடனம் செய்துவிட்டனர். யுனெஸ்கோ நிறுவனம்தான் இப்பிரகடனத்தை செய்தது என்பது உண்மையே. ஆனால் இதற்கு பின்னணியில் நின்று தூபம் போட்டவர்கள் பேரினவாத நலன் விரும்பிகளே.

சமாதான நகர் என்பது திருமலையை சிங்கள நகராக்கும் முயற்சிதான். எந்த எதிர்ப்பும் இல்லாமல், சமாதானப் போர்வைக்குள் திருமலையை சிங்கள நகராக்க பேரினவாதிகள் விரும்புகின்றனர்.

திருமலையில் மூவின மக்களும் அமைதியாக வாழ்கின்றனர் என்று அங்கீகாரம் பெற்றபடி, ஓரின மக்களுக்கு திருமலையை சொந்தமாக்குவதே இறுதி இலக்கு.

சமாதான நகர் பிரகடன விழாவிற்கு தமிழ் எம்.பிகள், முக்கிய பிரமுகர்கள் எவரும் அழைக்கப்படவும் இல்லை.

சமராக இருந்தால் என்ன? சமாதானமாக இருந்தால் என்ன, தங்கள் நோக்கத்தை நிறைவேற்றத்தான் பயன்படுத்துகிறார்கள். சமாதானம் மூலமாக இலங்கை முழுவதையும் சிங்கள பௌத்த நாடாக்க முடியுமானால் இலங்கை முழுவதையும்கூட சமாதான பூமியாக பிரகடனப்படுத்த பேரினவாதிகளே முன்நிற்பார்கள் என்பதும் உண்மைதான்.

•••

சமாதான நகராக திருமலையை பிரகடனம் செய்துள்ளதால் புலிகளது தாக்குதல்கள் அங்கு அதிகமாகும் வாய்ப்பு இருக்கிறது.

திருமலை நகரிலும் புலிகளது பிஸ்டல் குழுவினர் உட்பட தாக்குதல் அணியினர் பல்வேறு ரூபங்களில் ஊடுருவியுள்ளனர்.

திருமலையை சமாதான நகராகப் பிரகடனம் செய்ய முன்பாக, நகரில் புலிகள் தாக்குதல்களில் ஈடுபடுவதை அங்குள்ள தமிழ்பேசும் மக்கள்கூட விரும்பாதிருந்தனர்.

சமாதான நகர் பிரகடனம் திருமலையில் உள்ள தமிழ்பேசும் மக்களையும் கடும் அதிருப்திக்கு உள்ளாக்கியுள்ளது. இதனால் புலிகளுக்கு நகரில் உள்ள பொதுமக்களிடமிருந்தும் ஆதரவு கிடைக்கக் கூடிய சூழல் இருக்கிறது.

சமாதான நகர் பிரகடனத்திற்கு எதிரான முதல் வேட்டு 16.09.99 அன்று கிண்ணியாவில் தீர்க்கப்பட்டுள்ளது. இரு பொலிசார் பலியாகினர்.

திருமலை நகரில் மட்டுமன்றி திருமலை மாவட்டம் எங்கும் புலிகள் தாக்குதல்களை தீவிரப்படுத்த உள்ளதாகவே தகவல்கள் கூறுகின்றன. ○

# இடி அமீன்

"உன்னை என் மனைவியாக்க முடிவு செய்திருக்கிறேன்!" என்று அமீன் கூறியதும் சாரா கலங்கிப்போனாள்.

தன்னை மனைவியாக்க அமீன் விரும்புவான் என்று சாரா நினைக்கவில்லை. பலவந்தமாக என்றாலும், தன்னை அனுபவித்துவிட்டு அனுப்பி விடுவான் என்றே நினைத்திருந்தாள்.

அதனால் அமீன் மனைவியாக்க விரும்புவதாகக் கூறியதும் அதிர்ச்சியுற்றாள்.

**"என்ன தயக்கம்? என்னவாக இருந்தாலும் மறைக்காதே. என்னிடம் கூறிவிடு!"** என்றபடி அமீன் அவளுக்கு நெருக்கமாக நின்றான்.

சாரா தன் தைரியம் எல்லாம் திரட்டி, உண்மையைக் கூறினாள்;

"எனக்கு ஒரு காதலர் இருக்கிறார். நாங்கள் இருவரும் விரைவில் திருமணம் செய்யப்போகிறோம்..." என்று கூறி முடிப்பதற்கு இடையே பாதி உயிர் போய்விட்டது.

அமீன் முகத்தில் குரூரமான கோபம் தோன்றி மறைந்தது. சட்டென்று வழக்கம் போல இடிச்சிரிப்பை வெளியிட்டான்.

**"காதல்தானே? பரவாயில்லை மறந்துவிடு. காதலனைத் துறந்துவிடு. என்னோடு இங்கேயே இருந்துவிடு!"** என்று நாடக பாணியில் சிரிப்போடு பேசினான்.

சாரா தயங்கித் தயங்கி அடுத்த குண்டையும் போடத் தீர்மானித்தாள். அப்படியாவது அமீனிடம் இருந்து மீண்டுவிடலாமே என்று நினைத்தாள்.

"நான்.. நான் இரு மாதக் கருவை வயிற்றில் சுமக்கிறேன்;" என்றாள்.

அமீனின் சிரிப்பு உதட்டில் உறைந்தது. அவளை முறைத்தபடி, அவளது தோள்களில் கைகளை வைத்து அழுத்தியபடி, அவளது கண்களுக்குள் எதையோ தேடுவதுபோலப் பார்த்தான்.

அவளுக்கு கண்களை இமைக்கவே பயமாக இருந்தது. அமீனது கைகள் அவளது இரு தோள்களையும் அழுத்தியதில் வலித்தது. முரட்டு மனிதனிடம் தான் சிக்கியிருப்பதை அந்த ஒரு பிடியில் இருந்தே புரிந்து கொண்டாள் சாரா.

**"கண்களுக்கு பொய் பேசத் தெரியாது. அதுதான் உன் கண்களுக்குள் விடை தேடினேன். நீ பொய் சொல்லவில்லை. நம்புகிறேன்!"** என்று கூறிய அமீன், சட்டென்று தன் கையால் அவள் வயிற்றை அழுத்தி பிசைந்தான்.

**"இப்படியே கருவைக் கலைத்துவிடட்டுமா!"** என்றான்.

"வேண்டாம்" என்று கைகூபினாள் சாரா.

**"அப்படியானால் நீ எனக்கு வேண்டுமே!"** என்றபடி அவளை தன்னோடு இறுக்கி அணைத்துக்கொண்டான்.

சாரா பணிந்தாள். எதிர்ப்பு எவ்விதத்திலும் பயனளிக்காது என்பது அவளுக்குத் தெரியும்.

அவளது முகத்தை தன் கைகளில் ஏந்தி, அவளது தாடையை பிடித்துக்கொண்டு உதடுகளை கவ்வினான். சாரா அப்படியொரு முத்த ஆவேசத்தை அதற்கு முன்னர் சந்தித்ததில்லை. அவளுக்கு உதடுகள் வலித்தன.

அவளது மேல் உதட்டை அமீன் கடித்துவிட்டான். ஆழமான கடி. அதனால் உதட்டில் இருந்து இரத்தம் கசிந்தது. அவனது பற்கள் பதிந்த இடத்தில் தான் வலித்தது.

அவள் வெளியே சொல்ல முடியாது வலியில் உள்ளூரத் தவிப்பதை அமீன் இரசித்தான். அவளது உதடுகளை தன் விரலால் தடவினான்.

**"இரத்தம். இந்த சுவை எனக்குப் பிடிக்கும் தெரியுமா? இப்போது பார்?"** என்றவன், இரத்தம் கசிந்த அவளது மேல் உதட்டை தன் உதடுகளால் கவ்வி உறிஞ்சினான். நாவினால் வருடினான்.

'சாராவுக்கு மரண பயம் வந்துவிட்டது. இரத்தம் குடிக்கும் பிசாசு ஒன்றிடம் வசமாகச் சிக்கி விட்டேனே' என்று அவளது இதயம் பந்தயக் குதிரை வேகத்தில் துடித்தது.

**"என்ன பயந்துவிட்டாயா?"** என்று கேட்டான் அமீன். அவனைப் பார்க்கவே திகில் படங்களில் வரும் இரத்தக் காட்டேரி போல இருந்தது.

சாராவுக்கு உடம்பு முழுவதும் கிடுகிடுவென்று ஆடியது.

**"நான் எதிரிகளுக்குத்தான் பயங்கரமானவன். உன்னைப்போன்ற அழகான பெண்களுக்குப் பிரியமானவன். ஒருமுறை என்னைக் கட்டிலில் சந்தித்தால், பின்னர் நீயாகவே தேடி வருவாய்!"** என்று கூறியபடியே அவளை தன் கைகளில் தூக்கிக்கொண்டான்.

அப்படியே கொண்டு சென்று பிரமாண்டமான கட்டிலில் வீசினான். சாரா திடீரென்று அழத் தொடங்கிவிட்டாள்.

தன் உடைகளை களைந்த அமீன், **"அழுதுகொண்டே இரு. நான் குளித்துவிட்டு வருகிறேன்!"** என்றான். அவள் முன்பாக முழு நிர்வாணமாக நின்றான்.

சாரா கண்களை மூடிக்கொண்டாள். அமீன் இடியாகச் சிரித்தான்.

அவன் குளிக்கச் சென்றதும் சாரா அந்த அறையில் இருந்து தப்பிக்க வழி இருக்கிறதா என்று பார்த்தாள். இல்லை. தொலைபேசி இருந்தது. தன் காதலனுடன் தொடர்பு கொள்ளலாமோ? என்று நினைத்தாள். வேண்டாம் என்று எச்சரித்தது மூளை.

அவன் தன்னைத்தேடி இங்கே வந்தால் அமீனின் காவலர்கள் அவனைக் கொன்றுவிடுவார்கள். அதனால் வேண்டவே வேண்டாம், அவனுக்குத் தெரியவே வேண்டாம் என்று தீர்மானித்தாள்.

குளியல் அறையில் இருந்து அமீன், **"சாரா வா இங்கே!"** என்று அழைத்தான்.

கட்டிலில் இருந்து இறங்கி குளியலறைக்கு அருகே போனவளை எட்டிப்பிடித்து உள்ளே இழுத்தது அமீனின் இரும்புக் கரம்.

உள்ளே இழுக்கப்பட்டவள் உரிகப்பட்டாள். உரிக்கப்பட்டவள் அந்த குளியலறையிலேயே அமீனின் வக்கிர ஆசைகளுக்கு வடிகாலானாள். அமீன் சொன்னதற்கெல்லாம் அவள் கட்டுப்பட்டாள். சொன்னதையெல்லாம் செய்தாள்.

**"உனக்கு என்னைப் பிடித்திருக்கிறதா?"** என்று கேட்டான் அமீன்.

"ஆம்" என்றாள்.

**"அதற்கு ஏன் இப்படி சிக்கனமாக பேசுகிறாய்? நான் பணத்தையே தண்ணீராகச் செலவு செய்பவன். எனக்கு மனைவியாகப் போகும் நீ எதிலும் சிக்கனத்தைப் பார்க்காதே. வார்த்தைகளையும்தான்!"** என்று அவள் முதுகில் ஓங்கித் தட்டினான். ஈர உடல் பதைத்தது.

அவளது உடைகள் யாவும் ஈரமாகிவிட்டதால், தன் உதவியாளனை மெடீனாவிடம் அனுப்பி, அவளது ஆடைகளைப் பெற்று சாராவுக்கு கொடுத்தான்.

அந்த உடை வரும்வரை போர்வையைத் தான் சாரா உடலில் சுற்றி இருந்தாள்.

தவளை சூப் குடித்த அமீன் அவளிடமும் குடிக்குமாறு கொடுத்தான். அவளுக்கு அது தவளைசூப் என்று தெரியாது. உடல் அசதியாக இருந்ததால் அதனை வாங்கிக் குடித்தாள். நன்றாகத்தான் இருந்தது.

**"இன்னொரு கப் குடிக்கிறாயா? தவளை சூப் உடம்புக்கு நல்லது,"** என்று அமீன் கூறிய போதுதான், உண்மை தெரிந்து, குளியலறைக்கு ஓடி குபுக்கென்று வாந்தி எடுத்தாள் சாரா.

அமீன் இடி இடியாகச் சிரிசிரியென்று, சிரிக்கத் தொடங்கிவிட்டான்.

சாராவை தனது மெர்சிடிஸ் பென்ஸ் கார்களில் ஒன்றில் அனுப்பிவைத்தான் அமீன்.

சாராவிடம் அவளது காதலன் யார் என்று அமீன் கேட்கவில்லை.

சாரா சென்றதுமே புலனாய்வுப் பிரிவு பொறுப்பதிகாரியுடன் தொடர்புகொண்ட

**தருவது ரசிகன்**

அமீன், சாராவின் காதலன் பற்றிய விபரங்களை உடன் திரட்டித் தருமாறு கட்டளையிட்டான்.

மறுநாளும் சாராவை அழைத்துவர கார் அனுப்பினான். வந்திருப்பது ஜனாதிபதி மாளிகைக்குரிய கார் என்பது தெரிந்ததால், சாரா வீட்டுக்கு அயலில் உள்ளவர்களுக்கு விஷயம் புரிந்துவிட்டது.

தொடர்ந்து மூன்று நாட்கள் கார் வந்து போய்கொண்டிருக்க, அயலவர்கள் சாராவைக் கண்டாலே ஒதுங்கிப்போக ஆரம்பித்தனர்.

நேராக எதுவும் கூற முடியாது. பயம். மறைமுகமாக சாராவையும் அவள் குடும்பத்தையும் கேலியாகப் பேசத் தொடங்கிவிட்டனர்.

அதனால் சாரா குடும்பத்தினர் வேறு வீடு பார்த்தார்கள். தனக்கு கார் அனுப்ப வேண்டாம் என்று சாரா மன்றாட்டமாகக் கேட்டுக்கொண்டாள்.

வீடு மாறிய நாளன்று நள்ளிரவில் தொலைபேசி ஊழியர்கள் வந்து கதவைத் தட்டினார்கள்.

உடனடியாகத் தொலைபேசி வசதி செய்து

## உண்மைத் தொடர்

## அதிர் இடி 80

**கடந்தவாரம்**

**இசைக்குழுவில்**
**பாடகியாக இருக்கும்**
**சாராவை அமீன்**
**தன் மனைவியாக்க விரும்புகிறான்.**
**அவளுக்கு ஒரு காதலன் உள்ளான்.**
**அவன் மூலம் அவள்**
**கர்ப்பமாயும் உள்ளாள்.**

**இனி...**

கொடுக்குமாறு அமீனின் உத்தரவு. அதனால் தூக்கத்தை விரட்டிவிட்டு இரவோடு இரவாக ஓடிவந்து தொலைபேசி இணைப்புக் கொடுத்தார்கள்.

இணைப்புக் கொடுத்த சில நிமிடங்களுக்குள் தொலைபேசி அலறியது. சாராதான் எடுத்தாள். மறுமுனையில் "ஹலோ" என்றான் அமீன்.

சாராவின் குரலைக் கேட்ட பின்னர் அமீன் சொன்னான்; **"பார்த்தாயா சாரா, இந்த நாட்டிலேயே இவ்வளவு விரைவாக தொலைபேசி இணைப்புப் பெற்ற ஒரே ஒரு ஆள் நீதான்! ஏன் இந்த மரியாதை தெரிகிறதா? நீ என் நாளைய மனைவி. இன்றையக் காதலி!"** சொல்லிச் சிரித்து வைத்துவிட்டான்.

சாராவுக்கும் மெல்ல மனது மாறத்தொடங்கியிருந்தது. சபலம் தலை தூக்கியது.

பவிசான வாழ்க்கை. கேட்பதெல்லாம் கிடைக்கும். அதிபரின் மனைவி என்ற கௌரவமும் கிடைக்கும்.

காதலனா, அமீனா? என்ற கேள்வி அவள் மனதைக் குடைந்தது. ஒரு இரவு முழுக்க தூக்கம் இல்லாது யோசித்தாள். தலை வலித்தது. விடை கிடைத்தது.

காதலன் அவளைச் சந்திக்க வந்த போது, "இனிமேல் என்னைச் சந்திக்க வராதே. உன் உயிருக்கே ஆபத்து நேரலாம். தயவுசெய்து போய்விடு. மற, எல்லாவற்றையும் சுத்தமாக மற!" என்று கூறினாள்.

"அப்படியானால் உன் வயிற்றில் வளரும் குழந்தை?" என்று அவன் கேட்டான்.

'அதனைப்பற்றி நீ கவலைப்படாதே! உன் உயிரைப் பற்றிக் கவலைப்படு. போ! போய்விடு!" என்று கூறினாள் சாரா.

அவனுக்கு இருந்த சந்தேகம் உறுதியானதால், "அதிபரின் மனைவியாக ஆசை வந்துவிட்டதா?" என்று கேட்டான். அவளை வாயில் வந்தபடி திட்டித் தீர்த்துவிட்டு வெளியேறினான்.

அவனிடம் ஒரு மோட்டார் சைக்கிள் இருந்தது. அதில்தான் சாராவின் வீட்டுக்கு சென்றுவிட்டு திரும்பிக்கொண்டிருந்தான்.

கறுப்பு நிற வேன் ஒன்று அவனைத் தொடர்ந்து வந்தது. ஆள் நடமாட்டம் குறைந்த பகுதியில், அவனை முந்திச் சென்று தெருவின் குறுக்கே நின்றது.

அவன் சுதாகரித்துக் கொள்வதற்கு முன்னரே, வேனில் இருந்து குதித்தவர்களால் சூழப்பட்டான். தூக்கி வேனுக்குள் எறியப்பட்டான். மோட்டார் சைக்கிளையும் வேனுக்குள் தூக்கிப் போட்டார்கள்.

அதன்பின்னர் அவன் பற்றிய தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை. உடல்கூட எங்கும் கிடைக்கவில்லை. மோட்டார் சைக்கிள் போன இடமும் தெரியவில்லை.

அவன் பயந்து ஓடி விட்டதாகவே சாரா முதலில் நினைத்தாள். ஆனால் அமீனின் பேச்சில் இருந்துதான் அவன் கொல்லப்பட்டுவிட்டான் என்பதை அறிந்து கொண்டாள்.

**"உன் காதலன் இனி எப்போதும் திரும்பி வரமாட்டான். ஆகவே நீ நிம்மதியாக என் மனைவியாகலாம்!"** என்று கட்டிலில் வைத்து உல்லாசமான மனநிலையில் சாராவிடம் கூறினான் அமீன்.

அவனது மார்பு ரோமங்களை கோதி விட்டபடி சாரா கேட்டாள்: "கொன்றுவிட்டீர்களா?"

**"உனக்காக"** என்று மட்டும் கூறினான் அமீன்.

சாராவுக்கு காதலனை நினைக்க கவலையாக இருந்தது. அவனைவிட்டு விலக நினைத்தாலும், இத்தனை பெரிய தண்டனையை அவனுக்கு அமீன் கொடுப்பான் என்று அவள் நினைக்கவேயில்லை.

சில மாதங்களின் பின்னர் சாராவை தனது மாளிகையிலேயே இருக்குமாறு கூறிவிட்டான் அமீன். சாராவின் பிரசவத்தை கவனிக்க இரண்டு தாதிகள் அமர்த்தப்பட்டனர்.

மாளிகையிலேயே சாராவுக்கு பிரசவமானது. எவ்வித பிரச்சனையுமின்றி குழந்தை பிறந்தது.

1974ம் ஆண்டு டிசம்பர் மாதம் கிறிஸ்மஸ் தினத்தன்றுதான் சாராவுக்குக் குழந்தை பிறந்திருந்தது.

சுகாதார அமைச்சர் சியம்பா தன் குடும்பத்தினரோடு தேவாலயம் சென்று திரும்பிய போது, அமீனிடமிருந்து தொலைபேசி அழைப்புக் கிடைத்தது.

**"சாராவுக்கு குழந்தை பிறந்துள்ளது. உடனடியாக தாயையும், சேயையும் முலாகோ மருத்துவ மனைக்கு அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்யுங்கள்!"** என்று பணித்தான் அமீன்.


'சுகப்பிரசவம் நடந்திருக்கும்போது எதற்காக தாயையும், சேயையும் மருத்துவ மனைக்கு மாற்ற வேண்டும்?' சியம்பா குழம்பினார்.

அவரது குழப்பத்திற்கு ஜனாதிபதி மாளிகையில் விடை கிடைத்தது.

(இடி தொடரும்)



## ஜோடி மாற்றம்



இந்தியக் கிரிக்கெட் வீரர் ஜடேஜா பற்றிய கிசுகிசுக்களுக்கு குறைவே இல்லை. அவரும் அவற்றைப் பற்றிக் கவலையே படாமல் இந்திப் பட நடிகைகளுடன் சுற்றுகிறார். அடிக்கடி ஜோடிகளை மாற்றிக்கொள்கிறார்.

கார்க்கில் இராணுவ வீரர்களது நலனுக்காக நிதி திரட்ட கபில்தேவ் டில்லியில் கால்பந்து போட்டி ஒன்றை நடத்தினார். அந்த விழாவில் நடிகை ரவீணா ராண்டனுடன் கலந்து கொண்டார் ஜடேஜா.

தமிழ் நாட்டில் சென்னையில் நட்சத்திர கிரிக்கெட் போட்டி நடந்தது. அப்போட்டியில் கலந்து கொள்ள ஜடேஜா அழைக்கப்பட்டார். ரவீணாவை யாரும் அழைக்கவில்லை. ஆனால் ஜடேஜாவுடன் ஒட்டிக்கொண்டு விமானத்தில் வந்திறங்கினார் ரவீணா.

மும்பாயில் விருந்துகள், கேளிக்கைகளிலும் இருவரும் இணைந்தே காணப்படுகின்றனராம்.

## சாவது யார்?



பந்தயங்கள் பல ரகங்களில் உள்ளன. 'இண்டர் நெட்'டில் ஒரு புதுவிதமான பந்தயம் அறிமுகமாகி இருக்கிறது.

கேட்டால் ஆச்சரியப் படுவீர்கள். பந்தயம் யாதெனில், அடுத்த ஒரு வருட காலத்திற்குள் சாகப்போகும் பிரபலம் யார் என்பதுதான் பந்தயம்.

பிரபலங்களது பட்டியல் ஒன்று கொடுத்துள்ளனர். அந்தப் பட்டியலில் உள்ளோரில் முதலில் மரணமாவது யார் என்று கூற வேண்டும்.

பந்தயத் தொகை இருபது டொலர் மட்டும்தான். வெற்றி பெற்றால் ஆண்டு இறுதியில் ஐயாயிரம் டொலர் சுளையாக அள்ளலாம்.

இது போல பந்தயம் கட்டுபவர்கள் குறிப்பிட்ட பிரபலங்களது பட்டியலில் உள்ளவர்களது உடல்நிலை, வயது, வரலாறு போன்றவற்றை உத்தேசித்து பந்தயம் கட்டுகிறார்களாம்.

இண்டர்நெட்டில் இப்படி எத்தனையோ ஆச்சரிய சமாச்சாரங்கள் உள்ளன.

## ஜோடி




படத்திலிருக்கும் ஜோடி 15 வருடமாக இணைபிரியாமல் வாழ்ந்து வருகின்றனர். கணவர் பெயர் சந்தோஷ் சாவ்லா (32) மனைவி பெயர் மஞ்சு. (35)

இந்தியாவில் டில்லியில் படேல் நகரில் இவர்கள் வசித்து வருகிறார்கள். அந்த நகரில் உள்ளோரும் இவர்களுடன் பிரியமுடன் பழகுகின்றனர்.

இவர்களிடம் அப்படி என்ன புதுமை? என்று நீங்கள் கேட்கலாம்.

இருவருமே பெண்கள். திருமணம் செய்து கொண்டு கணவன் மனைவியாக வாழ்கின்றனர்.

சந்தோஷ் சாவ்லா தன்னை ஒரு ஆண் மகன்போல தலைமுடி, உடை விஷயங்களில் மாற்றிக்கொண்டுள்ளார். இவரது பழைய பெயர் சாவ்லாபாய். இந்தத் தம்பதியில் கணவர் இவர்தான்.

இவ்வாறான திருமணங்கள் மேலை நாடுகளில் மட்டுமல்ல, இந்தியாவிலும் நடந்து வருகின்றன. நம்நாட்டிலும் உண்டு.

## பெரிய திரைக்கு



பெரிய திரையில் இருந்து மவுசுபோன நடிகைகள் சின்னத்திரைக்கு செல்வது தான் அநேகமான வழக்கம்.

ஆனால் சின்னத் திரை மூலம் பிரபலமாகி பெரிய திரைக்கு செல்கிறார் ஸ்வர்ணமால்யா. பெயர்தான் வாய்க்குள் நுழையக் கஷ்டம்.

'பாசம்', 'நெஞ்சே நெஞ்சே' போன்ற தொடர்களில் நடிப்பவர் ஸ்வர்ணமால்யா. இந்த இரு தொடர்களும் நம்நாட்டில் 'சக்தி' மூலம் ஒளிபரப்பாகின்றன.

'நெஞ்சே நெஞ்சே' தொடரில் இரு வேடங்களில் நடிக்கிறார். இதுதவிர சன் தொலைக்காட்சியில் 'இளமை புதுமை' என்னும் நிகழ்ச்சியையும் தொகுத்து வழங்குகிறார். அதற்கு பலத்த வரவேற்பு.

ஸ்வர்ணமால்யாவின் அழகும், சுறுசுறுப்பும் மணிரத்னத்தை கவர்ந்துவிட்டது. அவரைக் கொத்திக் கொண்டு சென்று 'அலைபாயுதே' படத்தில் நடிக்க வைத்திருக்கிறார்.

'அலைபாயுதே' படத்தின் பின்னர் பல படங்களில் நடிக்கும் வாய்ப்புக்கள் இவரை நாடி வரலாம். சரி, அதென்ன ஸ்வர்ணமால்யா? அதன் அர்த்தம் 'தங்கமாலை'.

## கில்லாடி கிளின்ரன்

கிளின்ரன் என்றாலே கிளு கிளு ஆசாமி என்று அமெரிக்கப் பத்திரிகைகளே எழுதிவருகின்றன.



பெண்களைக் கண்டால் கிளின்ரன் தன்னை மறந்து தடுமாறிவிடுவார் என்று எழுதுகின்றன.

கிளின்ரனின் லீலைகள் தொடர்பாக குடும்பத்திற்குள் பூசல் இருந்தாலும் அதனை வெளிக்காட்டாமல் இருக்கின்றனர்.

என்னதான் பூசல் இருந்தாலும், எப்படித்தான் விவகாரங்களில் மாட்டினாலும் கிளின்ரனின் சபலம் தீர்ந்தபாடில்லை.

இந்தப் படத்தைப் பாருங்கள். ஒரு பெண்ணைப் பிடித்து அழுத்தமாக முத்தமிடுகிறார் கிளின்ரன்.

இந்தப் பெண் வேறு யாருமல்ல, கிளின்ரனின் மனைவி கிலாரியின் அந்தரங்கச் செயலாளரான கெல்லி கிரெய்கெட் என்பவர்தான் இந்தப் பெண். அந்தப் பெண்ணுடைய பிறந்தநாளுக்குத்தான் இப்படி வாழ்த்துத் தெரிவிக்கிறார் கிளின்ரன்.

## சினிமா தம்பதி



நடிகர் ராம்கியும், நடிகை ராதிகாவின் சகோதரியும், நடிகையுமான நிரோசாவும் காதலர்கள் என்பதும், ராம்கி வீட்டில் நிரோசா இருப்பது பற்றியும் முரசு சினிவிசிட் பகுதியில் தெரிவிக்கப்பட்ட பழைய தகவல்.

தமது காதலை இவர்கள் மறுத்து வந்தனர். தற்போது மறுப்பு புஸ்வாணமாகியுள்ளது. கடந்த வாரம் இருவரும் திருமணம் செய்து கொண்டுவிட்டனர்.


நிரோசாவின் காதலுக்கு அவரது தாயார் எதிராக இருந்தார். அதனால் வீட்டை விட்டு வெளியேறிய நிரோசா ராம்கியின் வீட்டில் வசித்து வந்தார். தற்போது தாயார் பச்சைக்கொடி காட்டியதும் திருமணம் நடந்துவிட்டது.

# தகவல் பெட்டி

## மக்கள் கடல்

தலையா? கடல் அலையா? என்று உண்மையாகவே வியக்கவைக்கும் இந்த மக்கள் கடல் திரண்டிருப்பது நியூயோர்க் கடற்கரையில்! கடலுக்குப் போட்டி!

வெப்பகாலத்தில் கடற்கரையை நாடிச் சென்ற ஆண்களும், பெண்களும் உள்ளாடைகளுடன் மட்டும் அமர்ந்து காற்று வாங்குகின்றனர். இக் கூட்டத்தை அப்படியே புகைப்படம் எடுத்திருப்பதுதான் கமராக்காரரின் திறமை.



## சமையலோ சமையல்




முகத்தைச் சுளிக்காது இதனைப் படிக்க வேண்டும். மெக்சிக்கோ நாட்டில் வெட்டுக்கிளி, எறும்பு, புழு போன்றவற்றை ருசித்து ருசித்து சாப்பிடுகிறார்கள்.

இந்த அயிட்டங்களை சுவையாகவும் வகை வகையாகவும் தயாரிக்க சிறப்பான உணவகங்களும் அங்கு உள்ளன.


படத்தில் காணப்படுவது அவ்வாறான உணவகமும், சமையற் கலைஞர்களும்தான்.

பொரித்த வெட்டுக்கிளி, புழு அவியல், எறும்பு வற்றல், கொசு குழம்பு ஆகிய பலரக அயிட்டங்கள் தான் காணப்படுகின்றன. ஒரு புறம் விற்பனை நடக்கிறது. மறுபுறம் சமையல் நடக்கிறது. கல்யாண சமையல் சாதம் எறும்பு,புழு,கொசு பிரமாதம் என்றுதான் பாட வேண்டியிருக்குமோ!

(பட உதவி. பஸீல் ஒமர்)



## சூறாவளி கோபுரம்




அமெரிக்காவில் கட்டப்பட்டுள்ள கோபுரம் இது. இதன் பெயர் சூறாவளிக் கோபுரம். அமெரிக்காவில் ஓமாஹா என்னும் பகுதியில் சூறாவளி அடிக்கடி ஏற்படுகிறது. அதனால் அங்கு சூறாவளியை முன்கூட்டியே கண்டறியும் நவீன வசதிகளுடன் இந்தக் கோபுரத்தை அமைக்கவுள்ளனர். 672 அடி உயரத்தில், ஸ்டெயின்லெஸ் டீல் தகடுகளால் மட்டும் இதனை உருவாக்கப் போகிறார்கள். இதன் உள்ளே நவீன கருவிகளுடன் வானிலை ஆராய்ச்சி மையமும் இயங்கும். இந்தக் கோபுரத்தின் இன்னொரு விசேஷம் யாதெனில், சூறாவளி வடிவில் இது நிர்மாணிக்கப்படுகிறது. அதன் மாதிரி வடிவம்தான் இது.

## குச்சி டவர்

இது ஈஃபிள் டவர் தான். ஆனால் பற்றி எரியக் கூடிய ஈஃபிள் டவர். என்ன புரியவில்லையா?!

தீக்குச்சிகளால் இதனை கச்சிதமாகத் தயாரித்துள்ளார். சாதாரணமாக நினைத்துவிடாதீர்கள். மொத்தம் 15 ஆயிரத்தி 261 தீக்குச்சிகளால் இதனை உருவாக்கியுள்ளார்.

இந்த சாதனை டவரை உருவாக்கியுள்ளவர் ஜி.ராஜ்குமார் (25) தமிழ்நாடு நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்தவர். குச்சி குச்சி ராக்கம்மா மாதிரி, குச்சி குச்சி டவர்.




## பிரிவினை

சீனாவில் உள்ள ஃப்யூஷோ என்ற இடத்தில் ஒட்டிப் பிறந்த இந்த இரட்டைக் குழந்தைகளை பார்த்தவர்கள் காப்பாற்றுவது கடினம் என்றுதான் நினைத்தனர்.

மார்பு, வயிற்றுப் பகுதிகள் ஒட்டியபடி ஒரே கல்லீரலுடன் இரண்டு குழந்தைகளும் பிறந்திருந்தன. டாக்டர்கள் தன்னம்பிக்கையுடன் அறுவைச் சிகிச்சை செய்தனர். முயற்சி திருவினையானது. வெற்றிகரமாக பிரிக்கபட்டனர்.

கடந்த பெப்ரவரி மாதம் இந்த அறுவைச் சிகிச்சை நடந்தது. ஒரு குழந்தை தற்போதும் மருத்துவமனையில் உள்ளது. அதனை இன்னொரு குழந்தையுடன் வந்து பார்வையிடுகிறார் தாயார்.



## பிரசாந்த் மறுப்பு

முன்னணி இளம் நடிகர்களில் தனிக்கட்டையாக இருப்பவர் பிரசாந்த் மட்டுமே. தற்போது அவருக்கு வீட்டில் ஜோடி தேடுகிறார்கள்.

வெளிநாடுகளில் இருந்து மாப்பிள்ளை கேட்டு தூதுக்கு தூது விடுகிறார்களாம் பலர்.

விஜய் இலண்டன் பெண்ணைக் கைப்பிடித்ததால், பிரசாந்துக்கும் வெளிநாட்டு தமிழர்கள் தூதுவிடுகிறார்கள்.

பிரசாந்தின் பெற்றோருக்கு மகனுக்கு திருமணம் செய்ய ஆசைதான். ஆனால் பிரசாந்த் 'வேண்டாம்' என்கிறார்.

ஐஸ்வர்யா ராய் வந்தால்தான் 'ஆம்' என்பாரா? என்று நீங்கள் நினைக்கக்கூடும். விஷயம் அதுவல்ல. தனது அன்புத் தங்கைக்கு திருமணம் செய்து வைத்த பின்னர்தான் தனது கல்யாணம் என்று கூறிவிட்டாராம் பிரசாந்த்.

## நீளமான பெயர்

பிரபு தற்போது பெரிதும் எதிர்பார்த்துள்ள படம் 'திருநெல்வேலி'. இப்படத்தின் படப்பிடிப்புக்கள் பெரும்பாலும் பூர்த்தியாகிவிட்டன.

இதனையடுத்து பிரபு நடிக்கும் படத்திற்கு கொஞ்சம் நீளமான பெயராகச் சூட்டியுள்ளனர். 'திருப்பதி ஏழுமலை வெங்கடேசா' என்பது தான் படத்தின் பெயர்.

பிரபுக்கு ஜோடி ரோஜா. மற்றும் ஊர்வசி, வடிவேலு, கோவை சரளா எஸ்.வி.சேகர் ஆகியோரும் நடிக்கின்றனர்.

பக்திப் படங்கள் பலவற்றை இயக்கிய இராம நாராயணன் இயக்கத்தில் வெளியாகும் நூறாவது படம் இது. இசை: எஸ்.ஏ. ராஜ்குமார்.

பெயரைப் பார்த்ததும் இதுவும் பக்தி படம் என்று எண்ணிவிட வேண்டாம். திருப்பதி, ஏழுமலை, வெங்கடேசன் ஆகிய மூன்று இளைஞர்கள் பற்றிய நகைச்சுவையான கதையாம்.

## திரையுலக மறுபக்கம் 121

தமிழ்நாட்டிலிருந்து பயன்

# சகுனத்தடை என்று நினைத்தா...

# திட்டமிட்ட திருமணம் நின்று...

பல முன்னணி நடிகைகளை தன் பிடியில் வைத்திருப்பவர்கள் அந்த நட்சத்திர தம்பதி. தாம் விரும்பும் போதெல்லாம் அவர்களை தமது பங்களாவுக்கு அழைத்து, அங்கு வரும் வி.ஐ.பி.களுக்கு விருந்து படைப்பதுதான் அவர்களது வேலை.

நீண்டநாட்களாக இவர்கள் இரண்டெழுத்து நடிகைக்கு அழைப்பு விடுத்து வந்தனராம். முன்னணி நடிகர்கள் இருவரையும் ஆட்டிப் படைத்த நடிகையாச்சே. அதனால் அழைப்பை ஏற்க மறுத்து வந்தார்.

தேக்குமர அதிபரிடம் பல கோடிகளை கறந்த விவகாரத்தில், இவருக்கு சிக்கல் வராமல் செய்தவர் தமிழ்நாட்டின் முக்கிய வி.ஐ.பி. ஒருவர்தான். அவரைத் தனியாகச் சந்தித்து ஒரே இரவில் சரிக்கட்டி விட்டார்.

இப்படியெல்லாம் நினைத்ததை சாதிக்கும் வல்லமையுடன் இருந்ததால், நட்சத்திர தம்பதிக்கு பணியவில்லை.

நேரடியாகவே வி.ஐ.பி.க்கள் தேடி வரும்போது இடைத்தரகர்கள் எதற்கு என்று இரண்டெழுத்து நடிகையின் தாய்க்...

இப்போது நடிகையின் பொற்காலம் பிரகாசம் கு... களும் குறைந்துவிட்டன.

விரைவில் திருமணம் செய்யும் யோசனையும் இ... முன்பாக சம்பாதிக்கக் கூடியதை சம்பாதித்துவிட... விரும்புகிறதாம். இதனால் நட்சத்திரத் தம்பதியின... ஏற்றுக் கொண்டுள்ளனர்.

நட்சத்திர தம்பதி குமார நடிகருக்கும் இரண்டெ... நாட்களாக ஒரு கண். தனது பங்களாவுக்கு வந்த ... பெயரில் உற்சாகபானம் கொடுத்திருக்கிறார். ... உடன்பட வைத்து, தன் நீண்டநாளைய எதிர் பார்...

### மின்சாரத் து...

'உதிரிப்பூக்கள்', 'நெஞ்சத்தைக் கிள்ளாதே' ... போன்ற வெற்றிப் படங்களை இயக்கியவர் ம... நெருக்கமான நண்பர்.

தமிழகப் பிரபல பத்திரிகை ஒன்றில் ... யாருமறியாத தகவல் ஒன்றை எழுதியிருக்... பகுதிகள்:

ரஜினிக்கு டார்க் கலர் பிடிக்கும் ... பிடிக்கும். சில நேரம் என் டார்க் ... என்று அவரே வாங்கிப் ... சட்டையை எனக்கு கழற்றி... ரஜினிக்கு ஒரு சோத... என்று ஓய்வில்லாத ... அவருக்கு டென்ஷ... சரியில்லை என்று ... பலரே கதை ... ரஜினி ... துரோகம் ... மனமுடை... வருச... விட்...



கார்த்திக்-ரம்பா

படம் : உனக்காக எல்லாம் உனக்காக

## அம்மாவின் கட்சியில் விஜயகாந்த் சேருவாரா?

மூன்று மாதத்திற்கு முன்பே நடிகர் எஸ்.எஸ் சந்திரன் அ.தி.மு.கவுக்கு செல்ல இருந்தார். ஜெயலிதா இழுத்தடித்ததால் தேர்தல் பிரசார சமயத்தில்தான் இணைய முடிந்தது.

நடிகர் ராதாரவியும் சந்திரன் கூடப் போய்விட்டார். இவர்களை அம்மாவிடம் அழைத்துப் போனவர் கண்ணப்பன். முன்னாள் அமைச்சரும் சகன்யாவின் முன்னாள் காதலருமான அதே கண்ணப்பன்தான்.

இவர்களை காத்திருக்க வைத்து திருப்பி அனுப்பினாராம் அம்மா. பின்னர் இரண்டு நாள் கழித்து பொதுக்கூட்ட மேடையில் வைத்து இணைத்துக் கொண்டார்கள்.

கட்சியில் சேரும்போதே இந்த மரியாதை என்றால் போகப் போக என்னாகுமோ?

ராதாரவியும், எஸ்.எஸ். சந்திரனும் விஜயகாந்தின் நெருங்கிய நண்பர்கள்.

இவர்கள் இருவரும் அ.தி.மு.கவுக்கு சென்றதால் விஜயகாந்த்தும் அம்மா கட்சிக்குப் போகப்போவதாக கூறப்பட்டது.

ஆனால் விஜயகாந்த் அதனை வன்மையாக மறுத்துள்ளார். "எனக்கு எம்.ஜி.ஆரைப் பிடிக்கும். திராவிட இயக்கங்களைப் பிடிக்கும். நான் கலைஞரின் அபிமானி. அவர் என் தந்தைமாதிரி. மற்றப்படி தற்போதைக்கு நான் அரசியலில் ஈடுபடமாட்டேன்" என்று கூறியிருக்கிறார்.

## பாலுவின் வரவு

இயக்குநரும், ஒளிப்பதிவாளரும், தம்நாட்டுக்காரருமான பாலுமகேந்திராவும் சின்னத் திரையின் பக்கம் சென்றுள்ளார்.

சன் ரி.வி.யில் வாரம் ஒரு சிறுகதையை இயக்கப் போகிறார். சுஜாதா, பட்டுக்கோட்டை பிரபாகர் போன்றோரது சிறுகதைகள் ஒளிபரப்பாக உள்ளன.

இந்த தொலைக்காட்சி படங்களுக்கு இயக்கம் மட்டும்தான் பாலுமகேந்திரா. ஒளிப்பதிவு அவரது மகன் சங்கி மகேந்திரா.

பாலுமகேந்திரா இயக்கும் தொடர்கள் இங்கு சக்தி வழியாக ஒளிபரப்பாகக்கூடும்.

## துணையாக நக்மா

'உயிரிலே கலந்தது' படத்தில் படு குளிர்ச்சியாக நடிக்கிறார் ஜோதிகா. கடற்கரையில் ஜோதிகா குளித்துவிட்டு சூரிய ஒளியில் குளிர்காயும் காட்சிகள் ரசிகர்களை சூடாக்கப் போகிறதாம்.

இக் காட்சிகள் படமாக்கப்பட்டபோது ஜோதிகாவுக்கு துணையாக வந்தது யார் தெரியுமா? நக்மா தான்.

தங்கைக்காக பல வழிகளிலும் உதவுகிறார் நக்மா. அவருக்குத் துணையாகவும் வரத் தொடங்கிவிட்டார். முன்பு போல் அல்லாமல் மெலிந்து காணப்படுகிறார்.



## குஷ்பு கல்யாணம்

குஷ்புவும் இயக்குநர் சுந்தரும் இணைந்து புதிய பங்களா கட்டி வருகிறார்கள். கட்டுமானவேலை முடிந்து பங்களா தயாராகி விட்டதாம். இந்த மாதம் கிரகப் பிரவேசம்.

கிரகப் பிரவேசம் முடிந்ததும் அடுத்த ஆண்டில் திருமணம் நடக்கப்போகிறதாம். மிலேனியத்தில் திருமணம்.

## மி னி சி னி

- 'நீ வருவாய் என' படத்தின் இயக்குநர் ராஜகுமாரன் அடுத்து 'ஒரு தேவதை வந்துவிட்டாள்' என்ற படத்தை இயக்குகிறார். இதில் அருண்குமார்-தேவயானி நடிக்கவுள்ளார்கள்.
- குஷ்பு போலிஸ் அதிகாரியாக நடித்துள்ள 'இன்டிபெண்டன்ஸ்' என்ற மலையாளப்படம் தற்போது 'சிட்டி கமிஷனர்' என்ற பெயரில் தமிழில் மொழிமாற்றப்பட்டு வருகிறது.
- ஜெயராம்-ரஞ்சிதா 'மிஸ்டர் தேவராஜ்' படத்தின் பெயர் முதலில் 'தேவராஜ்', 'வந்தே மாதரம்' என இருமுறை மாற்றப்பட்டது. இப்போது இப்படம் 'இன்றுமுதல்' என்று மறுபடி மாற்றப்பட்டுள்ளது.
- 'ஆனந்த மழை' படத்தை இயக்கிய கருணாகரன் அடுத்து 'கவிதை பார்க்' என்ற தெலுங்குப் படத்தை இயக்கவுள்ளார். இதை நாகார்ஜுன் தயாரிக்கவுள்ளார்.
- அஜித்குமார்-ஜோதிகா நடிக்கும் 'முகவரி' படத்தை துரை என்பவர் இயக்குகிறார். இப்படத்திற்கு வசனம் மட்டும் எழுதுகிறார். 'சொல்லாமலே' படத்தின் இயக்குநர் சசி.
- சுரேஷ் கோபியை வைத்து 'லேலம்', 'பத்ரம்' போன்ற மலையாளப் படங்களை இயக்கிய ஜோஷி, அடுத்து சுரேஷ் கோபியை வைத்து 'வழுன்னோர்' என்ற படத்தை இயக்குகிறார்.
- திரையுலகை விட்டு ஒதுங்கி சின்னத்திரைப் பக்கம் தனது கவனத்தைச் செலுத்திய விஜோதினி, தற்போது கார்த்திக்கின் 'உனக்காக எல்லாம் உனக்காக' படத்தில் நடிக்கிறார்.
- 'உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன்' படத்திலிருந்து நகைச்சுவை வேடங்களில் நடித்து வரும் ரமேஷ்கண்ணா பிரசாந்தின் 'ஜோடி' படத்தில் வில்லத்தனமான நகைச்சுவை வேடத்தில் நடிக்கிறார்.
- 'மின்சாரக் கண்ணா' படத்தில் இரண்டாவது நாயகியாக அறிமுகமானவர் மோனிகா பேடி. இவர் தற்போது அப்பாஸ் ஜோடியாக தெலுங்குப் படமொன்றில் நடிக்கிறார்.
- 'லவ் டுடே', 'துள்ளித்திரிந்த காலம்' போன்ற படங்களை இயக்கிய பாலசேகரன் அடுத்து இயக்கும் படம் 'காதல் சுகமானது.' இப் படத்தில் கதாநாயகனாக நடிக்கவிருப்பவர் சூர்யா.





## வழுக்கினார் சிம்ரான்

'ஜோடி' படப்பிடிப்பில் சிம்ரான் அடிக்கடி வழுக்கி விட்டாராம். இதனை பிரசாந்த் கூறியிருக்கிறார்.

"கனடாவில் நயாகரா நீர்வீழ்ச்சியில் ஒரு பாடல் காட்சியில் நானும் சிம்ரானும் நடித்தோம். எங்களோடு 199 வெள்ளைக்காரப் பெண்களும் நடித்தனர்.

நீர்வீழ்ச்சியின் சாரல் மட்டும் ஒரு கிலோமீட்டர் தூரம்வரை அடிக்கிறது. பாடலின் பெரும் பகுதியை ஜெயிலில் அமர்ந்து படமாக்கினார்கள்.

நீர்வீழ்ச்சி அருகே வழுக்கும்பாறை சிம்ரான் ஒரு முறை அல்ல பலமுறை வழுக்கி விழுந்தார். நான்தான் கைகொடுத்து காப்பாற்றினேன்." என்று கூறியிருக்கிறார் பிரசாந்த்.

## குரல் லட்சம்

பாடகர் ஹரிகரன் தங்கியிருப்பது மும்பாயில். பாடல் பாடுவதற்காக சென்னைக்கு அடிக்கடி பறந்து போகிறார். ஒரு பாடலைப் பாட 30 ஆயிரம் ரூபாய் வாங்குகிறார். ஒருமுறை சென்னை சென்றால் பத்து, இருபது பாடல்களை பாடி முடித்து குறைந்தது ஐந்து இலட்சத்துடன்தான் மும்பாய் திரும்புவாராம்.

## ...ர் ரஜினி ...போனது

...லம் கூறிவிட்டது.
...ன்றிவிட்டது. படவாய்ப்புக்

...க்கிறது. திருமணத்திற்கு
...ண்டும் என்று தாய்க்குலம்
... அழைப்பை தற்போது

...மூத்து நடிகைமீது நீண்ட
...டிகைக்கு விருந்து என்ற
...ன்னர் தனது ஆசைக்கு
... நிறைவேற்றியிருக்கிறார்.

...டை

...முள்ளும் மலரும்', 'ஜானி'
...திரன். இவர் ரஜினியின்

...கேந்திரன் ரஜினி பற்றி
...றார். அதில் இருந்து சில

...னைக்கும் டார்க் கலர்தான்
...ர் சட்டையை பிடிக்கிறது
...டுக்கொள்வார். அவர்
...கொடுத்து விடுவார்.
...ளக் கட்டம். இரவு பகல்
...டப்பிடிப்பு. அதனால்
... அதனால் மனநிலை
... அவரால் வாழ்வுபெற்ற
...யிவிட்டார்கள்.
...ப்படியான உள்வீட்டு
...ர்த்திராதவர் என்பதால்
...து போனார். "நான் ஒரு
...காஷ்மீர் போய் இருந்து
... வருகிறேன்" என்றார்.
...ன் தடுத்தேன். பட
...அதிபர் கே.ஆர்.ஜி.

யுடன் தொடர்புகொண்டு 'ஜானி' படம் எடுத்தோம். ரஜினி நடித்தார். வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டோம்.

ரஜினி உச்சக்கட்ட புகழை அடைந்த போது அவரைத் திருமணம் செய்ய பல நடிகைகள் தயாராக இருந்தனர்.

ஆனால் ரஜினி ஒரு நடிகையை மணந்து கொள்ள விரும்பினார். அந்த நடிகைக்கும் ரஜினிமேல் விருப்பம்.

ரஜினி ஒருநாள் படப்பிடிப்பு நேரத்தில் அந்த நடிகையை திருமணம் செய்து கொள்வது பற்றி எனது அபிப்பிராயம் கேட்டார்.

நான் அவரிடம் "சினிமா சம்பந்தமில்லாத ஒரு பெண் உங்கள் துணைவியாக வந்தால் உங்களை முழுமையாக கவனித்துக் கொள்ள முடியுமே" என்றேன்.

அப்படிச் சொன்ன நானே அந்த பிரபல நடிகையின் பணிவான குணம், குடும்பப் பாங்கான நடைமுறைகளைப் பார்த்தபின்னர், "இந்தப் பெண் உங்கள் மனைவியாக அமைந்தால் இரண்டுபேரும் நன்றாக இருப்பீர்கள்." என்று கூறினேன்.

அந்த நடிகையிடம் இந்த விஷயம் தெரிவிக்கப்பட்டது. அவரது வீட்டு கிரகப் பிரவேசத்திற்கு என்னையும் ரஜினியையும் இரவு 8 மணிக்கு வரச்சொல்லியிருந்தார். போயிருந்தோம். எங்களை முறையாக உபசரித்தவர் "இருங்கள் கீழே போய் அம்மாவையும் அழைத்து வருகிறேன்" என்று போனார்.

அம்மாவும் வந்தார். "அப்ப கல்யாணப் பேச்சை ஆரம்பிக்கலாமா?" என்றார். அப்போது பார்த்தா மின்சாரம் போகவேண்டும். உடனே மின்சாரம் வரவும் இல்லை.

மறுபடி மின்சாரம் வந்தபோது ரஜினியின் மனம் மாறியிருந்தது.

மின்சாரம் போனதை ஒரு சகுனத்தடையாக நினைத்துவிட்டார்.

மின்சாரத்தடை அந்த நடிகையின் கழுத்தில் விழ வேண்டிய 'மூன்று முடிச்சுக்கு முட்டுக்கட்டையாக அமைந்துவிட்டது!' என்று எழுதியுள்ளார் மகேந்திரன்.


மகேந்திரன் அந்த நடிகையின் பெயரை கூறவில்லை. அந்த நடிகை யார் தெரியுமா? ஸ்ரீதேவி



### முகப்பில்

பிரசாந்த்-ப்ரீத்தி
படம்: ஹலோ

பிரசாந்த்-சாந்...ரி
படம்: ஆ...யில்
ஓர் கடிதம்



"அத்தை மகனே அத்தானே-உன்
அழகைக் கண்டு நான் பித்தானேன்!
தென்றலடிக்கும் தோட்டத்திலே-நான்
பூத்திருக்கும் முல்லைக் கொத்தானேன்!"

## தங்கக் கூண்டில் மாதவன்

'அலைபாயுதே' படத்தின் படப்பிடிப்பு முழுவதையும் காதும் காதும் வைத்ததுபோல் முடித்து விட்டார் மணிரத்னம்.

படப்பிடிப்பு முடிந்த பின்னர் படத்தைப் போட்டுப் பார்த்தார். பாடல் காட்சி ஒன்றுகூட இல்லையே வியாபார ரீதியாக பாதிப்பு ஏற்படுமோ என்று சின்னத் தயக்கம்.

இசைப்புயல் ஏ.ஆர்.ரகுமானிடம் ஓடினார். பாடலுக்கு இசை வாங்கி, பாடல் காட்சியை இந்திய வடமாநிலம் ஒன்றில் படமாக்கி முடித்திருக்கிறார்.

'அலைபாயுதே' நாயகன் மாதவனை வேறு எந்தப் படங்களிலும் நடிக்கத் தொடங்கவேண்டாம். 'அலைபாயுதே' வெளிவரும்வரை முகத்தை வெளியே காட்ட வேண்டாம் என்றெல்லாம் நிபந்தனை போட்டுள்ளார் மணி.

சுருக்கமாகச் சொல்வது என்றால், மாதவனைத் தங்கக் கூண்டில் சிறை வைத்திருக்கிறார் மணிரத்னம்.

அப்படியிருந்தும் மாதவனின் புகைப் படங்கள் வெளியாகி விட்டன. எனினும் தமிழக சினிமா சஞ்சிகைகளில் வெளியிடாமல் தடுத்து வைத்திருக்கிறது மணி வட்டாரம்.

## இண்டர் நெட் வாய்ப்பு

'ரோஜாவனம்' தமிழ் நாட்டில் வெளியாகி ஓடிக் கொண்டிருக்கிறது. நம் நாட்டுக்கு வீடியோ வருவது தாமதமாகிவிட்டது.

'ரோஜாவனம்' படத்தில் அறிமுகமாகியுள்ள நடிகர் ஆகாஷ். இவர் இலண்டன் பல்கலைக்கழகத்தில் பீ.எஸ்.சி. ஹானர்ஸ் மற்றும் கம்பியூட்டர் பயிற்சிகளில் தேர்வு பெற்றவர்.

இவர் லண்டனில் படித்துக்கொண்டிருந்தபோது நடிகை சுகாசினிக்கு இண்டர் நெட் மூலமாக தன் வாழ்க்கைக் குறிப்பையும், புகைப்படத்தையும் அனுப்பினார்.

அந்த நேரம்பார்த்து 'ரோஜாவனம்' படத்துக்காக பாலசந்தர் புதுமுகம் தேடினார். அதனையறிந்த சுகாசினி ஆகாஷின் படத்தை கொடுக்க, பாலசந்தரால் இலண்டனில் இருந்து அழைக்கப்பட்டார் ஆகாஷ்.



அஜித்குமார்-தேவயானி
படம்: நீ வருவாய் என...

## என்ன விலை அழகே

விஜயின் மனதை கொள்ளையிட்ட சங்கீதாவும் நடிகையோ என்று நினைக்கும் அளவுக்கு விஜயுடன் போஸ் கொடுக்கிறார். சங்கீதா ஒரு டாக்டர் என்று தவறான செய்திகளும் வெளியாகி இருந்தன.

சங்கீதா பற்றி சிறு குறிப்பு.

பெயர்: சங்கீதா. பெற்றோர்கள்: சொர்ணலிங்கம், நிர்மலா,
உடன் பிறப்பு: பிரதீபா ஒரே அக்கா.
படிப்பு: பீ.எஸ்.சி. சைன்ஸ் (விஞ்ஞான பட்டதாரி)
விஜய் நடித்ததில் பிடித்தது: 'பூவே உனக்காக' இதன் பின்னர்தான் விஜய் ரசிகையானார்.
பிடித்த உடை: இலண்டனில் ஜீன்ஸ், தமிழ்நாட்டில் சுடிதார்.
பொழுதுபோக்கு: பாடல்கள் கேட்பது, சமைப்பது, புத்தகம் படிப்பது.
ரசிக்கும் பாடல்: காதலர் தினத்தில் 'என்ன விலை அழகே.'

## சரத்குமாரின் பாட்டாளி

தேர்தலில் போட்டியிட முடியாவிட்டாலும் தி.மு.க. கூட்டணிக்காக சூறாவளிப் பிரசாரம் செய்து முடித்திருக்கிறார் சரத்குமார்.

தேர்தல் பிரசார சூடு முடிந்ததும் சரத்குமார் நடிக்கும் படம் 'பாட்டாளி.' இதில் சரத்குமாருக்கு இரண்டு ஜோடிகள். ஒருவர் சரத்தின் ராசியான ஜோடி தேவயானி. இன்னொருவர் ரம்யா கிருஷ்ணன்.

## 'உலகை விலைபேசவா'

'சின்னக் கவுண்டர்', 'எஜமான்' போன்ற வெற்றிப் படங்களை இயக்கியவர் ஆர்.வி.உதயகுமார். நீண்டகாலமாக சரிவில் இருந்தார்.

இப்போது மறுபடி சுறுசுறுப்பாக களத்தில் குதித்திருக்கிறார். கார்த்திக் கதாநாயகனாக நடிக்க அவர் இயக்கப்போகும் படத்திற்கு சூட்டப்பட்டுள்ள பெயர் 'உலகை விலை பேசவா.'

கார்த்திக்குக்கு கதை பிடித்துவிட்டது. உடனடியாக திகதி கொடுத்துவிட்டார். இசை தேவா. பாடல் ஒன்றும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கார்த்திக் ஜோடியாக இரு முன்னணி நடிகைகள் நடிக்க உள்ளனர். பேச்சுவார்த்தை நடந்து வருகிறது.

## கார்த்திக் தங்கம்

'ரோஜாவனம்' இயக்குநர் செல்வா தனது படங்களில் கார்த்திக்கையே தொடர்ந்து கதாநாயகனாக போடுகிறாரே ஏன்? இக் கேள்விக்கு செல்வா என்ன பதில் சொல்கிறார்?

"என் அடுத்த படத்தில் கார்த்திக் நடிக்கவில்லை. ஆனாலும் மீண்டும் அவரை வைத்து இயக்குவேன். நல்ல மனிதர் அவர். எனக்கு அவர் தங்கம்.

அடுத்து பார்த்திபன் கதாநாயகனாக நடிக்கும் படத்தை இயக்குகிறேன். இதில் மீனாவும், ரம்பாவும் கதாநாயகிகள். அதன்பின்னர் பிரசாந்த் கதாநாயகனாக நடிக்கும் படம் ஒன்று. பின்னர் மறுபடி கார்த்திக்." என்கிறார் செல்வா.

## விடுதி மாற்றம்

'உன்னைத் தேடி' படத்தின் பின்னர் மாளவிகாவுக்கு குறிப்பிடும்படியான வாய்ப்பு எதுவும் வரவில்லை. சில படங்களில் ஊறுகாய் மாதிரி பயன்படுத்தியுள்ளனர். ஆனாலும் வருமானம் மட்டும் எக்கச்சக்கம்.

இதுவரை மூன்று விடுதிகள் மாறிவிட்டார். விடுதி நிர்வாகிகளுக்கு மாளவிகாவைக் காண வருபவர்களால் தொந்தரவு கள். அதுதான் மூட்டையைக் கட்டுமாறு கூறுகிறார்களாம்.

தற்போது சென்னை பூந்தமல்லியில் உள்ள விடுதி ஒன்றில் தங்கியிருக்கிறார். இதுவும் எத்தனை நாட்களுக்கோ?


## காதோடு சொல்லுகிறோம்

வரவுக்கு ஏற்ற செலவு இருக்க வேண்டும் என்பதை விரலோடு தொடர்பு படுத்தி விளக்கம் அளிக்கும் விதமான பெயரோடு ஒரு படம் வந்து ஓடுகிறது. இப்படத்தில் மூன்றெழுத்து நடிகை நகைச்சுவை நடிகருக்கு ஜோடியாக நடித்தார். இதனால் இவர்மீது வேறு சில நகைச்சுவை நடிகர்களும் கண்வைத்துள்ளனராம். முன்னாள் கதாநாயகியான இவர்மீது அவர்களுக்கு தனி ஈடுபாடு. இதனால் பல வாய்ப்புக்கள் அம்மணிக்குத் தேடி வந்துள்ளனவாம்.

நடனப்புயல் நடிகர் தனக்கு ஜோடியாக நடிக்கும் நடிகைகளை பாடாய் படுத்துகிறார். உடன்பட மறுத்தால் நடனம் சரியாக வரவில்லை என்று பலர் முன்பாக அசிங்கமாகத் திட்டுவாராம். இதற்கு பயந்தே பல நடிகைகள் அவரது விருப்பம்போல வளைந்து கொடுக்கிறார்களாம்.

மீன் நடிகையின் தாய்க்குலம் உற்சாகபான விஷயத்தில் கில்லாடி. நட்சத்திர விடுதிகளில் சற்றுத் தூக்கலாகப் போட்டுவிட்டு உருண்டும் இருக்கிறார். சாரதிதான் அணைத்துப் பிடித்து அழைத்துச் செல்லுவாராம்.

தன் திருமணத்தை சாட்டாக வைத்து ரசிகர் படையை சென்னையில் திரட்டிக் காட்டியிருக்கிறார் மூன்றெழுத்து கதாநாயகன். இதற்கு போட்டியாக தாம் என்ன செய்யலாம் என்று இன்னொரு இளம் நடிகர் நண்பர்களுடன் யோசித்து வருகிறார்.



## அணிவகுப்பில் குறும்பு

இப் புகைப்படமும் உலகப் புகழ்பெற்ற புகைப்படங்களில் ஒன்றாக இடம்பிடித்துள்ளது. இதில் உள்ள குறும்பை நாங்கள் விளக்கித்தான் தெரிய வேண்டுமா என்ன?

# தேன் கிண்ணம்

## யாழில் அஃறிணைகளின் சிரிப்பு

அஃறிணைகள்
ஆரவாரிக்கின்றன.
வானம் இனி
தீமழை பொழியாதாம்!
***
கிபிர் விமானங்கள்
கிளித்துச் சென்ற பாகங்கள்
குணமாகி வருகிறதாம்.
வானம் கானம் பாடுகிறது!
***
எரிந்த கிளைகளை
தரையில் விழத்திவிட்டு
துமித்தமழைக்கு
குருத்துவிட்டு சிரிக்கிறது
தாவரங்கள்!
***
பதுங்குவதற்காக
வெட்டிய குழிகளில்
புது வெள்ளம் கொணர்ந்த
குருமணல் நிரம்பிவிட்டதாம்
பூமிக்கும் புன்சிரிப்பு!
***
இனங்களை
வகுத்து அறிந்து தாக்க
தாக்குதல் விமானம் இல்லையென
உள்ளே புழுங்கும்
சிரசுகளின் மனசை
வகுத்து அறியமுடிவதால்...,
என்னால் மட்டும்
சிரிக்க முடியவில்லை
அஃறிணைபோல்!
***

மேகலா இரஞ்சித்-
கரணவாய் கிழக்கு.

## ஏழைகளின் உலகம்


உடைந்த
மேகத்துண்டுகள்
துப்பிய
எச்சிலாய்
வானிலிருந்து
வந்து விழுந்தது
'மழைத்துளி'!
•••
ஈரத்துளிபட்டு
விழித்துக்கொண்ட
மண்ணின் மணம்
மறுபடி...
மனங்களை நிரப்பிற்று!
•••
பயிர்கள்
தலைசாய்த்துச்
சிரித்தன.
பட்சிகள்
சிறகுவிரித்துப்
படபடத்தன!
•••
நேற்றுவரை
வானத்தை
வரம்கேட்டு
ஏக்கத்தோடு
காத்திருந்தோம்!
•••
இன்றோ...
ஓயாதா என்று
கூரையைப் பார்த்து
குந்தியிருந்து
குடைவிரிக்கிறோம்.
ஓ...இது
ஏழைகளின் உலகம்!

தி.ரமணி,
வவுனியா.

## கனியும் வரை காத்திரு!

காத்திருப்பவளே!
காணாது
கனவாகவும்
கனமாகவும் இருப்பாய்...
★
காலக்கடமையில்
தாயகம் எனக்குத் தாகம்
நீயோ எனது பாகம்
அது சுமையான சுகம்?!
நீ சுகமான சுமை?!
★
கடமையின் கணக்கில்
கை வரவேண்டிய
வரவுக்காய்–நான்
செலவாகலாம்
"சுகப்பயணம்"
சகவாக–நானும்
சயவாகலாம்!
★
புரிந்துகொண்டும்
புகுந்துகொண்டவள் நீ...
பூத்துவரும் விடியல்
கனியாகும்வரை
காத்திரு!!
★
முன்னால் ஏதோ அசைவு...
புரியாதவனே எப்போதும்
ஆயத்தம் தான்
ஆயுதமும் நானும்!!!

சுதந்திரன்.



## யார் இவர்?

மறைந்த பாரதப் பிரதமர் இந்திராகாந்தியின் அருகில் அமர்ந்திருக்கும் பெண்மணி யார் என்று தெரிகிறதா? சமீபத்தில் இவர் கொழும்பு வந்திருந்தார். பத்திரிகைகளில் பேட்டிகளும் வெளியாகி இருந்தன. பிரபலமான, துணிச்சலான பெண்மணி. என்ன கண்டுபிடித்துவிட்டீர்களா?

விடையைச் சரிபார்க்க பக்கம் 18.

## இந்தவாரம் உங்கள் பலன்

**26.09.99 முதல் 02.10.99வரை**

ஜோதிடர் 'கர்ணா'

**மேடம்:**
இராசிநாதன் 5 இல் பலம் கொள்வதால் மனதில் உற்சாகமும் பண நிலையில் சிக்கலும் காணப்படும். தூர இடத்து உறவினர் நண்பர்களின் வருகையும் உதவியும் கிட்டும். தொழில், கல்வி முதலான முயற்சிகளைப் பெருக்குவார்கள். பரணிக்காரருக்கு சந்தோஷமான காலம்.
அதிஷ்ட நாட்கள்: வெள்ளி, சனி.
அதிஷ்ட நிறம்: வெள்ளை; எண்: 08.
அதிஷ்ட திகதிகள்: 26, 30.

**இடபம்:**
சனிகாலம் மாற்றத்தால் விரும்பிய பலவிடயங்கள் பல கைகூடும். கவலைகள் விலகும். தொழில் வருமானங்கள் சீரடையும். புதிய மாற்றம் ஏற்படும். அலைச்சல்களைத் தவிர்க்கவும். ரோகிணி நட்சத்திரருக்கு பணவருவாய் உண்டு.
அதிஷ்ட நாட்கள்: திங்கள், ஞாயிறு.
அதிஷ்ட நிறம்: பச்சை; எண்: 05.
அதிஷ்ட திகதிகள்: 28, 02.

**மிதுனம்:**
11இல் கிரக பலம் கொண்டுள்ளதால் புதிய தொழில் வாய்ப்புக்களும், வேகமான செயல்பாடுகளும் இடம்பெறும். பலகாலம் எதிர்பார்த்த நன்மைகளும் உதவியும் திருமண முயற்சியும் கைகூடும். திருவாதிரை, புனர் பூச நட்சத்திரர் யோகமான பலனைப் பெறுவார்கள்.
அதிஷ்ட நாட்கள்: வெள்ளி, வியாழன்.
அதிஷ்ட நிறம்: இளமஞ்சள்; எண்: 04.
அதிஷ்ட திகதிகள்: 29, 02.

**கடகம்:**
ஜென்மராகு மனதில் உளைச்சலையும் பதற்றத்தையும் கொடுப்பதுடன் பலவிடயங்கள் தடைகளுக்கு உள்ளாக்கும். பிள்ளைகளால் பிரச்சனைகள் ஏற்படக்கூடும். எதிலும் நிதானத்துடன் அவசானமாக நடந்துகொள்ளவும். வார இறுதியில் பிரச்சனைகள் பல குறையும். ஆயிலிய, பூச நட்சத்திரர் அவதானமாக நடக்கவும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், சனி.
அதிஷ்ட நிறம் : றோஸ்; எண் : 07.
அதிஷ்ட திகதிகள் : 29, 27.

**சிம்மம்:**
கிரகபலம் கொள்வதால் முயற்சிகள் கைகூடும். மனதில் தடுமாற்றம் இருந்தாலும் கருமங்கள் வெற்றியாகும். காதல் விடயங்கள் சந்தோஷத்தைக் கொடுக்கும். பண வருவாய் வார இறுதியில் ஏற்படும். பூச நட்சத்திரர் நன்மை அடைவார்கள்.
அதிஷ்ட நாட்கள்: புதன், வியாழன்.
அதிஷ்ட நிறம்: மஞ்சள்; எண்: 01.
அதிஷ்ட திகதிகள்: 28, 01.

**கன்னி:**
அட்டமத்தானத்தில் வக்கிரகபலம் கொள்வதால் ஆலயதரிசனமும் மனதில் ஒருவிதமான மாற்றமும் ஏற்படும். பெண்களுக்கு பல சிக்கல்கள் குறைவடையும். உத்தர அத்தப் பெண்களுக்கு மணமாகாதோருக்கு மணவாய்ப்புக்கள் கைகூடிவரும்.
அதிஷ்ட நாட்கள்: திங்கள், வியாழன்.
அதிஷ்ட நிறம்: வெள்ளை, எண்: 05.
அதிஷ்ட திகதிகள்: 27, 30.

**துலாம்:**
களத்திரபலம் கொண்ட கிரக அமைப்பு கல்வித்துறை வளர்ச்சியடையும், மனதில் மாற்றம் ஏற்படும். சகோதரர்களின் ஒத்துழைப்பும் குடும்ப மகிழ்ச்சியும் ஏற்படும். வார இறுதி பல நல்ல விடயங்களை எதிர்பார்த்த முன்னேற்றத்தை விசாக, சுவாதிப் பெண் நட்சத்திரருக்கு நிறைவேற்றும்.
அதிஷ்ட நாட்கள்: புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம்: மஞ்சள்; எண்: 03.
அதிஷ்ட திகதிகள்: 30, 01.

**விருட்சிகம்:**
பணப்பிரச்சனைகள் குறைவடைவதுடன் எதிர்பார்த்த முன்னேற்றம் கிட்டும் பிள்ளைகள் பற்றிய நல்ல செய்திகள் கிடைக்கும். எதிலும் பொறுமையாக செயல்படவும். கேட்டை அனுஷக்காரருக்கு சிக்கல்கள் குறையும்.
அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், சனி.
அதிஷ்ட நிறம் : சிவப்பு; எண் : 09.
அதிஷ்ட திகதிகள் : 27, 30.

**தனுசு:**
5 இல் கிரக அமைப்பு சிறப்பாக செயல்படுவதால் புதிய தொழில் வாய்ப்புக்கள் கைகூடும். பெண்களுக்கு குடும்பமகிழ்ச்சியும் போசன சுகமும் ஏற்படும். மனதில் நம்பிக்கை உறுதியான செயற்பாடுகள் காணப்படும்.
அதிஷ்ட நாட்கள்: வியாழன், திங்கள்.
அதிஷ்ட நிறம்: நீலம்; எண்: 05.
அதிஷ்ட திகதிகள்: 28, 02.

**மகரம்:**
மனதில் தடுமாற்றமும் ஏமாற்றமும் காணப்படும். வார இறுதியில் சயனசௌக்கியமும் எடுத்த முயற்சிக்கும் ஓரளவு நல்ல பலன் கிடைக்கும். திருவோண அவிட்டக்காரர்கள் அவதானமாக இருக்கவும்.
அதிஷ்ட நாட்கள்: வியாழன், சனி.
அதிஷ்ட நிறம்: வெள்ளை; எண்: 01.
அதிஷ்ட திகதிகள்: 30, 01.

**கும்பம்:**
3 இல் கிரகஸ்தானம் கொள்வது உறுதியான முடிவும் ஏற்றமான எண்ணங்களும் காணப்படும். பயண அலைச்சலும் உறவினர் நண்பர்களின் வருகையும் காணப்படும். இடமாற்றம் ஏற்படல். கல்வி, பயிர்விருத்தி விவசாயம் முன்னேற்றமாகும். அவிட்டக்காரர் நன்மையடைவார்கள்.
அதிஷ்ட நாட்கள்: திங்கள், வெள்ளி.
அதிஷ்ட நிறம்: மருண்; எண்: 06.
அதிஷ்ட திகதிகள்: 26, 30.

**மீனம்:**
ஏழரைச் சனி முடிவு காலமாதலால் பிரச்சனைகள் பல குறையும். தாய்வழி உதவிகள் வந்து சேரும். பிரயாணங்கள் வெற்றியாகும். மனதில் நம்பிக்கை பிறக்கும். எடுத்த விடயம் சீர் பெறும். நோய் துன்பங்கள் மறையும். திடீர் என யாத்திரைகள் ஏற்படும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வியாழன்.
அதிஷ்ட நிறம் : கறுப்பு; எண் : 03.
அதிஷ்ட திகதிகள் : 28, 30.

## நில் - கவனி - முன்னேறு

**வா**ழ்க்கையில் கையை குலுக்குவது ஒரு அம்சம். இரு நண்பர்கள் சந்திக்கும் போது, கை குலுக்கி வந்தனம் தெரிவித்துக் கொள்வது நடைமுறையில் உள்ள ஒரு பழக்கம். இதில் யார் முதலில் கை குலுக்குவது என்பது பிரச்சனை... ஆகவே இருவரும் ஒரே சமயத்தில் கை நீட்டி கையை குலுக்கிக் கொள்வதுதான் பண்பாடு!!!


மல்யுத்த வீரர்கள் சண்டையை ஆரம்பிக்கும் முன் கையை குலுக்கிக்கொள்வார்கள். ஏனென்றால் முடிவில், கை குலுக்கும் மூடில் அவர்கள் இருக்கமாட்டார்கள்...

இரு அணிகள் மோதத் துவங்குமுன் பூவா தலையா போட்டு முடிந்தபின், பூவா தலையா வென்ற அணி கப்டன், மற்றொரு அணி கப்டனை பாராட்டி கை குலுக்குவது நடைமுறையில் உள்ள பழக்கம்.

நம்நாட்டு பெண்கள் தங்களுக்குள் கை குலுக்கிக் கொள்வர். ஆனால் ஆண்களுடன் கை குலுக்குவதை விரும்புவதில்லை. மாறாக இரு கைகளை கூப்பி வந்தனம் தெரிவிப்பர். மேல் நாட்டு பெண்கள், கை குலுக்க அஞ்சுவதில்லை. ஆனால் பிரிட்டிஷ் ராணி எலிசபெத் மற்றவர்களுடன் கையில் உறை அணிந்தபடிதான் கை குலுக்குவார்.

இரு நண்பர்களிடையே சண்டை ஏற்பட்டு, பிரிந்துள்ள நிலையில், மூன்றாவது நபர் மூலம் சமாதானம் ஏற்படும்போது, பிரிந்த நண்பர்களை கை குலுக்கச் சொல்லி இணைத்து வைப்பர்.

பொதுவாக ஏதாவது ஒன்றில் வென்றாலும் அல்லது ஏதாவது ஒரு காரியத்தை எதிர்பார்த்ததைவிட சிறப்பாக செய்தாலும் கை குலுக்கி பாராட்டு தெரிவிப்பது நமது பழக்கம்.



ஒரு நாட்டின் தலைவர், மற்றொரு நாட்டில் சுற்றுப் பயணம் செய்யும்போது, அங்குள்ள வி.ஐ.பி.களுக்கு அறிமுகம் செய்து வைக்கப்படுவார். இந்த நிலையில் அனைவருடனும் சென்ற தலைவர் கை குலுக்குவார். ரஷ்ய ஜனாதிபதிகள் கை குலுக்குவதில் சளைக்காதவர்கள். நீண்ட நேரம் கை குலுக்கிக்கொண்டேயிருப்பார்கள்.

சிலர் கை குலுக்கக் கூச்சப்படுவர். புதிய நண்பர்கள் அறிமுகப்படுத்தப்படும்போது, கை குலுக்கி வந்தனம் தெரிவிப்பது பண்பாடு.

ஆகவே... கை குலுக்கி... புதிய நண்பர்களை பெற்று... வாழ்க்கையை மகிழ்ச்சியாய் அமைத்துக் கொள்வோம்...!!

# லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

## உதிர்கிறதா முடி?



சீப்பைக் கூந்தலுக்குள் செலுத்தி ஒரு இழுப்பு இழுத்தால் போதும். சீப்புக்குள் துண்டு துண்டாக எவ்வளவோ முடிகள். ஒருவேளை தலைக்கு வைக்கும் எண்ணெய் சரியாக இருக்காதோ அல்லது குளிக்கிற தண்ணீரில் ஏதாவது கோளாறு இருக்குமோ? என்ற ரீதியில் பலர் சிந்திப்பார்கள்.

முடி உதிர்வதைத் தடுக்க இதோ சில ஆலோசனைகள்:

- ⋆ முடி உதிரப் பொடுகும் காரணம். அதற்காகப் பொடுகைப் பார்த்துப் பயப்பட வேண்டாம். உடல் சோர்வு, உடலில் சத்து இல்லாமை ஆகியவைகளாலும் பொடுகு ஏற்படும்.
- ⋆ 10 நிமிடங்கள் தலையில் மசாஜ் செய்யுங்கள். பின்பு பரந்த பற்களைக் கொண்ட சீப்பால் கூந்தலைச் சீவுங்கள். இவ்வாறு செய்யும்போது பொடுகு தலையில் இருந்து அகலும். அப்போது தலையை நன்றாகக் கழுவினால் போதும்.
- ⋆ தலை மற்றும் கூந்தலின் இயல்பு அடிக்கடி மாறும் தன்மை கொண்டது. அதற்குத் தக்கபடி ஷம்பூவையும் மாற்ற வேண்டும். கூந்தல் எண்ணெய்த் தன்மையுடன் திகழும்போது 'ட்ரைஹேயா ஷம்பு' பயன்படுத்தக்கூடாது.
- ⋆ கூந்தலைப் பின்னுவதற்கு முன்னால் அல்லது கொண்டை போடுவதற்கு முன்னால் கூந்தலை நன்றாகச் சீவ தயக்கம் காட்ட வேண்டாம்.
- ⋆ தலைக்கு ஷம்பு போட்டுக் குளிக்கும்போது அவசரம் காட்ட வேண்டாம். கூந்தலில் அதிக எண்ணெய்த் தன்மை இருந்தால், தண்ணீர் விட்டுத் தலையை நனைக்காமலே ஷம்பு போடவேண்டும்.
- ⋆ நீளமான கூந்தல் நன்றாக நனைந்திருக்கும்போது அதனைப்பிடித்து இழுத்துவிட வேண்டாம். முடி அறுந்து போய்விடும்.
- ⋆ முடி உதிர்வதற்கு ஆரோக்கியமின்மையும் ஒரு காரணம். டென்ஷன் இருக்கக்கூடாது. உடலுக்கும் அதிக சத்துத்தேவை. கண்ட கண்ட எண்ணெய்களை வைத்து முடியைக் கெடுத்துவிட வேண்டாம்.

## கண்ணுக்கு மை அழகு

கண்மை இட்டுக் கொள்வது பண்டைக் காலத்திலிருந்து தொடரும் ஒரு பழக்கமாகும். இன்றைய நவீன உலகில் பெண்கள் பலர் இந்த அழகுசாதனத்தை உபயோகிப்பதில்லை. என்றாலும் குழந்தைகளுக்குக் கண்மை இடுவது வழக்கமாக உள்ளது.

முன்னர் கரிசலாங்கண்ணி இலைச்சாறு, சந்தனம் போன்றவற்றை எரித்து அதன் கரித்தூளை விளக்கெண்ணெய், வெண்ணெய் போன்றவற்றில் குழைத்து கண்மையை வீடுகளில் தயாரிப்பார்கள்.

கண்மை வைப்பதற்காக வெள்ளி, பித்தளை போன்ற உலோகங்களில் அழகிய வடிவங்களில் 'மைக்கூடுகள்' உண்டு இப்போது.

அதெல்லாம் பழங்கதை. ஆனால் மேல் நாடுகளில் மை கலாச்சாரம் கொடி கட்டிப் பறக்கிறது. புராதன பாணியில் கண்களுக்கு வெளியே கோடு இழுத்து மை வைத்துக் கொள்வதை மேல்நாட்டுப் பெண்கள் விரும்புகின்றனர்.

குறிப்பாக ஹொலிவூட் நடிகைகளும், மொடல்களும் முக்கியமான விருந்து நிகழ்ச்சிகளில் இப்படி மை அலங்காரத்துடன் வருகின்றனர்.

இதற்காக பல முன்னணி மேக்-அப் நிறுவனங்கள் போட்டி போட்டுக் கொண்டு மை தயாரிக்கின்றன.

## குளிரூட்டியும் பாவனையும்

இறைச்சி, காய்கறிகள் போன்றவை குளிரூட்டப்பட்ட நிலையிலிருந்து எடுத்து உபயோகிக்கும் போது அவை அறை வெப்ப நிலைக்கு வந்த பிறகுதான் அடுப்பில் வைத்து சூடு படுத்த வேண்டும்.

அரைகுறையாக குளிர்போகாத நிலையில் அவற்றைச் சுடவைக்கக்கூடாது. அப்படி அரைகுறையாகச் சுடவைக்கப்படும் இறைச்சியில் பக்ரீரியா தொற்று முழுமையாகப் போகாது.

உறை நிலையில் உள்ள இறைச்சியை வாங்கும்போது அது கெட்டுப்போகாமல் உள்ளதா? அது என்ன உறைநிலையில் வைக்கப்பட்டது? எந்த திகதிக்குள் அதை உபயோகித்தால் நல்லது? போன்ற விவரங்கள் அந்த பக்கெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளதா? எனப் பார்த்து வாங்க வேண்டும்.

காய்கறிகளை குளிர்சாதனப் பெட்டியில் நீண்டநாள் வைக்கும்போது அவற்றில் உள்ள சத்துக்கள் குறைவதுடன், பக்ரீரியாக்கள் குடிபுகவும் வாய்ப்புக்கள் உள்ளன.

பச்சைப் பட்டாணி, காளான் போன்றவற்றை உப்புத் தண்ணீரில் பாதியளவு வேகவிட்டு பிறகு அவற்றைத் துளையிடப்பட்ட பொலித்தீன் பைகளில் வைத்து குளிர்பதனப் பெட்டியின் அதிக குளிரான ஐஸ் அறையில் (பிறீஸர்) வைக்க வேண்டும்.

தக்காளி, கொத்தமல்லி இலை போன்றவற்றை நன்கு காற்றோட்டமான பைகளிலோ துளைகள் உள்ள டப்பாக்களிலோ போட்டு குளிர்பதனப் பெட்டியில் வைப்பது நல்லது. அவை பழுதாகாமல் நீண்ட நாட்களுக்கு இருக்கும்.

பெரும்பாலும் இறைச்சியை அப்போதைக்கப்போது புதிதாக வாங்கி உபயோகிப்பதே சிறந்தது. குளிர்பதனம் செய்யப்பட்ட இறைச்சி சுவை மாறுவதோடு, அவற்றில் பக்ரீரியா தொற்று ஏற்படும் வாய்ப்புக்கள் உள்ளன.


# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்



மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்

★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** GM

பெயர்:....................

முகவரி:....................

....................

தொழில்:....................

கையொப்பம்:....................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 02-10-1999**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


---

வழங்குவது 09 புவனா

# மோனிக்கா என் மோனிக்கா



மோனிக்காவுக்கு அவன் நிலை பரிதாபமாக இருந்தது.

"நான் ஆணுமல்ல, பெண்ணுமல்ல" என்று கூறிவிட்டு அவன் குழந்தை மாதிரி குலுங்கிக் குலுங்கி அழுவதைப் பார்க்க மோனிக்காவின் கண்களும் ஈரலித்தன.

'அவனைச் சீண்டி, அவனது மனதை ஆழமாகக் காயப்படுத்திவிட்டேனே!" என்று மோனிக்கா வேதனையுற்றாள்.

மாணவிகளுடன் அவன் சகஜமாகப் பழகுவதற்கு முன்வராத காரணம் இதுதான் என்று தெரிந்திருந்தால் மோனிக்கா அவனை இப்படிச் சீண்டியிருக்க மாட்டாள்.

மோனிக்கா அவனது தலையைத் தடவிவிட்டாள். அவன் எதிர்பாராத விதமாக தன் பக்கமாக அவனை இழுத்து முத்தமிட்டாள்.

அவனுக்கோ முகமெல்லாம் வியர்த்துவிட்டது. உடம்பும் குலுங்கியது. இம்மாதிரியான பெண் சகவாசம் அவனுக்குப் புதியது. புதுமையாக இருந்தது. சுவையாகவும் இருந்தது.

அவன் தனது நடுங்கும் கரங்களால் மோனிக்காவின் கழுத்தை வருடினான்.

மோனிக்கா அவனுக்கு இடம் கொடுத்தாள். அவன் தயங்கித் தயங்கி, நடுங்கும் கையை கழுத்திற்குக் கீழேயும் இறக்கினான்.

மோனிக்கா 'அடக் கடவுளே!' என்று கண்களை மூடியபடி முணுமுணுத்தபடி அவன் கையை அழுத்திக்கொண்டாள்.

அவனுக்கு அதற்கு மேல் என்ன செய்வதென்றே தெரியவில்லை. அவனது இயலாமை அவனை வருத்தியிருக்க வேண்டும்.

தன்கையை விலக்கிக்கொண்டான்.

ஜீப்பைவிட்டு இறங்கி விறு விறுவென்று நடந்து போனான்.

மோனிக்கா அவனை அழைத்தாள். அவனோ அவள் குரலை காதில் வாங்காதது போல போயே விட்டான்.

மோனிக்காவுக்கு அவனது செய்கைகள் பிடித்திருந்தன. அனுபவம் எதுவும் இல்லாமல், புதிதாக அனுபவம் பெறும் ஒருவனது ஆச்சரிய தேடல் அவளுக்குள் புதுவிதமான உணர்வுகளைக் கிளர்த்தியிருந்தன.

அதற்கு முன்னர் அவள் சந்தித்த ஆண் அனுபவசாலிகள். பல பெண்களுடன் படுக்கையைப் பகிர்ந்து கொண்டவர்கள்.

அந்தச் சம்பவத்தின் பின்னர் கல்லூரியில் அவனைக் கண்டபோது மோனிக்கா "ஹாய்" என்று நெருங்கிப்போக, அவனோ முகத்தைத் திருப்பிக்கொண்டு போய்விட்டான்.

அதன் பின்பும் பல தடவை அவனோடு பேச முயன்றாள். அவன் ஒதுங்கியேபோனான். அதனால் அவனுடன் நட்பைத் தொடரும் முயற்சியைக் கைவிட்டாள் மோனிக்கா.

### உணர்ச்சியின் பிடியில்

இடையே சில காலம் மறந்திருந்த பிளேய்லரை மறுபடி தேடிப்போனாள் மோனிக்கா. அவளது பருவதாகம்தான் அவனிடம் தேடிப் போக வைத்தது. தூண்டியது..

மோனிக்கா எளிதில் உணர்ச்சிவசப்படும் பெண். அழுகையோ, சிரிப்போ கோபமோ, காமமோ உடனடியாக வெளிப்படுத்தி விடுவாள்.

சிறந்த இசையைக் கேட்கும்போது உருகுவாள். ஐஸ்கிரீம் மாதிரி உருகுவாள். கிளர்ச்சியூட்டும் பாடல்களைக் கேட்கும்போது தாபத்தில் உருகுவாள். மெழுகாய் உருகுவாள்.

மோனிக்கா நன்றாகப் பாடுவாள். தேவாலயத்தில் மோனிக்காவைப் பாடச் சொல்லிக் கேட்பார்கள்.

கேட்போர் விழிகள் ஈரமாகும் விதமாக சோக ரசமான பாடல்களை பாடியிருக்கிறாள். சோகத்தை அனுபவித்து உணர்ந்து பாடுவாள்.

"மோனிக்கா கொஞ்சம் தீவிரமாக தனது தனித் திறமைகளைக் கூர்மைப்படுத்தி இருந்தால், ஒரு பிரபல நடிகையாகவோ, பாடகியாகவோ வந்திருக்கலாம். அவள் தங்கமான சந்தர்ப்பங்களை நழுவவிட்டிருக்கிறாள்," என்று அவளது ஆசிரியர்களே கூறியுள்ளனர்.

எளிதில் உணர்ச்சிவசப்படும் அவளது குணம்தான் அவளை ஏனையோரிடம் இருந்து தனித்துவமாகப் பிரித்துக்காட்டியது.

அதே குணம்தான் செக்ஸிலும் அவளை

## உறவும் ஏமாற்றமும்

நாட்டம் கொள்ள வைத்தது. தனக்குப் பிடித்த ஆண்களைத் தேடிச் செல்ல வைத்தது.

பிளேய்லருடன் முன்புபோல அடிக்கடி சந்திக்காதுவிட்டாலும், மாதத்தில் ஒரு தடவையாவது சந்திக்க வேண்டும் என்று அவளது உணர்ச்சிகள் தூண்டின. மோனிக்கா தன் உணர்ச்சிகளுக்கு முட்டாள் தனமான அடிமையாக இருந்தாள்.

பிளேய்லருக்கும் மோனிக்காவின் உடம்புமீது தனி ஈடுபாடு. அவள் எப்போது வந்தாலும், அவளுக்காக, அவள் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவதற்காக அவன் தயாராக இருந்தான்.

மோனிக்காவுக்கு பிளேய்லருடனான உறவிலும் சின்ன சின்ன விரிசல்கள் ஏற்படத் தொடங்கின. அதற்கு தூண்டுகோலான சம்பவம் ஒன்று நிகழ்ந்தது.

பிளேய்லரை சந்திக்க நாடகக் கல்லூரிக்கு போயிருந்தாள். மோனிக்கா. பிளேய்லர் வெளியே புறப்பட்டுக்கொண்டிருந்தான்.

அவன் முகம் வாட்டமுற்றிருந்தது. மோனிக்காவை சரியாகப் பார்த்துக்கூடப் பேசவில்லை. அவனது மனைவிக்குச் சுகவீனம் என்று மட்டும் கூறினான். "அவசரமாகச் செல்ல வேண்டி இருப்பதால், பிறிதொரு நாள் பார்க்கலாம்" என்று கூறிவிட்டுச் சென்றான்.



அன்டி பிளேய்லருடன்

### ஏமாற்றம்

தன்னைவிட அவனுக்கு குடும்பம்தான் முக்கியம். மனைவிக்குப் பின்னர்தான் மற்றப் பெண்கள். அதுகூட ஒரு பொழுது போக்கு இன்ப விளையாட்டுத்தான் என்பது அவளுக்கு புரியாமலில்லை. மோனிக்காவுக்கு ஏமாற்றமாக இருந்தது. என்னதான் மனதைக் கட்டுப்படுத்தினாலும், ஏமாற்றங்களைத் தாங்கும் பக்குவம் அவளுக்கு வரமறுத்தது.

"நான் விரும்பும் ஒருவர், என்னோடு உறவாடும் ஒருவர் எனக்கு முழுமையாகச் சொந்தமில்லையே என்றும் ஏக்கம் எனக்குள் எழுந்தது. என்னை நானே சீர்தூக்கிப் பார்க்கும்போது இத்தகைய உறவுகளைத் தவிர, வேறுவிதமான உறவு எனக்குக் கிட்டக்கூடும் என்று நான் நினைக்கவில்லை. இத்தகைய நிலை எனக்கு மட்டுமல்ல, என்னைப் போன்ற பல இளம்பெண்களுக்கும் ஏற்பட்டுள்ளது என்று என்னை நானே சமாதானம் செய்ய முயன்றேன்!" என்று பின்னர் ஒரு கட்டத்தில் மோனிக்காவே கூறியிருந்தாள்.

கல்லூரியிலும் உளவியல் பாடங்களை மோனிக்கா கற்றாள். தன்னுடைய வாழ்க்கையை ஆராயும் வாய்ப்பும் பெற்றாள்.

தான் தனக்கே உண்மையாக இல்லாமல், ஒரு பொய்யான, போலித்தனமான வாழ்க்கையை வாழ்ந்து வருவதாகக் கருதினாள்.

இதற்கிடையே பிளேய்லருக்கும் மோனிக்காவுக்கும் இடையே இருந்த உறவு பலருக்கும் தெரிய வந்துவிட்டது.

பிளேய்லரே பலரிடமும் தங்கள் உறவைப் பற்றி கூறிவிட்டான்.

நாடகக் கல்லூரியில் வேறு பல மாணவிகளும் பிளேய்லருடன் உறவு வைத்திருந்தனர். அவர்களிடமும் மோனிக்காவுக்கும் தனக்கும் இடையே உறவு இருந்ததை கூறித் தம்பட்டம் அடித்தான் பிளேய்லர்.

இதனால் மோனிக்காவுக்கு பல சங்கடங்கள் ஏற்பட்டன. உளவியல் நிபுணரான டாக்டர் கசோர்லாவிடம்தான் இப்படியான சந்தர்ப்பங்களில் மோனிக்கா யோசனை கேட்பது வழக்கம்.


"பிளேய்லருடனான உறவை மெல்ல மெல்ல விட்டுவிடு. அதுதான் நல்லது. அவன் நல்லவனுமல்ல, நம்பிக்கையானவனுமல்ல!" என்று உளவியல் நிபுணர் ஆலோசனை கூறினார்.

### யோசனை

மோனிக்காவின் தந்தையாருக்கும், தாயாருக்கும் பிளேய்லருடன் மோனிக்காவின் உறவு பற்றி தெரியவந்தது. அவர்கள் தனித்தனியாக மோனிக்காவுக்கு புத்தி கூறினார்கள்.

இது பற்றி மோனிக்காவின் தாயார் பின்வருமாறு கூறியிருந்தார்:

" எனது மகளுடன் அவன் தகாத உறவு வைத்திருக்கிறான் என்பதைத் தெரிந்திருந்தும், அப்பள்ளியில் படிக்கும் வேறு பல மாணவிகளுடனும் உறவாடி வருகிறான் என்பதையும் முன்னரே தெரிந்திருந்தும், அது பற்றி பள்ளி நிர்வாகிகளிடம் நான் முறையிட்டிருக்க வேண்டும். ஆனால் அப் பொறுப்பில் இருந்து தவறிவிட்டேன். என்னுடைய மகளை சந்திக்கு இழுக்க விருப்பமில்லாமையால்தான் அமைதியாக இருந்துவிட்டேன்."



தந்தையுடன்

தந்தையார் லிவின்ஸ்கி இது பற்றி கூறியபோது: "தகாத உறவை உடனடியாகக் கத்தரித்து விடுமாறு அவளிடம் கூறினேன். ஆனால் அவளுடைய நெருக்கம் இத்தனை நீண்டகாலம் நிலவும் என்று நான் கருதவே இல்லை," என்றார்.

மோனிக்காவுக்கும் பிளேய்லர்மீது கசப்பு இருந்தது. அவன் தன்னைவிட அவனது குடும்பத்துக்கே முக்கியத்துவம் கொடுப்பதை உணர்ந்ததுமே அவனை விட்டு [illegible]ந்தான் நினைத்தாள்.

ஆனால் அது நரக வேதனையாக இருந்தது. அவனிடம் இருந்த ஏதோ ஒரு சக்தி அவளை அவன்பால் இழுத்துக் கொண்டிருந்தது.

"அவன் ஒரு குப்பை. உன்னுடன் மட்டுமல்ல; பல இளம் பெண்களுடன் காதல் லீலைகளில் ஈடுபடுவதும், இளம் பெண்களை தனது விளையாட்டுப் பொம்மைகளாக நினைப்பதும்தான் அவனது வேடிக்கையான வாடிக்கை. ஒரு கெட்ட கனவாக நினைத்து அவனை மறந்துவிடு!" என்று மோனிக்காவின் தாயார் இதமாகப் பதமாக பலமுறை எடுத்துரைத்தார்.

பல நாட்கள் மனப்போராட்டத்தின் பின்னர் பிளேய்லருடன் உறவைக் கத்தரிக்கும் [illegible] எடுத்தாள் மோனிக்கா.

அதற்கு முன்னர் பிளேய்லரை சந்தித்து, நட்போடு பிரியத் தீர்மானித்தாள்.

பிளேய்லரைச் சந்தித்தபோது அவனிடம் இருந்து வந்த வார்த்தைகள் மோனிக்காவுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தின.

(வருவாள்)

---

**இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?**

**முல்லைத்தீவு வாசகிக்கு அதிஷ்டம்!**

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி

இவர்தான்: திருமதி ச.சந்திரா, மாவட்ட வைத்தியசாலை, முல்லைத்தீவு.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.





சக்தி தனக்கே கருவி யாக்கு-அது
சந்ததமும் சக்தினைச் சூழும்-மனம்
சக்தி தனக்கே கருவியாக்கு-அதில்
சாவு பெறும் தீவினையும் ஊழும்.

-சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# திருந்திய திருடன்

ஓர் ஊரின் எல்லையில் சந்நியாசி ஒருவர் குடில் அமைத்து வாழ்ந்து வந்தார். அவர் ஊர் ஊராகச் சென்று செல்வந்தர்களிடம் பணம் திரட்டி அனாதைக் குழந்தைகளுக்கு வழங்குவார்.

ஒருநாள் காலையில் சந்தியாசி கடவுளைத் தியானித்துக் கொண்டிருந்தார். அப்போது திருடன் அங்கே நுழைந்தான். சந்நியாசியிடம் அவன்,

"உன்னிடம் விலை மதிப்புள்ள பொருட்கள் ஏதாவது இருந்தால் கொடு. அல்லது எங்கே இருக்கிறது என்று சொல்!" என்று மிரட்டிக் கேட்டான்.

இதைக் கேட்ட சந்நியாசி,

"இந்தாப்பா! என்னைத் தொந்தரவு செய்யாதே. நேற்று மாலை ஒருவர் வந்து அனாதைக் குழந்தைகளிடம் சேர்க்கும்படி கொஞ்சம் பணம் கொடுத்தார். அது அந்தப் பெட்டிக்குள் இருக்கிறது. எடுத்துக் கொள்!" என்று சொன்னார்.

திருடனும் சந்நியாசி சொன்ன பெட்டியில் இருந்து பணத்தை எடுத்தான். பின் அதை மடியில் வைத்துக் கொண்டு புறப்பட்டான்.

"அன்பளிப்பு வழங்கியவருக்கு நன்றி சொல்வது நம் மரபல்லவோ? நீ நன்றி சொல்லாமல் செல்கிறாயே?" என்றார் சந்நியாசி.

உடனே திருடனும் "நன்றி" என்று சொல்லி விட்டுப் புறப்பட்டான்.

சந்நியாசியிடம் திருடிக் கொண்டு, ஒளிந்து ஒளிந்து செல்லும்போது காவலர்களிடம் மாட்டிக் கொண்டான் திருடன்.

காவலர்கள் அடித்த அடியில் சந்நியாசியிடம் திருடியதை ஒப்புக் கொண்டான் திருடன்.

காவலர்கள் திருடனை அழைத்துக் கொண்டு சந்நியாசியை விசாரிக்க அவரது குடிலுக்கு அழைத்துக் கொண்டு சென்றார்கள்.

காவலர்கள் சந்நியாசியிடம்,

"ஐயா! உங்களிடம் இருந்து பணத்தைத் திருடியதாகக் கூறிகிறான். உண்மையாகவா?" என்று கேட்டார்கள்.

அதற்கு சந்நியாசி.

"இவன் திருடவே இல்லை. நான்தான் அன்பளிப்பாகக் கொடுத்தேன் அதற்குக்கூட அவன் நன்றி தெரிவித்து விட்டுத்தான் சென்றான்" என்று கூறினார்.

இதைக்கேட்ட திருடன் திகைத்தான். சந்நியாசியே தன்னிடம் திருடவில்லை என்று கூறியதால் திருடனை அப்படியே விட்டு விட்டு காவலர்கள் போய்விட்டார்கள்.

அப்போதிருந்தே திருடுவதைக் கைவிட்டு விட்டு, அந்த சந்நியாசியின் சீடனாக மாறி விட்டான் அவன்.



## அதிசயம் - ஆனால் உண்மை!



➔ பிரேஸில் நாட்டில் இருக்கும் பாஹியாவில் தேவாலயம் ஒன்று உள்ளது. இது போர்த்துக்கல்லின் தலைநகரான லிஸ்பனில் 1550ல் கட்டப்பட்டு, பல பகுதிகளாக கப்பலில் ஏற்றப்பட்டு 5000 மைல் தூரத்தில் இருக்கும் பிரேஸிலுக்குக் கொண்டு வந்து பொருத்தப்பட்டது.



↑ பாரிஸில் பொனஸ்டேபிள் என்பவர் தன் எதிரியைத் துப்பாக்கியால் சுட்டபோது இறந்துவிட்டார். பொனஸ்டேபிள், இறந்த மனிதனை நோக்கிக் குனியும்போது, பிணத்தின் தசைகள் விறைத்து நேர்ந்த செயற்பாட்டில் கையில் இருந்த துப்பாக்கி வெடித்து, அவரும் இறந்தார்.



← சுவிற்ஸர்லாந்தில் உள்ள க்ருயெர் நகர ஆண்கள் எல்லோரும் போருக்குச் சென்ற சமயம் பார்த்து பெர்னிஸ் படை அந்நகரைச் சூழ்ந்து கொண்டது. அன்றிரவு அந் நகரப் பெண்கள் ஆட்டு மந்தையைத் தயார் செய்து, ஒவ்வொரு ஆட்டின் தலையிலும் தீப்பந்தம் கொளுத்தி எதிரிகள் இருக்கும் திசையை நோக்கி அனுப்பினர். இது ஏதோ பிசாசுகளின் வேலை என்று பெர்னிஸ் படையினர் பயந்து ஓடிவிட்டனர்.

## பிளாட்டினம் செய்திகள்



❖ பூமியின் பரப்பில் தங்கத்தைப் போலவே அரிதாகக் கிடைப்பது பிளாட்டினம். தங்கம் போன்று இது அழகில்லாவிட்டாலும் தங்கத்தின் விலையை விட இதன் விலை மிக அதிகம்.

❖ கொலம்பியாவில் உள்ள 'பின்டோ' ஆற்று மணலில் பிளாட்டினம் கட்டி கட்டியாகக் கிடைத்ததால், 'பின்டோ வெள்ளி' என்று பொருள்படும் வகையில் இது பிளாட்டினம் என அழைக்கப்படுகிறது.


❖ முதன் முதலாக பிளாட்டினச் சுரங்கங்கள் ரஷ்யாவின் யுரால் என்ற இடத்தில் தோண்டப்பட்டன. 1828 முதல் 1845 வரை ரஷ்ய அரசு பிளாட்டினத்தால் செய்யப்பட்ட நாணயங்களையே வெளியிட்டன.

❖ தங்கம் 1063 பாகை செல்சியஸ் வெப்ப நிலையில் உருகும். ஆனால் பிளாட்டினத்தை உருக்க 1773 பாகை செல்சியஸ் வெப்பநிலை தேவை.

❖ சார்ள்ஸ் வுட் என்ற ஆங்கிலேய விஞ்ஞானியும், அன்டனியோ டி ஷல்லோவா என்ற ஸ்பானிஷ் கணிதவியலாளருமே முதன் முதலாக பிளாட்டினத்தை ஆராய்ந்த ஐரோப்பியர்கள்.

❖ பிளாட்டினம் இரும்பில் கரையும் தன்மையுடையது. எனவேதான் பூமியில் இது மிகக் குறைவான அளவு கிடைக்கிறது.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **02.10.1999.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **315**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 313

பரிசுக்குரியவர்:
எம்.ஜே.அஹமட் அமானி,
ஸாஹிரா தேசியக் கல்லூரி, புத்தளம்.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| ஸ்ரீ.கிறிஷாந்தி,<br>சாந். கிளயர் மகளிர் வித்தியாலயம், கொழும்பு-06. | ஷ.ஃபான் ஸ.ஃவாஹிர்,<br>ஸாகிரா தேசிய பாடசாலை, மாத்தளை. |
| மிதுஷணன் வரேந்திரன்,<br>நம்மாதா பாடசாலை, நுவரெலியா. | ப.சத்யா,<br>புனித அந்தோனியார் மகளிர் மகா வித்தியாலயம், கொள்ளுப்பிட்டி. |
| தர்ஷிகா-சிவலிங்கம்,<br>வ/இறம்பைக்குளம், மகளிர் மகாவித்தியாலயம், வவுனியா. | சி.நிரோசன்,<br>புனித சவேரியர் மகாவித்தியாலயம், திருகோணமலை. |
| ஃபர்ஸானா ஃபாறூக்,<br>பாத்திமா பாலிகா முஸ்லீம் பாடசாலை, முறத்தஹகமுல்லை. | ஃபர்ஸானா ரவூப்,<br>இ/பலாங்கொடை தமிழ் மகா வித்தியாலயம், பலாங்கொடை. |
| செல்வம் கிருஷாந்த்,<br>தி/செல்வநாயகபுரம் தமிழ் மகா வித்தியாலயம், திருகோணமலை. | எம்.கவிதா,<br>விபுலாநந்த மத்திய கல்லூரி, காரைதீவு-04. |

## விடுகதைகளும் விடைகளும்


1. சுட்டவன் சந்தைக்குப் போகிறான், செத்தவனும் சந்தைக்குப் போகிறான். அவர்கள் யார்?
2. மலை போன்ற மனிதன் கண்ணீர் விட்டால் காணாமல் போய்விடுவான். அவன் யார்?
3. வெள்ளை நிலத்தில் கறுப்பு விதை போட்டேன், வாயால் எடுக்கலாம், கையால் எடுக்கமுடியாது. அது என்ன?
4. இருண்டதோர் காட்டில் மிரண்டதொரு பன்றியை பத்துப்பேர் துரத்தி இரண்டு பேர் குத்தினார்கள். அது என்ன?
5. தங்கை விளக்குக் காட்ட, அண்ணன் மத்தளம் கொட்ட, அக்கா தண்ணீர் தெளிக்கிறாள். அது எனட்ன?
6. சலசலப்பான் சந்துக்குள்ளே, அவன் இருக்குமிடம் பொந்துக்குள்ளே. அவன் யார்?
7. பாடத்தெரிந்தவனுக்கு ஆடத் தெரியாது, ஆடத்தெரிந்தவனுக்கு பாடத் தெரியாது. அவர்கள் யார்?
8. தொட்டால் ஒட்டிக்கொள்வான், ஒட்டிக்கிட்டு உயிரெடுப்பான். அவன் யார்?
9. ஒல்லி சுப்பன், ஒற்றைக்கால் கறுப்பன். அவன் யார்?
10. பறிக்கப் பறிக்கப் பெரிதாகும். அது என்ன?

### விடைகள்

1. பானை, கருவாடு
2. பனிக்கட்டி
3. தாளில் எழுத்துக்கள்
4. பேன்
5. இடி, மின்னல், மழை
6. நாக்கு
7. குயில், மயில்.
8. மின்சாரம்
9. ஊதுபத்தி
10. குழி

தொகுப்பு: ஏ.அகல்யா.

## வாலின் பயன்கள்



**குரங்கிற்கு வால் இருக்கிறது எதற்காக?**

குரங்கின் வால் அதற்கு இன்னொரு கை போன்றது. குரங்கு அங்கேயும் இங்கேயும் மரத்திற்கு மரம் தாவுகிறது அல்லவா? அந்த சமயத்தில் எதையாவது கெட்டியாகப் பிடித்துக் கொள்வதற்கு அதற்கு வால் உதவுகிறது.

**முயலுக்கு வால் இருக்கிறது. அதற்கு வால் ஏன்?**

முயலுக்கு இருக்கும் வால் அதற்கு ஒரு நல்ல பாதுகாப்பு கேடயம். எதிரி விலங்குகளிடமிருந்து தப்பிப்பதற்காக முயல் தன் குட்டிகளுடன் ஓடும். அப்படி ஓடும்போது தாய் முயல் தனது வாலை அப்படி இப்படி அசைக்கும். அந்த அசைவைப் பார்த்துத்தான் குட்டி முயல்கள் தாங்கள் எந்தப் பக்கமாக ஓடவேண்டும் என்பதை விளங்கிக் கொள்ளும்.

**அணிலுக்கு வால் எதற்குத் தெரியுமா?**

அணில் உயரமான மரங்களில் வேகமாகத் தாவித் தாவி ஓடும். அப்படி ஓடும்போது தவறி விழுந்துவிடாமல் இருக்க, உடலை சமநிலைப்படுத்த. (பலன்ஸ் செய்ய.) அதனால்தான் அணில் ஓடிக்கொண்டிருக்கும்போது வாலை அப்படியும் இப்படியும் ஆட்டிக்கொண்டு ஓடுகிறது.

## போர்ட்லண்ட் பூச்சாடி



இலண்டன் அருங்காட்சியகத்தில் 200 வருடங்கள் பழமை வாய்ந்த பூச்சாடி ஒன்றுள்ளது. இந்தப்பூச்சாடி அருங்காட்சியகத்திற்கு வந்தது எப்படித் தெரியுமா?

ஆரம்பத்தில் இந்தப்பூச்சாடி பழைய இரும்புப் பொருட்கள் விற்கும் கடையில் தான் இருந்தது. இந்தச் சாடியின் மதிப்புத் தெரியாத கடைக்காரர் உடைத்துவிட்டார். பல துண்டுகளாகச் சிதறியது. சாடியின் அழகையும் பழமையையும் உணர்ந்த வெட்ஜ்வுட் என்ற மட்பாண்டக் கலைஞர், உடைந்த துண்டுகளை ஒன்று சேர்த்து, பழைய உருவத்துக்குக் கொண்டு வந்தார்.

25 சென்டிமீட்டர் உயரம் கொண்ட இந்தச் சாடியின் மீது கிரேக்க நாட்டின் கடல் தேவதையின் உருவமும் பூவேலைப்பாடுகளும் உள்ளன. 1783ல் டச்சஸ் ஒப் போர்ட்லாண்ட் என்ற இடத்தில் இருந்து கொண்டுவரப்பட்டதால் இது 'போர்ட்லாண்ட் பூச்சாடி' என அழைக்கப்படுகிறது.

பல சுற்றுலாப் பயணிகளைக் கவரச் செய்யும் இப்பூச்சாடி 1810ல் இங்கிலாந்து அருங்காட்சியகத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

## எப்படி வந்தது?



வெங்காயத்தை ஆங்கிலத்தில் ஒணியன் (Onion) என்று சொல்கிறோம். இந்தச் சொல் எப்படி வந்தது என்று தெரியுமா?

'ஒணியோ' என்ற இலத்தீன் சொல்லில் இருந்துதான் 'ஒணியன்' என்ற ஆங்கிலச் சொல் வந்தது. 'ஒணியோ' என்றால் இலத்தீன் மொழியில் பெரிய முத்து என்று அர்த்தம். வெங்காயம் பெரிய முத்தைப்போல் காணப்பட்டதால்தான் அது 'ஒணியோ' என்று அழைக்கப்பட்டது.

**இதுவரை**

பாக்கியத்தின் மகள் வர்ணாவின் நாய் பிங்கிக்கு 'டிஸ்டெம்பர்' எனப்படும் கொடிய நோய் வருகிறது. அதனைக் காப்பாற்றவே முடியாது என்று டாக்டர்கள் கைவிரிக்கின்றனர். ஆனால் அந்த நாய் அதிசயமாக உயிர் பிழைக்கிறது. வர்ணாவிடம் உள்ள அதிசய சக்திதான் அதற்கு காரணம் என்று டாக்டர்கள் நினைக்கின்றனர். சொர்ணம், நீலமேகம் தம்பதியின் மகள் பூவிழி கொலை தொடர்பான விசாரணையும் மறுபுறம் சூடுபிடிக்கிறது..

**இனி...**

# கையில் சிக்கிய மின்னல் 22



**த**ன் வயதையும் மறந்து வேகமாய் ஓட்டமும் நடையுமாய் வரும் அம்மாவை ஆச்சர்யமாய்ப் பார்த்துக் கொண்டு நின்றாள் வர்ணா.

பாக்யம் மூச்சிறைத்துக் கொண்டு வர்ணாவுக்குப் பக்கத்தில் வந்து நின்று அவள் தோள் மேல் கைவைத்தாள்.

"வர்ணா... நீ எங்கேடி போயிட்டே?"

"ஏம்மா... இப்படி ஓடி வர்றே...? நம்ம வீட்டுக்கு முன்னாடி கார் வந்து நின்னுட்டிருக்கு. யார் வந்திருக்காங்க?"

"நீ மொதல்ல வீட்டுக்குள்ளே வா... சொல்றேன்... வீதியில நின்னு எதையும் பேசிட்டிருக்க வேண்டாம்."

வர்ணா தன் முகம் பூராவும் குழப்பத்தை ஒட்ட வைத்துக்கொண்டு பாக்யத்தைத் தொடர்ந்து வீட்டுக்குள் போனாள். லேசான ஒரு திகைப்புக்கு உட்பட்டாள்.

ஹால் சோபாவில் டாக்டர் ரத்னவேலும் ராஜ்நாராயணனும் புன்னகை முகங்களோடு உட்கார்ந்திருந்தார்கள். வர்ணாவைப் பார்த்ததும் டாக்டர் கேட்டார்,

"என்னம்மா வர்ணா! இன்னமும் நீ கோபத்தோடுதான் இருக்கியா...? இல்ல கோபம் போயிடுச்சா?"

வர்ணா இரண்டு பேரையும் உஷ்ணமாய்ப் பார்த்துவிட்டு ரத்னவேலின் மேல் விழிகளை நிறுத்தினாள்.

"டாக்டர்..! மறுபடியும் என்னைக் கூட்டிட்டுப்போக வந்திருக்கீங்கன்னு நினைக்கிறேன். நீங்க என்னதான் சொன்னாலும் சரி, இனிமே நான் உங்ககூட வரப்போறதா இல்லை..."

ராஜ்நாராயணன் புன்னகைத்தார்.

"இனிமே நீவரவேண்டிய அவசியமே இல்லையேம்மா... என்னோட மனைவி திலகத்தின் மேல உன்னோட கைபட்டதும் என்ன அற்புதம் நிகழணும்னு நினைச்சோமோ அந்த அற்புதம் நிகழ்ந்து விட்டது. நீ புறப்பட்டுப்போன பத்தாவது நிமிஷம் திலகம் கண்ணைத் திறந்து பார்த்தா. பார்த்ததோடு மட்டுமில்லாமே பேசவும் செஞ்சா..."

வர்ணா முகத்தில் எந்த உணர்ச்சியையும் காட்டிக்கொள்ளாமல், "அப்படியா... ரொம்ப சந்தோஷம்" என்றாள்.

"என்னோட திலகத்துக்கு புனர்ஜென்மம் குடுத்த உனக்கு நன்றி சொல்லி விட்டு போலாம்னு தான்... நானும் டாக்டரும் உடனடியா கார்ல புறப்பட்டு வந்தோம்..."

"இதோ பாருங்க ஸார். இப்பவும் சொல்றேன். நீங்க நினைக்கிற மாதிரி என்கிட்ட எந்த சக்தியும் கிடையாது. நான் தெய்வம் கிடையாது. சாதாரண பொண்ணுதான். வாழ்வும் சரி, சாவும் சரி மனுஷங்க கையில் கிடையாது. உங்க மனைவி இப்ப கண்ணைத் திறந்து பார்த்திருக்காங்கன்னா அதுக்குக் காரணம் கடவுளோட அருள்தான். நான் கிடையாது."

ரத்னவேல் குறுக்கிட்டார்.

"அப்படீன்னு நீ சொல்லலாம்மா... ஆனா ஸாரோட ஒய்ஃப் உயிர் பிழைச்சதுக்கு காரணம் முழுக்க முழுக்க நீதான். உன் கைக்குள்ளே ஒரு மின்னலை ஒளிச்சு வெச்சிட்டிருக்கே.. அது பண்ணுகிற அற்புதம்தான் இதெல்லாம்."

"ஓ.கே. டாக்டர்... இப்ப நீங்க எனக்கு நன்றி சொல்லத்தானே வந்திருக்கீங்க...?"

"ஆமா..."

"சொல்லிட்டீங்கல்ல... புறப்படுங்க..."

ராஜ்நாராயணன் புன்னகைத்தார். "கோபம் இன்னும் உனக்கு தணியலை போலிருக்கு. பரவாயில்லை. நாங்க நன்றி தெரிவிச்சுட்டு உடனே கிளம்பிடறோம். பட் வெறும் வார்த்தையால நாங்க நன்றி தெரிவிக்க வரலை..."

"பின்னே..?"

ராஜ்நாராயணன் தான் கையோடு கொண்டு போயிருந்த ப்ரீப் கேஸை டீபாயின் மேல் வைத்து திறந்து உள்ளேயிருந்து வெல் வெட் போர்த்தப்பட்ட ஒரு ஜுவல் பாக்ஸை எடுத்தார்.

பிரித்தார்.

உள்ளே ஒரு வைர நெக்லஸ் குட்டி சூரியனாய் பிரகாசித்தது.

"நெக்லஸ் நல்லாயிருக்காம்மா? இதோட விலை அஞ்சு இலட்சம். உனக்காகத்தான் கொண்டு வந்தேன்..."

வர்ணா முகம் சிவந்தாள். "இதோ பாருங்க ஸார்... ஒரு நன்றியைச் சொல்றதுக்காக அஞ்சு இலட்ச ரூபாய் மதிப்புள்ள வைர நெக்லஸை வேஸ்ட் பண்ண வேண்டாம். நான் ஒரு உயிரைக் காப்பாத்திட்டதா நீங்க சந்தோஷப்பட்டா அந்த சந்தோஷமே எனக்குப் போதும். இந்த வைர நெக்லஸ் வேண்டாம். எடுத்துக்கிட்டு போயிடுங்க..."

"என்னது எடுத்துக்கிட்டு போயிடறதா? நல்ல கதை. இந்த நெக்லஸை உனக்கு ப்ரசண்ட் பண்றதுக்காக கொண்டு வரலேம்மா..."

"பின்னே... எதுக்காக...?"

"உன்னை நிச்சயம் பண்ணிட்டு போறதுக்காகத்தான் இந்த நகையைக் கொண்டு வந்திருக்கேன்."

"நி...நி...நிச்சயம் பண்றதுக்கா..?"

"எஸ்..." என்று சொல்லி ராஜ்நாராயணன் சிரிக்க பாக்யம் பக்கத்தில் வந்து வர்ணாவின் தோளை மெல்லத் தொட்டாள்.

"வர்ணா...! அவரோட பையனுக்கு உன்னைப் பெண் கேட்டு



வந்திருக்கார்!"

வர்ணா அதிர்ச்சியில் உறைந்துபோய், பாக்யத்தையே பார்க்க அவள் குரலைத் தாழ்த்திக் கொண்டு சொன்னாள்.

"உள்ளே ஒரு நிமிஷம் வா..."

பாக்யத்தைத் தொடர்ந்து உள்ளறைக்குப் போனாள் வர்ணா. எரிச்சலாய்க் கேட்டாள்.

"என்னம்மா இதெல்லாம்..?"

"அதிர்ஷ்டம் வந்து நம்ம வீட்டுக் கதவை தட்டிக்கிட்டிருக்கு வர்ணா.."

"அது அதிர்ஷ்டம் தான்னு எப்படி சொல்றேம்மா?"

**கிரைம் சக்கரவர்த்தி ராஜேஸ்குமார்**

"ஏண்டி...! ராஜ்நாராயணன் என்ன சாதாரண ஆளா..? மல்டி மில்லினர். இன்டர்நேஷனல் அளவுல எக்கச்சக்க பிஸினஸ். இந்தியாவில் இருக்கிற பத்து பணக்காரர்கள்ல இவரும் ஒருத்தர்னு புள்ளி விபரம் சொல்லுது. தன்னோட ஒரே பையனுக்கு உன்னைப் பெண் கேட்டு நம்ம வீட்டுப்படி ஏறியிருக்கார். இது அதிர்ஷ்டம் இல்லையா?"

"நீ அவருக்கு என்ன பதில் சொல்லியிருக்கே...?"

"உன்னைக் கேட்காமே நான் எப்படி பதில் சொல்ல முடியும்...? பொண்ணு வரட்டும்... கேட்டுச் சொல்றேன்னு சொல்லியிருக்கேன்."

"நான் அவங்களுக்கு என்ன பதிலைச் சொன்னா உனக்கு சந்தோஷமாயிருக்கும்...?"

"வர்ணா...! இதெல்லாம் நாம நினைச்சே பார்க்க முடியாத சம்பந்தம். நீ அவரோட மனைவியைத் தொட்டுக் குணப்படுத்தின ஒரே ஒரு காரணத்துக்காகத்தான் உன்னை அவர் வீட்டுக்கு மருமகளா கொண்டுபோக ஆசைப்படறார். நீ எந்த மறுப்பும் சொல்லமே கல்யாணத்துக்கு ஒத்துக்கணும்."

"அம்மா..."

"ம்..."

"நாம யோசனை பண்ண வேண்டாமா?"

"இதுல யோசனை பண்ண என்ன இருக்கு வர்ணா? நமக்கு இது மாதிரி ஒரு சம்பந்தம் அமையாது!"

"எனக்கு குழப்பமா இருக்கும்மா..."

"ஒரு ரெண்டு நாளைக்கு அப்படித்தான் இருக்கும் போகப்போக சரியாயிடும். நான் அவங்ககிட்ட போய் சம்மதம்னு சொல்லட்டுமா?"

"......"

"என்ன சொல்லட்டுமா... வேண்டாமா...?"

"சரி... சொல்லிடு."

★★★

**இ**ன்ஸ்பெக்டர் பலராமன் பொறுமை இழந்தவராய் நிமிஷத்துக்கு ஒரு தடவை மணிக்கட்டில் அப்பியிருந்த வாட்ச்சை பார்த்துவிட்டு ஜன்னல் வழியே ஹாஸ்பிடல் வாசலைப் பார்த்தார். டாக்டர் சந்திராதேவியும் தன் பங்குக்கு அவ்வப்போது பார்வையை வாசலுக்கு விரட்டினாள்.

கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் கரைந்து போயிருக்க பலராமன் குழப்பமாய் மோவாயைத் தாங்கி சந்திராதேவியிடம் நிமிர்ந்தார்.

"அரைமணி நேரத்தில் வந்துடறதா சொன்ன பிரதாப்பை இன்னும் காணோமே டாக்டர்..."

"எனக்கும் அதுதான் ஆச்சர்யமாயிருக்கு..! ஏதாவது ட்ராஃபிக் ஜாம்ல மாட்டிக்கிட்டானோ.. என்னவோ?"

"அப்படியொரு நிலைமை ஏற்பட்டிருந்தா ஃபோன் பண்ணி வர லேட்டாகும்னு சொல்லியிருக்கலாமே?"

"இன்னும் கொஞ்ச நேரம் வெயிட் பண்ணிப் பார்ப்போம். எப்படியும் பிரதாப் வந்துடுவான்..."

நீலமேகம் எதுவும் பேசத் தோன்றாமல் கன்னத்தில் கையை வைத்துக் கொண்டு நாற்காலிக்கு சாய்ந்து வெறித்த பார்வையோடு உட்கார்ந்திருந்தார்.

மேலும் ஒரு அரைமணிநேரம் கலாவதியாகியிருக்க பலராமன் பொறுமையைத் தொலைத்து விட்டு நாற்காலியைத் தள்ளிக் கொண்டு எழுந்தார்.

"அந்த பிரதாப் வராமே ஏமாத்திடுவான் போலிருக்கே..?"

"கண்டிப்பா வருவான் இன்ஸ்பெக்டர். அப்படி ஏமாத்தறவனாயிருந்தா நமக்கு ஃபோன் பண்ணி பேசியிருக்க மாட்டான்.."

சந்திராதேவி சொல்லிக் கொண்டிருக்கும்போதே மேஜை மேல் இருந்த டெலிஃபோன் தன் வாயைத் திறந்தது. பலராமன் பாய்ந்து ரிஸீவரை எடுத்தார்.

"ஹலோ..."

"ஹலோ" பதிலுக்கு ஒரு பெண் மறுமுனையிலிருந்து வந்தது. தொடர்ந்து குரல் கேட்டது. "அது டாக்டர் சந்திராதேவியோட நர்ஸிங் ஹோம் தானே?"

"ஆமா..."

"இன்ஸ்பெக்டர் பலராமன் அங்கே இருக்காரா?"

"ஹோல்டிங்..."

"ஓ..! நீங்கதானா இன்ஸ்பெக்டர்...? பிரதாப்புக்காக வெய்ட் பண்ணிட்டிருக்கீங்க போலிருக்கு..."

"ஆமா... நீயாரு...?"

"நான் யார்ன்னு தெரிஞ்சு உங்களுக்கு ஒண்ணும் ஆகப் போறதில்லை. சொல்ல வந்த விஷயத்தை மட்டும் சொல்லிட்டு ரிஸீவரை வெச்சுடறேன். பிரதாப் அரைமணி நேரத்துக்குள்ளே உங்களை வந்து பார்க்கிறதா சொல்லியிருந்தான் இல்லையா?"

"ஆமா..."


"நீங்க உங்க ஆயுசு பூராவும் காத்திட்டிருந்தாலும் அவன் வரப்போறதில்லை. வேறவேலை ஏதாவது இருந்தா போய்ப் பாருங்க."

(தொடர்ந்து வரும்)

'சிறை', 'தர்மயுத்தம்' போன்ற வெற்றிப்படங்களை இயக்கியவர் ஆர். சி.சக்தி. அவரது சூடும் சுவையும் கலந்த அனுபவங்கள் இங்கு தொடராகின்றன.

# நான் தர்மயுத்தம் 07

ஹாலுக்குள் சென்றேன். சம்பிரதாயமான உபசரிப்புக்கள், விசாரிப்புகள் நடந்தன. என் மனம் எதிலுமே லயிக்கவில்லை. ஏன் அந்த ஆட்டோ ஒட்டுநர் அப்படிச் சொன்னார்? அங்கிருந்தவர்கள் முஞ்சியைப் பார்த்தேன். நன்றாகத்தான் இருந்தது. அந்த ஒட்டுநர் மனதில் ஏற்பட்டிருந்த கசப்பிற்கான காரணம் விளங்கவில்லை. அதைத் தெரிந்து கொள்ளாமல் இன்று நான் தூங்கப்போவதுமில்லை.



விழா முடிய, இரவு மணி பத்துக்கும் மேலாகிவிட்டது. அங்கிருந்தவர்களிடம் விடை பெற்று, வெளியே வரும்போது, 'ஆட்டோ வந்திருக்குமோ? ஒருவேளை வந்திட்டுப் போயிருக்குமோ? வந்திருந்தாலும், அந்த ஆட்டோ ஒட்டுநர் நம் கேள்விகளுக்குப் பதில் சொல்லுவாரா?' இப்படிப்பட்ட சந்தேகங்களுடன் வெளியே வந்தேன்.

"இங்கே இருக்கேன் சார்." என்று ஓரத்தில் நின்று கையாட்டினார். ஒருவகையில் நிம்மதி. ஆட்டோ ஓடிக்கொண்டிருந்தது. பேச்சை எங்கிருந்து துவக்குவது? என்று யோசித்துக் கொண்டிருந்தேன்.

அதற்குள் அந்த ஒட்டுநர், "சார்! நான் ஒரு டீ குடிச்சிக்கட்டுமா?" என்றார். "தாராளமா. அப்படியே எனக்கும் ஒரு டீ வாங்கிக் கொடுங்க" என்றேன். "நானே கேக்கலாமுன்னு நெனைச்சேன். உங்களுக்குப் புடிக்குமோ, புடிக்காதோன்னுதான் கேக்கல" என்றார்.

**அனுபவம்**

வண்டி ஓரமாக நின்றது. எதிரில் இருந்த டீக்கடையில் இரண்டு டீ வாங்கிக் கொண்டு வந்து, ஒன்றை என்னிடம் கொடுத்து விட்டு, அருகில் நின்றபடியே தானும் சாப்பிட ஆரம்பித்தார்.

"சொந்த ஆட்டோவா?" என்றேன்.

"இல்லை சார், வாடகை. சம்பளத்துக்குத்தான் ஒட்டறேன்."

"அப்படி இருக்கும்போது ஏன் நைட்ல ஒட்ட மாட்டேங்குறீங்க. வருமானம் வருமே!"

"வருமானம் மட்டுமா சார் வரும்; வம்பும், வழக்கும் வரும் சார். திடீர்னு நாலைந்து பேர் தண்ணியை போட்டுக்கிட்டு வருவாங்க. 'நாங்க சொல்ற எடத்துக்கு வண்டியை ஓட்டு. இல்லேன்னா குத்திடுவேன்'னு கத்தியைக் காட்டுவாங்க.

அவனுங்க கொலை பண்ணப் போறாங்களா, கொள்ளையடிக்கப் போறாங்களா, பொம்பளை பிடிக்கப் போறாங்களான்னு தெரியாது. உயிருக்குப் பயந்து, ஓட்டத்தான் வேணும். கடைசில அவனுங்க பொலிஸ்ல மாட்டும்போது நம்மளையும் சேத்துப் பிடிச்சுக்கிட்டுப் போயி, பொலிஸ் ஸ்டேஷன்ல லாடம் கட்டுவாங்க.

சிலபேர் சாராயக் கேனை வண்டியில ஏத்துவாங்க. 'ஏத்தாதேன்னு' சொன்னா அடிக்க வருவான். ஏத்திக்கிட்டுப் போனா... 'ஆட்டோவில் சாராயம் கடத்தின வாலிபர்'னு கைது பண்ணி, அவங்களோட நம்மளையும் நிக்கவச்சு, ஃபோட்டோ எடுத்து பேப்பர்ல போடுவாங்க. நம்ம லைஃப்பே, க்ளோஸ் ஆயிடும் சார். அதனாலதான் நைட்ல வண்டி ஒட்டுறதில்லை.

என் ஃப்ரெண்ட் ஒருத்தன் இருக்கான் சார். அவனும் ஆட்டோதான் ஒட்றான். கொஞ்ச நாளுக்கு முன்னால அவனுக்கு அம்மை போட்டிருந்திச்சு. ஒரு பத்து நாள் வீட்ல இருந்துட்டு, அன்னைக்குத்தான் மொத தண்ணி ஊத்தியிருக்காங்க. அவனுக்கு வீட்ல இருக்க முடியல்ல. சம்பாதிக்கிற ஆசையில நைட் சவாரிக்கு வண்டியை எடுத்துட்டுப் பொறப்பட்டிருக்கான்.

அவங்க அம்மா எவ்வளவோ சொல்லிப் பார்த்திருக்காங்க. 'வேணாண்டா, இன்னும் ஒடம்பு பூரணமா, கொணமாகல்ல. ஒரு தண்ணிதான், ஊத்தியிருக்கு புண்ணெல்லாம் கூட சரியா ஆறல்லடா, நீ போக வேணாம்'னு சொல்லியிருக்காங்க. இவன் கேக்கல்ல. வண்டியை எடுத்துக்கிட்டு வந்துட்டான்.

நடுஇராத்திரியில வாகினி ஸ்டுடியோவுக்கு எதிரில வண்டியை நிறுத்தியிருந்தப்ப, நாலு பேரு நல்லா குடிச்சிட்டுவந்து, ஊருக்கு வெளியே இருக்கிற ஒரு இடத்தை சொல்லி, 'அங்க போகணும் வா'ன்னு கூப்பிட்டிருக்காங்க.

இவனுக்குப் பயம். கூப்பிடறவங்க குடிபோதையில இருக்காங்க. போகச் சொல்ற இடமோ ஊருக்கு வெளியில. தனக்கு ஒடம்பு வேற சரியில்ல.

அதனால, 'வண்டி வராது'ன்னு சொல்லியிருக்கான். வாய்த் தகராறு ஆரம்பிச்சிருச்சு. 'வண்டி வராதுன்னா, இங்க எதுக்குடா நிறுத்தி வச்சிருக்கே?' என்று அவர்கள் கேட்க, இவனும் கோபத்தில், 'இதென்ன உங்க அப்பன் வீட்டு ரோடா?' என்று பதிலுக்குப் பேச, அந்த நாலு பேரும் சேர்ந்து அவனை அடிக்கத் துவங்கி விட்டனர்.

அடி தாங்காமல் இவன் துடித்திருக்கான். 'அம்மை வார்த்த உடம்பு சார், அடிக்காதீங்க' என்று கத்தியிருக்கிறான். சத்தம் கேட்டு வந்த ஒண்ணு, ரெண்டு பேரும் வேடிக்கை பார்த்திருக்காங்களே தவிர, விலக்கிவிடல. தற்செயலாக அந்தப்



பக்கம் ரோந்து வந்த பொலிஸ்காரர்கள் தலையிட்டு, அவனைக் காப்பாத்தியிருக்காங்க.

மறுநாள் என்னைச் சந்தித்து அழுதான். 'நேத்து என்னம்மா போட்டு அடிச்சிட்டாங்க. என் உடம்பைப் பாரு' என்று சட்டையைத் திறந்து காட்டினான். நான் எந்தப் புண்ணைப் பார்ப்பது? அம்மை வார்த்த புண்ணையா? நேத்து ராத்திரி அவன் அடிவாங்கிய புண்ணையா? பாவம், அவன் ஒரு அப்பாவி சார், இந்த மாதிரி எத்தனையோ பேர் இருக்காங்க.

ஆனா ஒரு சில ஆட்டோகாரங்க. இருக்காங்க... தப்பான வழியில சம்பாதிச்சு சீக்கிரம் பணக்காரன் ஆகணும்கிற துடிப்பில. அந்த ஒரு சிலபேரை வச்சிக்கிட்டு மொத்த ஆட்டோகாரங்களும் தப்பானவங்கன்னு சொல்ல முடியுமா சார்?"

என் மூளையில் 'சுரீர்' என்று ஊசி குத்தியது. உண்மைதான். 'ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்ற பழமொழி, சமையலுக்கு வேண்டுமானால் சரியாக இருக்கலாம்; ஒரு சமூகத்தை எடைபோட அது சரியான அளவு கோலாகாது. அதற்கு உதாரணமாக, என் எதிரில் நின்று பேசிக்கொண்டிருந்த அந்த ஆட்டோ ஒட்டுநரையே சொல்லலாம்.

(அனுபவங்கள் தொடரும்)

ஐரிஷ் விடுதலைப் போராட்டம்
750 வருடங்களுக்கு மேற்பட்ட
நீண்ட நெடிய வரலாறு கொண்டது!
1900ம் ஆண்டு ஆரம்பம் வரை
ஐரிஷ் மிதவாதத் தலைவர்கள்
பிரித்தாளும் பிரித்தானியரால்
ஏமாற்றப்பட்டனர்.
இந்நிலையில் 1913ம் ஆண்டு
ஆயுதம் தாங்கிய ஐரிஷ் தொண்டர் படை
உருவானது. இதுவே பிற்காலத்தில்—
1919 ல் ஐரிஷ் குடியரசு இராணுவமானது.
ஐரிஷ் தொண்டர் படையின் வீரன்
தான் பிரீன். மனதை உலுக்கும்
எழுச்சிமிகு உண்மை, வரலாறு இது.

# வீரன் தான் பிரீன்

04

**கடந்த வாரம்**

ஐரிஷ் தொண்டர்படை போராளிகள் தான் பிரீன் தலைமையில் பதில் ஆளுநரைக் கொல்வதற்கு தாக்குதல் நடத்துகிறார்கள். அயர்லாந்தை ஆக்கிரமித்த பிரிட்டிஷ் அரசுக்கு எதிர்ப்புக் காட்டவே இந்த நடவடிக்கை.

**இனி...**



**1914** ஆம் ஆண்டு அயர்லாந்தில் மூன்று விதமான பட்டாளங்கள் இருந்தன. ஒன்று அயர்லாந்தை அடக்க பிரிட்டிஷ் ஆதிக்கத்தை நிலைநாட்ட உபயோகிக்கப்பட்ட ஆங்கில இராணுவம்; மற்றொன்று ஆரஞ்சுப்படை; மூன்றாவது ஐரிஷ் தொண்டர்படை.

அயர்லாந்தின் வட பாகத்திலுள்ள அல்ஸ்ரர் மாகாணத்தார் தங்களுக்குத் தனி உரிமைகள் வேண்டுமென்றும், மற்றப் பக்கத்தாரோடு சேர்ந்து வாழமுடியாதென்றும் கூறி தம் நாட்டாரையே எதிர்ப்பதற்காக ஆரஞ்சுப் படையை வைத்துக் கொண்டிருந்தனர்.

ஆங்கில அரசாங்கத்தார் அல்ஸ்ரர் வாசிகளைத் தங்களுக்குப் பக்கபலமாக வைத்துக் கொண்டிருந்தனர். ஐரிஷ் தொண்டர் படை என்பது தேசியவாதிகளான மிதவாதிகளுடைய இராணுவம். அதை ஸின்பீன் படை என்றும் சொல்வதுண்டு.

அயர்லாந்து பூரண சுதந்திரம் பெற்றுக் குடியரசை அமைப்பதற்காக அரசாங்கத்துடன் போராடுவதற்காக அந்தப் படை அமைக்கப்பட்டிருந்தது.

யுத்த ஆரம்பத்தில் பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தினர் அயர்லாந்துக்கு ஒரு சுய ஆட்சி மசோதாவை நிறைவேற்றி வைத்திருந்தனர்.

அந்தச் சொற்பச் சீர்திருத்தத்தைக் கூடக் கொடுக்கக்கூடாது என்று அல்ஸ்ரர் வாசிகள் எதிர்த்தனர். டப்ளின் நகரத்தில் ஒரு நாடாளுமன்றம் ஏற்படுத்தப்பட்டாலும், தாங்கள் உயிருள்ளவரை அதை எதிர்த்துப் போராடுவதாக அவர்கள் கூறினார்கள்.

தங்களுக்கு ஒரு தனியான நாடாளுமன்றமும் தனி அரசியலும் வேண்டுமென்று கோரினார்கள்.

அயர்லாந்துக்கு சுயராஜ்யமே கொடுக்கக்கூடாதென்று பிடிவாதமாகக் கூறிவந்த பெருஞ்செல்வர்களான ஆங்கிலக் கொன்ஸர்வேட்டிவ் கட்சியார் அல்ஸ்ரர் வாசிகளுக்குப் பொருளுதவியும் பிற உதவிகளும் செய்து அவர்களைப் பிரிட்டிஷ் பாராளுமன்றதுக்கு விரோதமாகத் தூண்டி விட்டார்கள்.

அல்ஸ்ரர்வாசிகள் துணிவுடன் முன்வந்து வெளிப்படையாக யுத்தப் பயிற்சி பெற்று, ஆயுதம் தாங்கி, ஆரஞ்சுப் படையை அமைத்துக் கொண்டார்கள். அக்காலத்தில் ஸின்பீன் இயக்கம் அயர்லாந்தில் அதிகச் செல்வாக்கைப் பெற்றிருக்கவில்லை. டப்ளின் தலைநகருக்கு வெளியே அதைப்பற்றி ஜனங்களுக்கு அதிகம் தெரியாது.

ஐரிஷ் பிரமுகர்களில் பெரும்பாலார் பாராளுமன்றத்தில் சென்று கிளர்ச்சி செய்யவேண்டும் என்ற கொள்கையையுடையவர்கள். அவர்களுக்கு ஜான் ரெட்மண்டு என்பவர் தலைவர். யுத்த ஆரம்பத்தில் அவர் தமது அமிதவாதத்தை எல்லாம் பறிகொடுத்துவிட்டு, பிரிட்டிஷாருக்கு உதவிப் பட்டாளம் சேர்த்து அனுப்பிக் கொண்டிருந்தார்.

அவரைப் பின்பற்றியவர்களும் அதே வேலையில் ஈடுபட்டார்கள். ஆரஞ்சுப் படையோ, முற்றிலும் ஆங்கிலேயருக்கு அநுகூலமானது. இந்நிலையில் அயர்லாந்தின் சுதந்திரத்தைப்பெறவும், ஆங்கிலேயப் படையையும் ஆரஞ்சுப்படையையும் எதிர்த்து நின்று போராடவும் ஒரு தேசியப்படை அவசியம் என பிர்சி, மக்னீல் முதலிய தலைவர்கள் கருதினார்கள்.

அவர்களுக்கு நாட்டில் அதிகச் செல்வாக்கு இல்லாதிருந்தபோதிலும் ஐரிஷ் வாலிபர்கள், அவர்களுடைய கருத்தை உற்சாகத்துடன் ஏற்றுக்கொண்டு, ஐரிஷ் தொண்டர்படையை அடைந்தனர். ஜேர்மனியுடன் இங்கிலாந்து போராடுவது தர்மத்திற்காக அன்று என்பதை அவர்கள் தெரிந்து கொண்டிருந்தார்கள்.

அவர்களுடைய ஒரே கனவு தாய்நாடு விடுதலை பெற்று சுதந்திரக் காற்று வீசவேண்டும் என்பதே.

டோனோஹில் என்னும் கிராமத்தில் தான்பிரீன் 1914ஆம் ஆண்டு ஐரிஷ் தொண்டர் படையில் முதன் முதலாகச் சேர்ந்து கொண்டான்.

அவனுடைய சொந்த ஊர் திப்பெரரி நகரம். அவனுக்கு அப்பொழுது வயது இருபது. அக்காலத்திலேயே அவனைப் பொலிஸார் புரட்சிக்காரன் என்று கவனித்து வர ஆரம்பித்தனர்.

அவனும் அவன் நண்பர்களும், ஜான் ரெட்மண்ட் ஆங்கிலப்படையில் சேரவேண்டுமென்று கூறிவந்ததைச் சிறிதும் கவனியாமல், தங்களுடைய வேலையில் ஈடுபட்டு வந்தனர். அவர்கள் மைதானங்களில் கூடி வெளிப்படையாகத் தேகப்பயிற்சி, யுத்தப் பயிற்சி முதலியன செய்து வந்தார்கள்.

எப்பொழுதாவது ஒரு காலம் வரும், அக்காலத்தில் தங்கள் பகைவனை ஒரு கை பார்க்கலாம் என்பதே அவர்களுடைய நம்பிக்கை. அவர்களுடைய பகைவன் இங்கிலாந்தைத் தவிர வேறெவருமில்லை.

யுத்தம் வளர வளரப் பொலிஸார் அவர்களை மிகவும் நெருக்கமாகக் கவனித்து வந்தனர். அவர்கள் ஜேர்மனியர்களிடம் அனுதாபமுடையவர்கள் என்று பறை சாற்றப்பட்டது.

பத்திரிகைகளில் ஜேர்மனியர்கள் மனிதத் தன்மையையே கைவிட்டு அநாகரிகமான கொடுமைகளைச் செய்து வந்ததாகப் பொய்யும் புரட்டும் பிரச்சாரம் செய்யப்பட்டு வந்ததால், ஐரிஷ் ஜனங்கள் அவர்களை வெறுத்து, ஆங்கிலேயரிடம் அனுதாபம் காட்டி வந்தனர்.

பணக்காரர்களும், கொழுத்த வியாபாரிகளும், பெரிய குடியானவர்களும் பிரிட்டிஷ் துருப்புக்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து வந்தார்கள்.

ஆனால் ஐரிஷ் தொண்டர் படையிலுள்ளவர்கள் ஆங்கிலேயருக்கு எவ்வித உதவியும் செய்ய மறுத்துவிட்டனர்.

ஆங்கில யுத்த வீரர்களுக்குச் சௌகரியங்கள் அமைத்துக் கொடுப்பதாக ஐரிஷ் பொலிஸார் சில நிதிகள் சேர்த்து வந்தனர். தான் பிரீன் அந்த நிதிக்கு உதவி செய்ய மறுத்து விட்டான். அதனால் பொலிஸார் அவனிடம் வெறுப் படைந்தனர்.

அப்பொழுது தான் பிரீன் ஒரு பெரிய ரெயில்வே கம்பனியில் வேலை பார்த்துக் கொண்டிருந்தான். பொலிஸார் அவனுடைய மேலதிகாரிகளிடம் இது பற்றிப் புகார் செய்தனர்.

**தமிழில் ப.ராமஸ்வாமி**

ஐரிஷ் பொலிஸ் படையைப்பற்றி நாம் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம். மற்ற நாடுகளிலுள்ள பொலிஸ் படையைப் போலில்லாமல் அது விசேஷ இராணுவப் பயிற்சி பெற்றிருந்தது.

அயர்லாந்தில் சாதாரணமான குற்றங்கள் அதிகமாயில்லாமையால் சுதந்திர விருப்பம் கொண்ட தொண்டர்களைப் பின்பற்றிச் சென்று துப்பறிவதே பொலிஸாரின் முக்கிய வேலையாக இருந்தது. அவர்கள் கோயில்களில் பாதிரிமார்கள் செய்த மதப் பிரசங்கங்களைக்கூட சுருக்கெழுத்தில் எழுதிக் கொண்டு போவது வழக்கம்.

அவர்கள் மொத்தம் சுமார் பதினாயிரம் பேர்கள் இருந்தனர். ஒவ்வொரு கிராமம் அல்லது நகரத்தினுடைய அளவுக்குத் தக்கபடி இரண்டு முதல் இருபது பேர்வரை நாடெங்கும் பொலிஸார் பிரித்து வைக்கப்பட்டிருந்தனர்.

இந்தப் பொலிஸாரின் உதவி இல்லாவிடின் அயர்லாந்தில் இருந்த நாற்பதினாயிரம் ஆங்கிலத் துருப்புக்களும் எவ்வித வேலையும் செய்ய முடியாது.

ஏனென்றால் படை வீரர்களுக்கு நாட்டைப் பற்றியும் நாட்டிலுள்ள ஜனங்களின் பழக்க வழக்கங்களைப் பற்றியும் ஒன்றும் தெரியாது. ஜனங்களோடு நெருங்கிப் பழகி உளவறிந்து சொல்வதற்கு ஐரிஷ் பொலிஸாரின் உதவி இன்றியமையாததாக இருந்தது.

எனவே ஐரிஷ் பொலிஸ் படையே 'ஆங்கில அரசாங்கத்தின் மூளை' என்று சொல்லலாம். இந்தப் படை 19 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் சேர் ரொபார்ட் பீல் என்பவரால் அமைக்கப்பட்டதால், ஐரிஷ் பொலிஸாரை ஜனங்கள் பீலர்கள் என்று ஏளனமாக அழைப்பது வழக்கம்.

இனி நம்முடைய சரித்திரத்தைக் கவனிப்போம். யுத்த ஆரம்பமுதல் தான் பிரீனும் அவனுடைய தோழர்களும் தங்களுடைய சொந்த வேலைகளுக்கிடையே அடிக்கடி கூடி யுத்தப்பயிற்சியை இடைவிடாது நடாத்தி வந்தார்கள்.

அத்துடன் துப்பாக்கி, றிவோல்வர் முதலிய ஆயுதங்கள் எங்கெங்கு கிடைக்குமென்று தேடிச் சேர்த்து வந்தார்கள். அக்காலத்தில் தொண்டர்களிடம் ஆயுதங்கள் மிகச் சுருக்கமாகவே இருந்தன, 1915ம் ஆண்டு முழுவதும் 1916ம் ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வரையிலும் இவ்வாறு பயிற்சி செய்தலும் ஆயுதங்கள் சேர்ப்பதிலும் கழிந்தன.

1916ஆம் ஆண்டு ஈஸ்டர் விழாவ[illegible] போது அயர்லாந்தில் சுதந்திரத்திற்கா[illegible] ஒரு பெரிய கலகம் நடந்தது.

அக் கலகத்தில் திப்பெரரித் தொண்டர்கள் அதிகம் பங்கெடுத்துக் கொள்ள முடியாமல் போயிற்று. ஏனென்றால் அக் கலகத்தை நடத்திய மேலதிகாரி அவர்களுக்குச் சரியான உத்தரவுகள் அனுப்பவில்லை, ஒன்றுக்கொன்று முரண்பட்ட பல உத்தரவுகளினால் அவர்கள் தீவிரமாக எதையும் செய்ய முடியாது போயிற்று.

1916 ஆம் ஆண்டு கலகம் ஜனங்களிடையே ஒரு பெரிய மாறுதலை உண்டு பண்ணிவிட்டது. அதுவரை ஸின்பீனர்களை மதியாமல் இருந்தவர்கள் திடீரென்று அவர்களிடம் அதிக அபிமானம் காட்ட ஆரம்பித்தார்கள். ஆனால் தொண்டர்களுடைய படை அப்பொழுது போதிய வல்லமை பெற்றிருக்கவில்லை.

ஆயிரக்கணக்கான தொண்டர்களை அரசாங்கத்தார் பிடித்து நாடு கடத்தி இங்கிலாந்துக்கு அனுப்பி விட்டனர். தொண்டர்களுடைய ஆயுதங்கள் பலவற்றைப் பொலிஸாரும் இராணுவத்தாரும் பறித்துக் கொண்டு போய்விட்டனர்.

(பயணம் ...தொடரு[illegible])

---

**தமிழகத்தின் பிரபல நடிகர் ஒருவர் உட்பட சில முக்கிய பிரமுகர்கள் பற்றி கவியரசு கண்ணதாசன் எழுதி பெரும் சர்ச்சை கிளப்பிய தொடர்.**

29

# அரங்கம் அந்தரங்கம்

**கவியரசு கண்ணதாசன்**

> இதில் வரும் நிகழ்ச்சிகள் பல கற்பனையே: ஆனால் இதில் காணப்படும் பாத்திரங்கள் யாவும் உண்மையே!
>
> அவர்களது பெயர்களைக் கூடக் கொஞ்சம் தான் மாற்றிக் கொடுத்திருக்கிறேன். விவரம் தெரிந்தவர்கள் எந்தப் பாத்திரம், யார் என்பதைப் புரிந்து கொள்வார்கள்.
>
> இவர்களைப் பற்றிய ஏராளமான சம்பவங்கள் எனது குறிப்பில் இருக்கின்றன. ஆனால் அவையெல்லாம் ஒரே சம்பவத்தின் பல பதிப்புகளே!
>
> நான் எழுதியுள்ள நாவல்களில் உயிரோடு உலாவும் சிலரை முழுக்க முழுக்கப் பாத்திரங்களாக்கி எழுதிய நாவல் இதுதான்.
>
> இதில் நானும் ஒரு பாத்திரம். என்னோடு சம்பந்தப்படுத்தப் பட்டு வரும் கமலா, உண்மையில் வாழ்ந்த ஒருத்தி. ஆனால் இவளது உண்மைப் பெயர் வேறு.
>
> ~கண்ணதாசன்~

அந்த அறையில் கமலா ஒரு மூலையில் களைப்புற்றுச் சாய்ந்து தூங்கிக் கொண்டிருந்தாள்.

சாமர்த்தியமாகக் கற்பகம், "இவளைக் கொண்டு போய் அந்த அறையில் தூங்க வைத்துவிட்டு வருகிறேன்!" என்றாள்.

"இல்லை. அவள் இங்கேயே தூங்கட்டும். நீயும் உட்கார்," என்றார் கமலநாதன்.

குறைந்த பட்சம் கமலாவையாவது சந்திரசூரியனிடம் பேசிக் கொண்டிருக்கச் செய்யலாம் என்று அவள் எண்ணினாள். கமலநாதன் விடவில்லை.

அவளுக்கு பக்கத்திலேயே இவளைத் தள்ளினார். கட்டிப் பிடித்து முத்தமிட்டார். கையெடுத்து கும்பிட்டாள் கற்பகம்.

"சரி, அவளைக் கொண்டுபோய் தூங்க வைத்துவிட்டு வா!" என்றார் கமலநாதன்.

கமலாவை எழுப்பிச் சந்திரசூரியன் இருந்த அறைக்கு அழைத்துக் கொண்டு போனாள் கற்பகம்.

அறையைத் திறந்து பார்த்தாள். பாத்ரூம் கதவையும் திறந்து பார்த்தாள். அங்கே சந்திரசூரியன் இல்லை. அவர் போயே போய்விட்டார்!

ஒரு பெருமூச்சு விட்ட கற்பகம் இப்போது உண்மையிலேயே கமலாவைத் தூங்க வைத்தாள்.

திரும்பி அவள் வெளியிலே வரும் போது தலையிலே அடித்துக் கொண்டு அழுதாள். 'தன் மானத்தைக் காப்பாற்றுவதற்காக இன்னொருத்தியைப் பலியிட்டும்கூட, தன் மானம் போகப் போகின்றதே!' எனக் கலங்கினாள்.

பிறகு கண்களைத் துடைத்துக் கொண்டு கமலநாதன் இருந்த அறைக்குள் நுழைந்தாள்.

கமலநாதன் இப்போது மறுபடியும் சாப்பிட்டிருந்தார்.

மது அளவுக்கு மீறிப் போய்விட்டால், மனிதன் செயலற்றவனாகி விடுவான். அது கற்பகத்திற்கும் தெரியும்.

மிகவும் சிரித்துப் பேசுபவள் போல் அவள் பேசிக் கொண்டிருந்தாள். ஏற்கனவே களைப்புற்றிருந்த கமலநாதன் மேலும் பலவீனமடைந்து உளறிக் கொண்டிருந்தார் என்றாலும் அவளைத் தொல்லை செய்வதை நிறுத்தவில்லை.

ஆனால், ஆண்டவன் அப்போது அவள் பக்கத்தில் இருந்தான்.

கீழே ஒரு ஜீப் வந்து நிற்கும் சத்தம் கேட்டது. மின்சாரப் பொத்தான் அலறிற்று.

மேலதிகாரியிடமிருந்து அவசரமான அழைப்பு.

ஏதோ ஒரு இடத்தில் பயங்கரமான முறையில் ஆறு பேர் கொல்லப்பட்டு விட்டார்களாம்.

கொலைகாரர்களுக்கு நன்றி தெரிவித்தாள் கற்பகம்.

கமலநாதன் அவசர அவசரமாகச் சட்டையை மாட்டிக் கொண்டு புறப்பட்டார்.

கற்பகத்திற்கு இப்போது கமலாவின் மீது கருணை பிறந்தது. அந்தப் பாவப்பட்ட ஜன்மத்தை ஒருமுறை பார்க்க வேண்டும் போல் தோன்றிற்று.



மெதுவாகக் கதவைத் திறந்து உள்ளே நுழைந்தாள். கமலாவின் கன்னத்தில்தான் எத்தனை காயங்கள்?

அறிந்திருந்தும் யானை பாகனையே கொல்லும். சர்க்கஸ் வித்தைகாரன் தான் வித்தை காட்டும் மிருகத்தாலேயே சாவான். மிருகங்களோடு பழகியபின் காயங்களைப் பற்றிக் கவலைப்பட்டு என்ன பயன்!

விலைமாதர்களைவிடத் தான் வேகமாக ஆகிவிட்டதாகக் கற்பகத்திற்குத் தோன்றிற்று.

கணவன் வரும்வரை வெளியூருக்குப் போய் விடலாம் என்று கருதினாள். ஆனால் கையிருப்புப் பணத்தை என்ன செய்வது என்று பயந்தாள். பிறகு அவற்றையும் எடுத்துக் கொண்டு போகலாம் என்று முடிவு கட்டினாள்.

அந்த இரவிலே தன்னைச் சுத்தப்படுத்திக்கொள்ள விரும்பினாள். முதலில் புறத்தூய்மை; பிறகு அகத்தூய்மை. குளிரக் குளிரக் குளித்தாள். வெகுநாட்களுக்குப் பிறகு இப்போதுதான் பூஜை அறையைத் திறந்தாள்.

ஏராளமான தெய்வங்களின் படங்கள் அங்கே இருந்தன.

தன்னைச் சுற்றிப் போடப்பட்ட முள் வேலிகளைக் களையும்படி அவள் இறைவனிடம் வேண்டிக் கொண்டாள்.

அழுதபடியே பாடினாள். அப்போதும் கையில் இருக்கும் கறுப்புப் பணத்தையெல்லாம் கொளுத்திவிட்டால் என்ன என்ற எண்ணம் அவளுக்குத் தோன்றவில்லை.

ஏதோ ஒரு வகையில் மனித மனதில் ஆசை விளையாடுகிறது. பிறரது ஆசையைக் கண்டு கோபப்படுகிறவர்கள் கூடத் தனக்கென்று ஒரு ஆசையை வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

காலை மணி 4-30.

இருந்த கறுப்புப் பணங்கள் அனைத்தையும் இரண்டு பெட்டிகளில் வைத்தாள். விலை உயர்ந்த நகைகளை ஒரு பெட்டியில் வைத்தாள். தனக்கென்று சில ஆடைகளை எடுத்துக் கொண்டாள்.

காலையில் புறப்பட்டு பெங்களூருக்குப் போய்விடுவதென்று டிரைவரை எழுப்பிக் காரைத் தயார் செய்யச் சொன்னபோது அவள் கைக்கு ஒரு கேபிள் கிடைத்தது. அவசரமாகப் பிரித்துப் பார்த்தாள்.

தன் கணவன் நாராயணசாமி அன்று மாலை சிங்கப்பூரில் இருந்து பம்பாய்க்கு வருவதாகவும், பம்பாயில் இரண்டு நாட்கள் தாமதித்து விட்டுச் சென்னைக்கு வருவதாகவும், அதில் செய்தி இருந்தது.

உடனே அவள் பெங்களூர் பயணத்தை மாற்றினாள்.

மதியம் புறப்படும் விமானத்தில் பம்பாய்க்கு போய் விட முடிவு கட்டினாள்.

'விமானத்தில் போவதென்றால் இந்தப் பெட்டிகளைச் சுமந்து கொண்டு போக முடியாதே! ஏன், அது தேவையுமில்லையே? எப்படியும் இரண்டு நாட்களில் கணவனோடு திரும்பப் போகிறோம், அதுவரைக்கும் பெட்டிகளைக் கொஞ்சம் இடம் மாற்றி வைக்கலாம்' என்று அதற்கும் பூஜை அறையைத் தேர்ந்தெடுத்தாள்.

பணக்காரர்களுக்குப் பணமும், நகையும் தானே பூஜைப் பொருள்கள்!

சோர்வுற்று வாடிய கொடிபோல் தூங்கிக்கொண்டிருந்த கமலா மெதுவாக எழுந்து அங்கே வந்து நின்றபடி, "நான் போகட்டுமா அக்கா!" என்றாள்.

அவளையே பார்த்த கற்பகம் நகைப் பெட்டியைத் திறந்து ஒரு பத்துப் பவுன் இரட்டை வடம் சங்கிலியை எடுத்து அவள் கழுத்தில் போட்டாள்.

'மானம் தங்காமல் போய்விட்டது; இதாவது தங்கட்டும்' என்பது போல் இருந்தது அது!

கமலா விடைபெற்றுக் கொண்டாள்.

(அந்தரங்கம் வரும்)

# சந்தேகம்



முபீதா சக்காப்

மனித மனம் விசித்திரமானது. ஒரு வினாடியில் ஓராயிரம் எண்ணங்களை எண்ணக் கூடியது. அதே போல்தான் இந்த வானமும். மனம் செய்யும் சேட்டைகளை மிஞ்சக் கூடிய மேகங்களின் வித்தைகள்.

அது கொழும்பு தனியார் பஸ் நிலையம். சிறிது நேரத்தில் இடி முழக்கத்துடன் மின்னல், 'மழை தூற ஆயத்தம்' என்று எல்லோரையும் பார்த்து எச்சரித்த வண்ணமிருந்தது வானம். சனங்கள் மின்னல் வேகத்தில் செயல்பட்டுக்கொண்டிருந்தனர். நானும் ஓட்டமும், நடையுமாக மட்டக்களப்பு செல்லும் இன்டர்சிட்டி பஸ்ஸை நெருங்கினேன்.

"டேய் அஜித்!" என்றொரு குரல்.

கண்டக்டரிடம் காசைச் செலுத்தி, டிக்கட்டைப் பெற்றுக் கொண்டு பஸ்சினுள் திரும்பிப் பார்வையைச் செலுத்தினேன். "ஏய் மச்சான் மாலன் நீயா? நீ இங்கே, எப்படா ஊரிலிருந்து வந்தாய்?" என வினவியவாறு அவனுக்குப் பக்கத்திலுள்ள சீட்டில் போய் உட்கார்ந்தேன்.

"நேற்றுத் தான் ஊரிலிருந்து வந்தேன். பம்பலப்பிட்டி லிபர்ட்டி பிளாசாவிற்கு ஆள் தேவையென்று விளம்பரம் பார்த்தேன். இன்று காலைலதான் இன்டர்வியூ.ஒரு வாரத்தில் ரிசல்ட் தெரியும்," என்றான் மாலன்.

"உனக்கு கம்பனியில் லீவா?"

"ஆமாண்டா! ஊருக்குப் போய் ஆறு [illegible]மாகுது. கடிதமும் வருகுதில்ல. எல்லாரையும் பார்த்து கனநாளாகுது. ஒரு கிழமை லீவில் வாறன். அது சரி கொழும்பு வந்த நீர் நேரா என் றூமிற்கு வந்திருக்கலாம் தானே?" இரக்கம் கலந்த கோபத்துடன் நான்.

"மச்சான், கொழும்பு முந்தி மாதிரி இல்லடா.திடீர் திடீரென்று எல்லா இடமும் செக்கிங். என்னால் எதுக்குப் பிரச்சினை என்றுதான்!" எனக்கும் அது சரியென்றுபட்டது. பஸ் புறப்பட்டுப் போய்க் கொண்டிருந்தது.

செங்கலடியைப் பிறப்பிடமாகக் கொண்ட நாங்கள் ஒரு பள்ளித் தோழர்கள். வகுப்பில் அவன்தான் முதல் மாணவன். அவனின் புத்திக் கூர்மை, பேச்சுத்திறமையைக் கண்டு சக மாணவர்கள் "அரசியல்வாதியா வந்தால் நீ பிழைத்துக் கொள்வாய்!" என்று கிண்டலடிப்பதுண்டு.

மன்னம்பிட்டி சோதனைச் சாவடியில் பஸ் நிற்கவும், நினைவு திரும்பியவனாய், செக்கிங் முடிந்து பஸ் புறப்பட்டது. அடுத்து, வெலிக்கந்தை சோதனைச் சாவடியில் என்னையும், நண்பனையும் விசாரித்து பதிலளித்ததில் போதும் போதுமென்றாகி விட்டது.

புதிதாக நால்வர் இணைந்து கொள்ள, புணானை இராணுவ முகாமையும் தாண்டி சென்றுக் கொண்டிருந்தது பஸ். ஒரு காலத்தில் இரு பக்கமும் தேக்கு மரங்களையும், பலயின செடி கொடிகளையும் சுமந்திருந்த இந்த பூமி மிருகங்களுக்குப் பயப்படாமல், மனிதர்களுக்குப் பயந்து இந்த இயற்கை வனத்தைப் பாலைவனமாக்கி இருப்பது தெரிந்தது. என்ன கொடுமை இது?

மாலன் எதையோ யோசித்துக் கொண்டு வர அவனது சிந்தனையைக் கலைத்தேன். புதிதாக ஏறிய நால்வரில் ஒருவன் எங்களையே பார்த்த வண்ணம் இருந்தான்.

"மனிதன் எவ்வளவு சுயநலமானவன்னு இந்த சிதைந்த அழகு சொல்ற மாதிரி இருக்குடா."

"என்ன! காடுகள் அழிஞ்சிட்டு வர்றதை சொல்றியா? ஒண்ணோட அழிவுல தான் இன்னொண்ணோட ஆதாரமிருக்கு."

"ஜனத் தொகை ஏறிப் போச்சு. வேலையில்லாத் திண்டாட்டம். நாடு இருக்கும் நிலையில் பணத்துக்கு எங்கேடா போவாங்க? திருட்டு, கொலை, கொள்ளை எல்லாம் அதிகமானது இதனால தானே? இதுக்கெல்லாம் காரணம் கவர்மென்ட் தான். பாப்புலேஷன் குறையனும்னா எஜுகேஷன் வளரணும். கல்வியறிவு, சிந்திக்கிற திறன்.... அது இருந்தா மனிஷன் பொறுப்புள்ளவனாவான். ஆனால் அரசியல்வாதிகளுக்குத் தான் நட்டம். ஜனங்க எவ்வளவுக்கெவ்வளவு முட்டாள்களா இருக்காங்களோ, அவ்வளவுக்கவ்வளவு அவங்க சம்பாத்தியம் விரிவாகுமே!"

மாலனின் பேச்சு சிந்தனையைத் தூண்டியது. மேலும் தொடர்ந்தான்.

"அரசாங்கம் என்றைக்கு மக்கள் பிரச்சினையைத் தீர்க்கப்போகுது? 'டிவைட் அன்ட் ரூல்'னு வெள்ளைக்காரன் சொல்லிக் கொடுத்த நரித்தனம் தான் நல்லா டெவலப் ஆகியிருக்கு. இடிடா கட்டடத்தை என்று ஜனங்களை ஏத்தி விட்டு வேடிக்கை பார்த்தது அரசாங்கம். இடித்தவங்களை சும்மாவாடா விட்டேன்னு தூண்டி விட்டு கலவரத்துக்கு பேஸ் போட்டுக் கொடுக்கிறதும் அதே அரசாங்கம்தான். இதையெல்லாம் தட்டிக் கேட்கிறது யார்?" தன் மனதிலுள்ளதை கேள்வியால் கேட்டான் மாலன்.

பஸ்சும் ஒட்டமாவடி பாலமருகேயுள்ள சோதனைச் சாவடியில் நின்றது. அதுவரை எங்களை நோட்டமிட்டு வந்தவன் விரைவாக இறங்கிப் போய், அங்க நின்ற இராணுவத்திடம் ஏதோ சொன்னான். கண்மூடித் திறப்பதற்குள் இராணுவம் பஸ்ஸை சூழ்ந்தனர்.

எங்கள் இருவரையும் பிடித்து ஜீப்பில் ஏற்றினர். எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் கேட்கவில்லை. கம்பனி விலாசம், அடையாள அட்டையைக் காட்டியும் செவிசாய்க்கவில்லை. "சந்தேகத்தில் தான் பிடித்துள்ளோம். விசாரணை முடிய விட்டு விடுவோம்" என்றனர்.

பஸ்சில் வந்த அனைவரும் நாங்கள் மறையும் வரை பார்த்துக் கொண்டே நின்றனர். அவர்களால் என்ன செய்ய முடியும்?

# விடத்தல் தீவு



உவைஸ்கனி

எங்கேயோ பிறந்தோம்; எங்கேயோ வாழுகிறோம். முடிவு வரும் ஊரும் முன்னுக்கு வருவதில்லை. ஆம் அத்தனை சுழற்றி வாழ்வின் வேகம்.

யுத்தத்தால் உருவான சில கட்டுக்கோப்புக்கள் காதலைத் தகர்த்து, மண்வாசனையை மறந்து, மொழியை மாற்றி, உடல் உருவையும் மாற்றி வாழ்ந்து தொலைக்கின்ற வரலாறுகளே அதிகமாகி வருகின்றன.

அம்மா தாயூரே! உன்னை சுகம் விசாரிக்கும் அளவு நான் சுதந்திரமானவனல்ல. உன் கோடை மழையில் கொழுத்தும் வெயிலில் உன் வனப்பின் ஓரம் குந்தியிருக்கவே ஆசைப்படுகிறேன். எல்லைகளற்ற நினைவுகளோடு பரந்துவிரிந்த சதுப்பு நிலங்களில், பாய்ந்து வரும் தரவை மணல்களுக்கிடையே கன்னாக்களை ஊடறுத்து சிற்றாறுகள் பாயும் சின்னக் கிராமத்தில் உறைந்தும், உறையாமலும் வெண்ணிற உப்புக்களை கைகளில் அள்ள ஆசைப்படுகிறேன். அவதியுறும் ஆனந்த தேடல்களிடையே உள்ளத்தில் ஊறும் மனசின் வேட்கையை மாற்றிக் கொள்ள ஒரு போதும் சித்தமாய் இல்லை.

ஆஹா என்ன ஒரு மெத்தென்ற சுகம். சொர்க்கமே என்றாலும் அது நம்மூரைப் போல வருமா? கடந்த காலத்தை கடலில் கலக்கி தரையில் வாழும் மனித மீன்களாய் நாங்கள் வாழ்கிறோம். நிகழ்காலம்- அது நின்றுபோன காற்று. எதிர்காலமே பலாத்காரமாய் அதனைத் தள்ளிக்கொண்டு வருகிறது. காலம் கடக்கின்றபோதும் காணாமல் தவிப்பது எங்கள் தாய்பூமி மட்டுமே!

ஊர் தாலாட்ட தூங்குகின்ற உறவு பிரிவு கண்டதால் பாரங்கள்கூடி பரிதவித்துப் போயினர். பிரிவு கதை சொன்னது. மனிதன் நோய்வாய்ப்பட்டான். அட எழுத எடுத்த ஊருக்குள் இத்தனை சோகமா என நீங்கள் எண்ணத் தோன்றலாம். ஆம் சோதரங்களே கையில் அள்ளிய மலர்கள் இன்று காட்டில் சருகுகளாய் செத்துவிட்டன. மரங்கள் பட்டுப் போக பட்டாம் பூச்சிகள் அநாதைகளாகி விட்டன.கூடு முடிக்கொள்ள குருவிகள் வேலிகளை நம்பியே வாழத் தொடங்கிவிட்டன.

மலர்களில் இருந்து மகரந்த மணிகள் மண்ணில் விழட்டும். மரம் வளர கூடுகள் கட்ட குருவிக் கூட்டங்கள் பறந்து வரட்டும். இது எத்தனை விடத்தல் தீவுகளின் எதிர்பார்ப்பு என்பது மனசுக்குத்தான் தெரியும். நேற்றுக் கண்ட அந்தக் கனவில் என் தாய்ப் பூமியின் கம்பீரம் கலைந்து கிடக்க, ஊர் அருகினில் காடுகள் வளர்ந்து, இருந்த வீடுகள் இல்லாமல்போய் புதிய வீடுகள் எங்கெல்லாமோ பிறக்க என்தாய்ப் பூமி அன்று அலங்கோலமாய் தெரிந்தது.

என்ன செய்வது... மனிதத் தலை எழுத்தை இறைவனால் மட்டுமே மாற்றமுடியும் என்பதுபோல் கால ஓட்டங்கள் வருடங்களாகிக் கொண்டிருக்கின்றன.

நண்பர்களையும், நண்பிகளையும் காண ஆசையாய்தான் இருக்கின்றது. கடற்கரை மணல், கொட்டுவலை மீன், தைக்காபிட்டி மைதானம், இரு மசூதிகள், இரு மாதா கோயில்கள், ஒரு பிள்ளையார் கோயில், எனக்கு அறிவை சொல்லித் தந்த ஆசைமிகு அலிஹார் பாடசாலை- இன்னும் எம் ஊத்தைகளைத் தாங்கிக்கொண்ட பள்ளமடுக் குளம்... அப்பப்பா எத்தனை ஞாபகத் தேடல்கள் இந்த உள்ளப் பொதிகைக்குள். இப்படியே ஆயிரம் கனவுகளும், நினைவுகளும் வந்து வந்து போவதால் சில இரவு நேரங்களில் ஊர் வந்துவிட்டுப் போவதால் மனசுக்கு இங்கே நிம்மதி கிடைக்கிறது.

சுதந்திரமாய் இந்த மனிதக் குருவிகள் பறந்து திரியும்போது சொந்த ஊருக்குள் மட்டும் செல்ல சிறகுகளுக்கு இங்கே அனுமதி இல்லாமல் அலைந்து திரிவது பாவமாய் தெரியுது எமக்கு.

யுத்தம் எப்போது முடியும், யாரறிவார் அந்த இறைவனைத் தவிர? ■

# மீண்டும் பேசமாட்டாளா?



செ.குணரத்தினம்

அன்னப்பிள்ளை ஆச்சிக்கு ஆறு நாட்களாக மூச்சிழுத்துக் கொண்டிருந்தது. படுத்தபடுக்கையாக் கிடந்தாள். வைத்தியர்களெல்லாம் கைவிட்டு விட்டார்கள். உற்றார் உறவினர்களெல்லாம் ஆச்சி கண் மூடுவதை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். இரவைக்கும், பகலுக்கும் சமைத்துப்போட அணிசேர்ந்து, 'லிஸ்ற்'வேறு போட்டெடுத்துக் கொண்டார்கள்.

கனடா, அவுஸ்திரேலியா என்று வாழும் ஆச்சியின் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் எல்லோரும் ஆள்மாறி ஆள் தொலைபேசியில் அன்னப்பிள்ளை ஆச்சியின் முடிவை அடிக்கடி கேட்டுக் கொண்டேயிருந்தார்கள். ஊரிலுள்ள மூத்த மகன் மரணச் சடங்கில் தனது பங்களிப்பும் இருக்க வேண்டும் என்பதற்காக 'ஆயிரம் கண்ணீர் அஞ்சலி நோட்டீஸ் அடிப்பதற்கு எவ்வளவு செலவாகும்?' என்ற அச்சகத்தாரிடம் கேட்டு [illegible]ற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் [illegible]ண்டிருந்தார்.

கிட்டத்தட்ட எல்லோருமே ஆச்சி கண் மூடும் நாளுக்காகக் காத்துக் கொண்டிருந்தார்கள்.

இத்தனை வருட காலம் தன் சுய விருப்புகளைப் பாராமல் இராக்கண் பகல் கண் விழித்திருந்து, பத்தியமிருந்து எங்களையெல்லாம் காத்து வளர்த்து பெரியவர்களாக்கி வைத்தாளே! அவளின் இறுதி நேரத்திலாவது அவளுக்குப் பக்கத்திருந்து ஒரு சொட்டுக் கண்ணீராவது விட வேண்டாமா? என்று எந்தப் பிள்ளைதானும் எண்ணியதாகத் தெரியவில்லை. எல்லோரும் மேலே மேலே ஏறிச் சென்று உயரத்திற்குப் போய் விட்டபின் உதைத்துத் தள்ளிய ஏணியாக அன்னப்பிள்ளை ஆச்சி படுத்த படுக்கையாகக் கிடந்தாள்.

அவள் பக்கத்தில் ஒரேயொரு உருவம் மாத்திரமே ஏக்கத்தோடு குந்திக் கொண்டிருந்தது. அந்த உருவம் வேறுயாருமில்லை. அவளுடைய கணவன்தான். எந்தவித சொந்தபந்தமும் இல்லாமல் எங்கோ பிறந்து வளர்ந்து வாழ்ந்த இவர்கள் இருவரும் ஏதோ விதிவசத்தால் கணவன் மனைவியாக இணைந்து கொண்டார்கள்.

அன்போடும், பண்போடும், பாசத்தோடும் குடும்பப் படகைச் செலுத்திய இவர்கள் வாழ்வில் எந்தத் துயரங்களும் ஏற்பட்டதில்லை.

மூன்று பிள்ளைகளுக்குத்தாய் தந்தையாகி, அவர்களை வளர்த்துப் படிப்பித்து அவர்களையும் தாய் தந்தைகளாக வாழ வழிசெய்து கொடுத்து விட்டு, இளைப்பாறிக் கொண்டவர்கள். இன்று தனித்துப் போய் விட்டார்கள்.

நாளைக்கு அன்னப்பிள்ளை ஆச்சி இறந்து போனால் இவன் தனித்துப் போய் விடுவான். மனைவியோடு பேசிச் சிரிப்பதைப் போல மற்றவர்களுடன் நடந்துகொள்ள முடியுமா? தங்களுக்குள் இருக்கின்ற குறைகளையும் நிறைகளையும் கணவன்- மனைவி இருவரால் மாத்திரம்தான் உணர்ந்து கொண்டு அதற்கேற்றபடி விட்டுக் கொடுத்து வாழமுடியும்.

ஆயிரம்தான் சிறப்பாக வாழ்கின்ற பிள்ளைகளாக இருந்தாலும் ஒரு அன்பு மனைவி பக்கத்திலிருப்பதுபோல் வருமா?

கூட்டிலிருந்து இறக்கை முளைத்து பறந்து போன குருவிகளாக பிள்ளைகளெல்லோரும் இவர்களை விட்டு வெகுதூரம் போய்விட்டார்கள்.

தன் மனைவி அன்னம்மாவைப் பார்த்தபடியே அவன் குந்தியிருந்து அழுது கொண்டேயிருந்தான்.

எப்போது சாவாள் என்று எல்லோருமே நாட்களை எண்ணிக் கொண்டிருக்க, இவன் மாத்திரம் 'என் மனைவி கண்திறந்து பார்க்க மாட்டாளா! மீண்டும் பழையபடி எழுந்திருந்து என்னோடு பேசமாட்டாளா?' என்று தவித்துக் கொண்டிருந்தான்.

உண்மையான அன்பு கொண்ட கணவன் மனைவி உறவு மற்றைய எல்லா உறவுகளையும் விட மேலானது. அந்த உறவின் வலிமைதான் இப்போது அவன் இதயத்தைப் பிழிந்துகொண்டிருக்கிறது. ●

# ஸ்டைல்!



ஜெ.சூரியன்

ஜெயாவுக்குள் மனசு கொள்ளாத எரிச்சல் கிளம்பியது. எதைப் போட்டுடைத்து தீர்த்துக்கொள்ளலாமென்ற வேகம் வார்த்தைகளில் தெறித்து நின்றது. "பாழாப்போன மழை, பெய்தால் ஒரேயடியாக ஊத்தையுடைச்சு கொட்டும். இல்லை அடைச்சுப்போய் கிடக்கும். நாம படற அவஸ்த்தை அதுக்கு எங்கே தெரியுது."

கையில் வைத்திருந்த பாத்திரத்தை, கர, கரவென்று தேய்த்து சொட்டிக்கொண்டிருந்த பைப்பில் பிடித்துக் கழுவினாள். அருகில் நின்று நச்சரித்துக்கொண்டிருந்த மகன் பகீரதனின் தொல்லை தாளமுடியாமலிருந்தது. அந்த மின்சாரத்தடையினாலேற்பட்டிருந்த இறுக்கத்தை சாடுவதுபோல் தன் மனசின் எரிச்சலை வார்த்தைகளாக்கி வெளியிலெறிந்தாள்.

அவனோ எதையும் சட்டை செய்யாதவனாக "அம்மா தாம்மா, அம்மா. இப்ப, இப்ப செய்தாகணும்." என்றான் விடாமல்.

"வேணாண்டா, எத்தனை தடவை சொன்னாலும் விளங்குதில்லை. கண்ட, கண்ட க்ரீம்களை தடவாதைன்னு சொன்னா கேட்பியா? அவன் சொன்னான், இவன் சொன்னனென்று ஜெல், பிளைக்கன் நைட் இன்னும் என்னென்னவோ இழவெடுத்த பெயர்களையெல்லாம் சொல்லி காசு வாங்கிப்போய் ஏதாவது கண்டியா?"

"அதுதாம்மா, இப்பிடி பண்டிமுள்ளாக குத்திக்கிட்டு பத்தையா மண்டிக்கிடக்குது. முடி படிய மாட்டேன்குது. என்னென்ன ஸ்டைலிலை பிரண்ஸெல்லாம் முடியை ட்ரிம் செய்து பார்க்க எத்தனை அழகாக இருக்கம்மா. நானும் அப்பிடி செய்யணும். அப்போ பாரு உன்னை மாதிரியே இருப்பேன்!" என்று குளிரப் பேசினான்.

மகனைப் பார்த்தாள், 'உண்மைதான் இவனது அடர்த்தி பெண்களுக்கிருந்தால் சாட்டை மாதிரி பின்புறத்திலசையும்.' அவனும் வகை, வகையாக க்ரீம்களைப் பூசி பொழுது புலர்ந்து போய் மறையும்வரை எண்ணெயும், தண்ணீரும் தடவி, அழுத்தி, அப்படியிப்படி செய்து பார்த்துவிட்டான். வாரத்துக்கொரு தடவை இவன் புதுப் புது பாணிகளில் முடிதிருத்தி வந்து நிற்கிறபோது இல்லாத கோபம் வரும்.

வீட்டிலுள்ளவர்கள் அவளிடம்தான் குறை காண்பது- பணம் கேட்டதும் கொடுத்து விடுகிறாளென்று. தூங்க, சாப்பிடவிடாமல் அவன் பின்னாடியும் முன்னாடியும் நின்று தரும் தொல்லைகளைத் தாள முடியாமல் படும் சிரமம் யாருக்கும் புரியாது?

கரைச்சல் தாளாத நிலையில் வேண்டா வெறுப்பாக அவள் பணத்தை விட்டெறிவதும் அவனிஷ்டத்துக்கு முடிவெட்டி வருவதும் வழக்கமாகிப்போக, வயசு ஒருநாள் படிப்பினையை தரும் எனும் பொறுமையோடு காத்திருந்தாள்.

அம்மாவிடம் வாங்கிய பணத்தோடு சலூனுக்குப் போனான். மின்வெட்டு அமுலிலிருந்த வேளை அது. மாலைவரை முடி வெட்ட முடியாதுபோனதில் மனம் சலித்தவனாக வீடு வந்தான். கண்ணாடியை எடுத்து அங்குமிங்குமாகப் பிடித்துப் பார்த்தான். சைடாலை கொஞ்சம் பிடித்தால் போதும். கரண்ட்வர தாமதமாகும். பிரண்டோட ஒரு இடத்துக்கு போகணுமே. அதுக்கு முன்னர் வெட்டணும். என்ன செய்வதென எண்ணியபடி தலையை அலுத்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

"டேய் தீபன் உனக்கு முடியும் தானே, இந்தப் பக்கத்து முடிகளை திருத்தி நடுவிலே மட்டும் கைப்போட்டாப்போல வைக்க?" அப்போதுதான் உள்ளே நுழைந்த தம்பி தீபனிடம் கேட்டான். "ஆ. முடியும், ஆனா உனக்கு செய்யப்போய் மாளாது" என மறுத்தான் தீபன்.

"டேய், டேய், நான் போகணுண்டா, கொஞ்சம் ஹெல்ப்பண்ணுடா, ப்ளீஸ் சைடு தானே!" மறுபடி தொணதொணக்கத் தொடங்கிவிட்டான். இன்றைக்கு கரண்ட் வரும் வரை கரைச்சல் தாளாமல் எவராவது மண்டையை உடைக்க வேண்டி வரலாம் என எண்ணிய தீபன். "சரி வா" வென்றான்.

கையில் கண்ணாடியைப் பிடித்திருந்த பகீரதன் அதுஆட. இங்கை சரியில்லை. இந்தப் பக்கத்திலை கொஞ்சம்பார்" என்று சொல்லிச் சொல்லி தீபனின் பொறுமையைச் சோதிச்சான். தீபனோ நிதானத்தை விட்டவனாக அவன் சொன்ன திசைகளில் கத்தரியை ஓடவிட்டான்.

வெட்டிய இடத்து கீழ் புறங்களை ஷேவிங் ரேஷரால் ஷேவ் செய்து முடித்தான். அவன் சொன்ன பிரகாரம் வெட்டியாயிற்றென்ற திருப்தியோடு பார்த்த தீபன் அதிர்ந்தான்.

சரி இன்றைக்குத் தொலைந்தோமென எண்ணியவண்ணம் தயங்கி நின்றவனிடம் பகீரதன். கேட்டான், "நல்லாயிருக்காடா" என்று இரண்டு கைகளாலும் முடியை ஸ்டைலாக பக்கவாட்டில் அழுத்தியபடி வெளியில் தொங்கிய கண்ணாடியில் கழுத்தை சரித்துப்பார்த்தவனுக்கு ஆவேசமான ஆத்திரம் பிறந்தது.

அங்கங்கே எலி வெட்டிக் கொட்டிய புத்தகக்கட்டுப்போல அவனது தலை படிப்படியாகத் தெரிந்தது. வரிசையாக நாற்று நட்ட பாத்தி நிலத்தின் ஏற்ற இறக்கத்துடன் அவனைப்பார்த்துச் சிரித்தது.

வைத்திருந்த கண்ணாடியை தம்பி தீபனை நோக்கி வீசினான். கலீரென்ற ஓசையுடன் சிதறி நொறுங்கியது கண்ணாடி.

சத்தம் கேட்டு பக்கத்து வீட்டிலிருந்த ஜெயா ஓடிவந்தாள். பகீரதனின் நிலையைப் பார்த்ததும் அதன் தீவிரம் புரிந்தது. சிரிப்பு வந்தது. சிரிச்சால் இந்த இடத்திலை கொலை விழுமென மனம் எச்சரித்தது.

"உனக்கேண்டா இந்த வேலை? கல்லுடைக்கிறவன் கையிலை சிலையைக் கொடுத்தா, சிலையும் கல்லாகிப்போகும். அவரவர் வேலையை அவரவர் செய்யணும்" என இளையமகனிடம் கோபமாக இரைந்தாள். அப்போதான் பகீரதனின் கோபம் தணியுமென நினைத்தவளாக.

"அண்ணாதான் கரைச்சல் படுத்தினான்."

"நான் கரைச்சல் தந்ததுக்கு இப்பிடியா கரையானரிச்ச மாதிரி? ஐயோ நானெப்படி இப்பிடியே போறது? என்னென்ன ஸ்டைலெல்லாம் நினைச்சு வைச்சிருந்தன். இந்த கழுதை வேணுமின்னுதான்..." சினத்துடன் தம்பியை நோக்கிப் பாய்ந்தான்.

"பகீரதன் உனக்கு நெடுக சொன்னனான் எதுக்கும் அவசரப்படாதைன்னு. உன்னோட அவசரம் இப்ப என்னாச்சு. எதிலும் நிதானம் வேணும்." என்றாள் உறைக்கும் விதத்தில்.

"எல்லாம் அந்த நாயாலை வந்தது இப்ப பிடிச்சனெண்டால்...?" துரத்தினான். தீபன் வெளியே பாய்ந்தான். தொடரமுடியாமல் வெட்கத்துடன் தலையை உள்ளே இழுத்த பகீரதனுக்கு ஆத்திரத்தில் அழுகையே வந்தது. முகத்தை துடைத்து, தொப்பியை எடுத்து கவிழ்த்தான். வெளியேறினான் வேகமாக. 'சின்னவனைப் பிடிக்கப்போகிறானோ.' சிந்திக்க முடியாது சிலையாக நின்றாள். கொஞ்சநேரத்தில் கதவு தட்டப்பட்டது. திறந்தவள் விழித்தாள், விழிகளை இமைக்க மறந்து பார்த்தாள். யாரென்பது போல பார்வை குந்தி நின்றது.

"அம்மா" என்றான் பகீரதன்.

"என்னடா இது அடையாளமே தெரியலை."

"வேற என்னம்மா செய்யுறது? என்னோட அவசரம் எதிலை வந்து முடிஞ்சது- மொட்டையில்!" என்ற வண்ணம் தலையை தடவியவனாக குளியலறையை நாடிப்போன மகனின் நடையில் ஒரு நிதானம் வந்திருப்பதை அது உணர்த்துவதையுணர்ந்தாள். ●

# இலக்கிய நயம்

# கல்



காதலித்தபோது
அழகாய் தெரிந்தவளை,
கல்யாணத்தின் பின்னர்
காதலிக்க முடியவில்லை!

'முத்தே!' என்று
அழைத்தவன்
சொத்தை என்று ஒதுக்கினான்!

அன்று 'கண்ணே'
என்று அழைத்தவன்,
இன்று கண்களால்
அவளை எரித்தான்!

ஊரில் உள்ள
அழகிகளோடு
உறவில் கலந்தவளை
ஒப்பிட்டு நோக்கினான்!

அரண்டவன் கண்ணுக்கு
இருண்டதெல்லாம் பேய்!

விருப்பைத் துறந்தவனுக்கு
எல்லாமே
வெறுப்பாகத் தெரிந்தன!

அவள் நடந்தால்
குற்றம்!
அவள் இருந்தால்
குற்றம்!
அவள் சிரித்தால்
குற்றம்!
அவள் அழுதால்
குற்றம்!

அவளோ அவனது
வெறுப்பை
விருப்பாக்க உழைத்தாள்!

விட்டுக் கொடுத்து
திருத்த நினைத்தாள்!

"நடிக்கிறாயா
நயவஞ்சகி?
என்னில் பாசம்
இருப்பதாக துடிக்கிறாயா?
என்னைப் பிடித்த
சனி நீ!
காலைச் சுற்றிய
கரு நாகம் நீ!
உன்னைக் கண்டால்
வெறுப்பு!
உன்னிடம் வாங்கி உண்டால்
வெறுப்பு!"

வார்த்தைகளால் தினம்
வதைத்தான்!

சொற்கள் அம்புகளாய்
இதயத்தில் தைத்தன!

தைத்த இடத்தில்
சோகம் வடிந்தது!

அவள் சோகம்
அவனுக்குச் சுகம்!

அவள் துன்பம்
அவனுக்கு இன்பம்!

வீட்டில் மலர் இருக்க
வண்டு
வீதியில் மலர் தேடியது!

கட்டழகி ஒருத்தி
வட்ட முகத்தோடு
நட்ட வாழையாக
பட்டாள் பார்வையில்!

'யார் இந்த?
பார் வியக்கும் அழகி?
தேர் போல வரும் இவளின்
பேர் என்ன?'

அவன்
மனம் குதித்து
குரங்காகித் தாவியது!

துணைவியின் அழகோடு
ஒப்பிட்டுப் பார்த்தான்!

அவள் மடு
இவள் மலை!

இவள் பூ
அவள் சருகு!

அவள் குளம்
இவள் அருவி!

இவள் புயல்
அவள் புழுக்கம்!

இவள் இதழ்கள்
சுளைகள்!

முத்தமிட்டாலே
ஒட்டிக்கொள்ளும்
செவ்விதழ் சிவப்பு!

மோகத்தை தூண்டும்
முன்னழகுகள்!
மோகனமான அந்த
பின்னழகுகள்!

நடந்தால் குலுங்கும்
கனிமரம்!
வேறெங்கும் இல்லாத
தனி மரம்!

கழுத்தில் ஆடும்
மணிமாலை!
கண்களில் ஆடும்
மதுபோதை!

இடையோ மெல்லிய
கொடி போல!- அழகுக்
கடையோ என வியக்கும்
வடிவாக!-பெரும்
படைபோல் வந்தாள்
முன்பாக!
பித்தமானேன்
சத்தியமாய்!
உத்தம அழகிமேல்
பைத்தியமாய்!"

அவன் அலைந்தான்
வலை எறிந்தான்!

நங்கை அவனை
நாடி பிடித்து அறிந்தாள்!

புளியங்கொம்புதான்
என்பதை அறிந்ததும்
பளிங்குச் சிரிப்போடு
பார்வை தாவினாள்.

கட்டிலில் மொத்தை
தினம் அதன் மேலே
புதுப் புது வித்தை!

பாம்பென அவனில்
சுற்றிப் புரண்டாள்!

தாங்கென அவன்மேல்
தாவிப் புரண்டாள்!

வாரியணைத்து
வாய் அமுதம் தந்தாள்!

விடிய விடிய
விரிந்தது யுத்தம்!

கற்கக் கற்க
மகிழ்ந்தது சித்தம்!

கட்டில் அழுதது
யுத்தம் தாங்காமல்!

மெத்தை வதைந்தது
பாரம் தாங்காமல்!

எண்ணிப்பார்க்காது
பொன்னை இறைத்தான்!

கணக்குப் பார்க்காது
காலத்தை கரைத்தான்!

உடம்பெங்கும்
நமைச்சல்!
உடம்பெங்கும்
மாய்ச்சல்!

மருந்து தேடி
வைத்தியரை நாடினான்!
பரிசோதித்தவரின்
முகம் கோணியது!
பரிதாபப் பார்வை
முகத்தில் உதித்தது!

"எந்தக் கிணற்றில்
தடுக்கி விழுந்தாய்?

எந்தச் சாக்கடையில்
தாகம் தணித்தாய்!

முள்ளை எடுத்து-ஏன்
முதுகைச் சொறிந்தாய்?

கள்ளென நினைத்து-ஏன்
கழிவினைக் குடித்தாய்!

அமுதென நினைத்து
நஞ்சினை அருந்தினாய்!

உறவென நினைத்து
நரகத்தில் வீழ்ந்தாய்?

ஆமாம்! அப்பனே!
பால்வினை நோய் உனை
ஊழ்வினைபோல் தொற்றியது!

நீ விதைத்த வினையை
நீயே அறுக்க வேண்டும்!

உன் செயல் விளைவை
நீயே சுமக்க வேண்டும்!"

வைத்தியர்
வரி வரியாய்
வார்த்தைகளைக் கோர்த்தார்!

ஆயிரம் சம்மட்டியால்
உச்சந் தலையில்
அடித்தது போல் துடித்தான்!

"போகாத இடமெல்லாம்
போய்வந்தாய்!

மேயக்கூடாத இடமெங்கும்
மேய்ந்து வந்தாய்!

தீராத நோயெல்லாம்
தேடிக்கொண்டாய்!"

வைத்தியர்
வருத்தத்தோடு கூறினார்.

திணவெடுத்த தேகத்தில்
பிணி பிடித்தது!

தறி கெட்ட மனது
முறிபட்டது!

"துணைவி ஒருத்தி
இல்லத்தில் இருக்க-உனக்கு
கள்ளத்தில் உறவு ஏன்?"
என்றார் வைத்தியர்.

அவள் ஒரு
மரக்கட்டை! என்று
நினைத்தது மனம்!
அதனால் என் மனம்
இழந்தது கட்டை!

கட்டிழந்த மனது
கட்டிளம் மேனியை
கட்டியாடியது!-ஐயோ
குட்டிச் சுவரானதே
இப்போது!"
என்றான்!

"வைத்தியர் நகைத்தார்.
காமம் என்பது
கடலப்பா!

கடலைக் கடக்க
மரக்கட்டை வேண்டாமென்று,
அம்மிக்கல்லை கட்டிக்கொண்டு
கும்மென்று குதித்தான் ஒருவன்!

கட்டை என்றாலும்
கரை சேர்க்கும்!
கல் என்ன செய்யும்
கடலுக்குள்தான் தாழ்க்கும்!

நீ தொடமறுத்த
துணைவி கட்டை,
நீ தொட்டவளோ
கல்லு!"

அவ்வையாரின் பாடலை
வைத்தியர் அவனது
செவியில் ஊற்றினார்;

**"அம்மி துணையாக ஆறிழிந்து ஆறு ஒக்கும்**
**கொம்மை முலை பகர்வார்க்**
**கொண்டாட்டம்- இம்மை**
**மறுமைக்குப் நன்றன்று மாநிதியம் போக்கி**
**வெறுமைக்கு வித்தாய் விடும்"**

தருவது
ரசிகன்

# சிந்தியா பதில்கள்

★ **இராணுவத்தீர்வில் தமக்கு நம்பிக்கையில்லை என்று ஐ.தே.கட்சி கூறியுள்ளதே?**

ஆர்.தெய்வேந்திரம், கொழும்பு-11.

ஆட்சிக்கு வரும்வரை அவ்வாறுதான் கூறுவார்கள். இவர்கள் நாளை ஆட்சிக்கு வந்தால் இதே வாசகத்தைத்தான் பொ.ஐ. முன்னணியினரும் கூறுவார்கள். ஆயினும் தற்போது அவர்கள் கூறுவதை பயன்படுத்த வேண்டியது தமிழ் பேசும் தரப்பின் சாணக்கியம்.

●●

★ **நீலன் கொலையைக் கண்டித்தளவுக்கு, புதுக்குடியிருப்பு பொதுமக்கள் படுகொலையை உலகம் ஏன் கண்டிக்கவில்லை?**

எம்.தியாகராசா, வவுனியா.

அமெரிக்கா அதிபர் கிளின்ரனுக்குக்கூட மனிதாபிமானம் பொத்துக்கொண்டு வரவில்லை பார்த்தீரா! இப்படியான பாரபட்ச மனிதாபிமானம்தான் பாதிக்கப்பட்ட தரப்புக்களிடம் பழிக்கு பழி உணர்ச்சியை உருவாக்குகின்றன.

●●

★ **சில புதைகுழிகளுக்குள் எதுவுமே இல்லையாமே?**

க.ரவிகரன், யாழ்ப்பாணம்.

ராஜபக்ஷ விவரித்தபடியே எடுக்கப்பட்ட எலும்புக்கூடுகளில் தாக்குதல் அடையாளங்கள் உள்ளன. யார் யார் கொல்லப்பட்டனர் என்பதைக்கூட குழி தோண்ட முன்னரே மகா ஞாபகசக்தியோடு ராஜபக்ஷ கூறியிருந்தார். தோண்டிய பின்னர் அவர் கூறியது நிஜம் என்பது உறுதியானது. எனவே, அவர் அடையாளம் காட்டிய இடங்களில் சில குழிகளில் எதுவுமே இல்லை என்பது யோசிக்க வேண்டிய சமாச்சாரம்!

●●

★ **என்னதான் புத்திமதி கூறினாலும் ஏற்க மாட்டேன் என்பவர்களை என்ன செய்வது?**

கே.பாக்கியலட்சுமி, பதுளை.

அவர்கள் இருக்கட்டும், முதலில் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியது ஒன்றுண்டு. அது, நாம் யாருக்கு உபதேசம் செய்கிறோம் என்பதை முதலில் புரிந்துகொண்டு செய்ய வேண்டும். இதோ ஒரு கதை:

புத்தரின் சீடர் ஒருவர் வீதியில் போய்க் கொண்டிருந்தார். அப்போது ஒரு பிச்சைக்காரன் சீடரைச் சந்தித்தான். உடனே அந்தப் பிச்சைக்காரனுக்கு சீடன் போதிக்க ஆரம்பித்துவிட்டார்.

ஆனால், பிச்சைக்காரனின் கவனம் அதிலே செல்லவில்லை. சீடனுக்குக் கோபம் வந்துவிட்டது. அவர் நேராகப் புத்தரிடம் போனார்.

"அங்கே ஒரு பிச்சைக்காரன் இருக்கிறான். நான் அவனுக்கு நல்ல தர்ம உபதேசங்களைச் செய்தேன். ஆனால் அவனது கவனம் அதில் செல்லவில்லை" என்று கூறினார்.

உடனே புத்தர், "அவனை என்னிடம் அழைத்து வா!" என்று கூறினார்.

அதன்படியே அந்தப் பிச்சைக்காரனை சீடன் அழைத்துவந்தார். புத்தர் அவனது நிலையைப் பார்த்தார். பல நாட்களாக அவன் பட்டினி கிடப்பதைத் தெரிந்துகொண்டார். அவனுக்கு வயிறு நிறைய உணவு கொடுக்கச் சொன்னார். பின்பு "நீ போகலாம்" என்று அனுப்பிவிட்டார்.

சீடன் கேட்டார்: "நீங்கள் உணவுதானே கொடுத்தீர்கள். உபதேசம் எதுவும் செய்யவில்லையே?!"

அதற்கு புத்தர் கூறினார்: "இப்போது உணவுதான் அவனுக்கு நல்லதொரு உபதேசம். இதுவே அவனது உடனடித் தேவை. ஆகவே அவனுக்கு முதலில் உணவளித்தேன். உயிரோடு இருந்தால் அவனே நாளை உபதேசம் கேட்க வருவான்!"

●●

★ *சிந்தியா!* **ஆண்களின் பலம் என்ன?**

எம்.விஜயகுமார், கொழும்பு-12.

கவியரசு கண்ணதாசன் கூறிய கதை இது:

யானையின் பலம் தும்பிக்கையிலா, பாதத்திலா? என்று ஒரு பாகனைக் கேட்டான் வேட்டைக்காரன்.

"அது அந்த நேரத்தைப் பொறுத்தது" என்றான் பாகன்.

"எந்த நேரத்தில் எந்தெந்த அங்கத்துக்கு பலம் அதிகம்" என்று கேட்டான் வேட்டைக்காரன்.

அதற்கு பாகன் கூறினான்:

"எனக்குத் தெரியாது. சில நேரத்தில் ஆண் யானையின் பலத்தைப் பெண் யானையிடம்தான் கேட்க வேண்டியிருக்கும்!"


●●

★ **கல்லோயா பொன்விழாவின் பின்னர்தான் அம்பாறையில் வீரவிதான இயக்கம் அட்டகாசம் புரிந்திருக்கிறது. அப்படியானால் வீரவிதானவை தூண்டிவிடுபவர்கள் யார் என்பது தெரிகிறதல்லவா?**

சி.மகிந்தன், காரைதீவு.

தெரியவில்லை என்போரும், வீரவிதான மீது அரசு நடவடிக்கை எடுக்கும் என்று நினைப்போரும் தூங்குவது போன்று நடிப்பவர்கள்!

●●



ஷாருக்கான்-சோனாலி

★ **சிந்தியா! புதுக்குடியிருப்பில் தமிழ் மக்கள் கொல்லப்பட்டது குறித்து தமிழ்க் கட்சிகள் ஏன் வாய் திறக்கவில்லை?**

வி.தயானந்தன், புத்தளம்.

படையினரது மறுப்பை எதிர்த்து தொடை தட்டுவது 'ஜனநாயகம்' அல்ல என்று நினைத்திருக்கலாம்!

●●

★ **ஆட்சியாளர்கள் இவ்வளவு அலட்சியம் செய்தும் தமிழ்க் கட்சிகள் ஏன் எதிர்ப்புக் காட்டாமல் இருக்கின்றன. இதனை விவேகம் என்கிறார்களே?**

மு.உமா, கொழும்பு-08.

வீணையின் தந்தி அறுந்து கிடந்தது. தூசு படிந்து கிடந்த வீணை துன்பத்தை அறிவித்துக் கொண்டிருந்தது.

பக்கத்தில் இருந்த மத்தளம் அதைப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தது.

மத்தளம் சொன்னது:

"வீணையே! கை கொஞ்சம் பலமாக விழுந்தாலே நீ அறுந்து போகிறாய். என்னதான் உன்னிடம் அருமையான ஓசை இருந்தென்ன? என்னைப் பார். நான் எத்தனை அடிகளையும் தாங்கிக்கொண்டு கம்பீரமாக வாழ்ந்து கொண்டிருக்கிறேன்.

வீணை அமைதியாகப் பதில் சொன்னது:

"மானஸ்தர்களுக்கு ஒரு வார்த்தை போதும்!"

●●

★ **இந்த ஆண்டும் சிம்ரான் படங்கள்தானே கலக்கல்? நம்பர் 01, சிம்ரான்தானே?**

கு.ஜெயந்தினி, தெகிவளை.

தற்போதுவரை அப்படித்தான்! 'ஜோடி'யிலும் தூள் கிளப்பியிருக்கிறார்!

●●

★ **ஜெயலலிதாவுக்கு பெரும் கூட்டம் திரள்கிறதாமே?**

ஆர்.தனபால[illegible]டி.

அதுதான் முன்னரே கூறினே[illegible]மோ, சென்ற முறையைவிட ஆசனங்கள் குறையலாமே தவிர, பெரும் அடி வாங்கமாட்டார். என்ன செய்வது எம்.ஜி.ஆரின் வாக்கு வங்கி அமுத சுரபிமாதிரி அம்மாவைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறதே!

●●

★ **விஞ்ஞானிகளும் கடவுளை நம்புகிறார்களே?**

க.ராமநாதன், சிலாபம்.

வானத்தில் இருந்து கடவுள் பூமிக்கு வந்து மனிதனைப் பார்த்தார்.

"பூமி எப்படி இருக்கிறது?" என்று கேட்டார்.

"மெய்ஞானத்தில் பூமி தழைத்துக் கொண்டிருக்கிறது" என்றான் மனிதன்.

பிறகு பூமியிலிருந்து மனிதன் வானத்துக்குப் போய் கடவுளைப் பார்த்தான்.

"வானம் எப்படி இருக்கிறது?" என்று கடவுளிடம் கேட்டான்.

"விஞ்ஞானம் என்னை நெருங்கிக் கொண்டிருக்கிறது" என்றார் கடவுள்.

●●

★ **தனியார் வானொலி ஒன்றுக்கு கொச்சைத் தமிழ் பேசும் பெ[illegible]றிவிப்பாளர் வரப்போவதாக [illegible]டி அய்யாத்துரையார் கூறியிருக்கிறாரே?**

இ.வினோத், ஹெந்தளை.

ஆம்! அவர் பெயர் மாலினி! 'ஜாலியோ ஜிம்கானா' என்ற நிகழ்ச்சியில் தமிழை சேதப்படுத்திய பெருமைமிக்கவர்.

●●

★ **இந்தியில் தற்போது சூப்பர் ஸ்டார் யார்?**

எம்.முஸ்தபா, கொழும்பு-11.

ஷாருக்கான்!

●●

★ **சிங்கப்பூரில் இந்திய கிரிக்கெட் அணி கங்குலி தலைமையில் கிண்ணத்தைப் பெற்றுவிட்டதே. என்ன சொல்கிறீர்?**

பி.சுரேந்திரன், கொழும்பு-09.

இதற்கு திருஷ்டி பரிகாரமாக எத்தனை கிண்ணங்களைக் கோட்டை விடப் போகிறார்களோ?!

●●

★ **புதுக்குடியிருப்பில் தாக்குதல் நடைபெற்றது புலிகளின் இலக்கு மீதுதான்.அங்கு பொது மக்கள் அழைத்து வரப்பட்டிருக்கலாம் என்று இராணுவப் பேச்சாளர் கூறியுள்ளாரே?**

சி.முகிலன், கொழும்பு-05.

குண்டுபோடப் போனது என்ன மாட்டு வண்டியிலா? அப்படியானால்தானே பொது மக்களைச் சேகரித்து கொண்டு வந்து நிறுத்த நேரம் போதுமானதாக இருக்கும்!

●●

★ **மின்மாற்றி தகர்ப்பு பற்றி புலிகளது தலைவருக்கு வவுனியா மக்கள் கடிதம் அனுப்பியுள்ளனரே?**

த.குலேந்திரராசா, வவுனியா.

படையினரே புலிகள் தாக்கவில்லை என்று கூறுகின்றனர்! ஈ.பி.ஆர்.எல்.எஃப் குழுதான் மக்கள் சிலரைத் தூண்டி கடிதம் அனுப்ப வைத்திருக்கிறது.

●●

★ **'முதல்வன்' எப்போது வருவான்?**

ஆ.ராதிகா, அவிசாவளை.

தாமதமாகும் போலத் தெரிகிறது.

# ஸ்போர்ட்ஸ்

## மறுபடி முதலிடம்

அண்மையில் வெளியிடப்பட்டுள்ள கிரிக்கெட் தர வரிசைப்பட்டியலில் இந்திய வீரர் ராகுல் ட்ராவிட் மறுபடி முதலிடத்தைப் பிடித்துள்ளார்.

உலகக் கோப்பைக் கிரிக்கெட் போட்டிக்குப்பின் சியட் தரவரிசைப்பட்டியலில் முதலிடத்தைப் பிடித்திருந்தார். சில வாரங்களுக்குப் பின் முதலிட அந்தஸ்தை இழந்தார். இப்போது மறுபடி முதலிடத்திற்கு முன்னேறியுள்ளார்.

ட்ராவிட்டைத் தவிர முதல் 10 இடங்களுக்குள் டெண்டுல்கர், கங்குலி, ரொபின் சிங் ஆகிய 3 இந்திய வீரர்கள் இருக்கின்றனர். இவர்களைத் தவிர வேறு ஆசிய வீரர்கள் முதல் 10 இடங்களுக்கு முன்னேறவில்லை.

சியட் தரவரிசைப் பட்டியலில் முதல் 10 இடங்களைப் பிடித்தவர்களது விவரங்கள் இதோ:

| இடம் | வீரர் | நாடு | புள்ளிகள் |
|---|---|---|---|
| 1 | ராகுல் ட்ராவிட் | இந்தியா | 36 |
| 2 | கிறிஸ் கெய்ன்ஸ் | நியூஸிலாந்து | 31 |
| 3 | சௌரவ் கங்குலி | இந்தியா | 24 |
| 4 | நீல் ஜோன்ஸன் | ஸிம்பாப்வே | 23 |
| 5 | சச்சின் டெண்டுல்கர் | இந்தியா | 21 |
| 5 | ஷேன் வோர்ன் | அவுஸ்திரேலியா | 21 |
| 7 | ரொபின் சிங் | இந்தியா | 20 |
| 8 | லான்ஸ் குளுஸ்னர் | தெ.ஆபிரிக்கா | 19 |
| 9 | அன்டி கடிக் | இங்கிலாந்து | 18 |
| 9 | மார்க் வோவ் | அவுஸ்திரேலியா | 18 |

## அதிக ஊதியத்தில் விளையாடுகிறார்



இங்கிலாந்து கவுண்டி அணிகளில் ஒன்றான ஹாம்ப்ஷயர் அணியில் அடுத்த வருடம் விளையாட அவுஸ்திரேலிய சூழற்பந்து வீச்சாளர் ஷேன்வோர்ன் இணைந்துள்ளார். இதனால் அடுத்த வருடப் போட்டிகளில் இந்த அணி முதலிடத்தைப் பிடிப்பது உறுதியாகிவிட்டது.

அடுத்த பருவத்தில் 18 கவுண்டி அணிகள் இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு போட்டிகளில் பங்குபற்றவுள்ளன. இதில் ஒரு பிரிவில் ஹாம்ப்ஷயர் அணி இடம்பிடிக்கிறது.

ஹாம்ப்ஷயர் அணியில் இணைந்து கொள்ள ஷேன் வோர்னுக்கு ஒன்றரை இலட்சம் ஸ்டேர்லிங் பவுண் (நம்நாட்டு மதிப்பில் ஒருகோடியே 74 இலட்சம் ரூபாய்) வழங்கப்பட்டுள்ளது. இங்கிலாந்து கவுண்டி அணிகளில் விளையாட ஒருவர் இத்தகைய அதிக பணத்தை ஊதியமாகப் பெறுவது இதுவே முதல் தடவை எனத்தெரிகிறது.

ஹாம்ப்ஷயர் அணியில் விளையாடியவர் இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளர் நிக்ஸன் மக்லீன். இவர் மேற்கிந்தியத் தீவுகளுக்குச் செல்லும் இங்கிலாந்து அணியில் இடம் பெறுவதால், ஷேன் வோர்ன் அந்த இடத்தை நிரப்புகிறார்.

## இயலாமையை ஏற்படுத்தாது

"டெண்டுல்கரின் கிரிக்கெட் ஆட்டத்திற்கு அவருடைய முதுகுவலி தடையாக அமைந்து வருகிறது" என்று அவுஸ்திரேலிய மருத்துவர் பீற்றர் பாண்ஸ் முதலில் தெரிவித்திருந்தார். ஆனால் சில தினங்களின் பின்னர் பாண்ஸ் தெரிவித்ததாவது:

"பல வருடங்களாக டெண்டுல்கர் இந்த உபாதையை அனுபவித்து வந்துள்ளார். அவருடைய வாழ்நாள் முழுவதும் இது தொடரலாம். ஆனாலும் இது அவருக்குப் பலத்த இயலாமையை ஏற்படுத்தப் போவதில்லை என்றே நான் எதிர்பார்க்கிறேன்!" என்று கூறியுள்ளார்.

இந்த வருடத்தில் டெண்டுல்கருக்கு ஏற்பட்ட முதுகுவலியால் அவர் உலகக் கோப்பைப் போட்டிக்கு முன் நடந்த ஒருநாள் போட்டித் தொடரிலும், டொரண்டோ போட்டியிலும் பங்கேற்கவில்லை.

மருத்துவரின் ஆலோசனையின்படி இன்னமும் தொடர்ந்து 6 வாரங்கள் ஓய்வெடுக்கவிருப்பதால் கென்யாவில் நடைபெறும் 4 நாடுகள் போட்டியிலும் டெண்டுல்கர் கலந்து கொள்ள மாட்டார்.

## இவர்தான் அவர்



கிரண் பேடி

# திருமறை தரும் பொது நெறி

## புதிய ஆகமம் 19

ஆண்டவரின் சித்தத்தை அவருடைய திருக்குமாரரான இயேசுபிரான் மண்ணில் வாழும் மாந்தருக்கு எடுத்துரைக்க ஏற்பாடுகளைச் செய்தார். ஆண்டவரின் திருக்குமாரர் கூறும் கருத்துக்களைச் செவிமடுப்போர் கூட்டம் நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே வந்தது. இம்மக்கள் கூட்டத்தில் இருந்தோரில் பெரும்பான்மையினர் இயேசுபிரானின் அருளுரைகளைச் செவிமடுத்த போதிலும், அவற்றில் கூறப்பட்ட படி நடப்பதற்குத் துணிவற்றவர்களாகவே காணப்பட்டனர்.

ஒரு காதினால் உள்வாங்கும் கருத்துக்களை மறு காதினால் கன வேகத்தில் வெளியேற்றி விடுவார்கள். இது அன்று மட்டுமல்ல; இன்றும் இந்நிலைதான் இருந்து வருகிறது.

ஆலயங்களுக்குச் செல்பவர்கள், வேளா வேளைக்குப் பூசை, பிராத்தனைகளில் ஈடுபடுபவர்கள், விரதம் இருப்பவர்கள் ஆகிய எவரும் அகற்றப்படும்; அவ்வாட்சிக்கு ஏற்ற முறையில் செயல்படும் ஒரு மக்களினத்தார் அதற்கு உட்படுவர் என நான் உங்களுக்குச் சொல்கிறேன். 'இந்தக் கல்லின்மேல் விழுகிறவர் நொறுங்கிப்போவார். இது யார் மேல் விழுமோ அவரும் நசுங்கிப் போவார்."

இவ்வாறு இயேசுபிரான் கூறியதும் இக்கதை தங்களுக்காகவே கூறப்பட்டுள்ளது, என்று தலைமைக் குருக்களும் பரிசேயரும் கருதினர். இயேசுபிரான் மீது அடங்காத கோபம் கொண்டார்கள். எப்படியாவது இயேசுபிரான் மீது ஏதாவது குற்றச்சாட்டுகளைச் சுமத்தி, அவரை ஒழித்துக்கட்டினால்தான் நிம்மதி என்று கருதினார்கள்.

இயேசுபிரானைப் பிடித்து விடலாம் என்று திட்டமிட்டனர். ஆனால் அவரைத் தொடர்ந்து பல்லாயிரக்கணக்கில் செல்லும் மக்கள் கூட்டத்தாரின் கோபத்துக்குள்ளாகிக் கொலை

புறம்பே உள்ள இருளில் தள்ளுங்கள். அங்கே அழுகையும் அங்கலாய்ப்பும் இருக்கும்' என்றார். இவ்வாறு அழைப்புப் பெற்றவர்கள் பலர், ஆனால் தெரிந்தெடுக்கப்பட்டவர்களோ சிலர்." என்று கூறினர்.

சதசேயர் சிலர் இயேசுபிரானை அணுகி, "குழந்தைச் செல்வம் இல்லாமல் ஒருவர் இறந்துபோனால், இறந்தவருடைய சகோதரரே குடும்ப வாரிசு ஒன்றுக்காக, இறந்தவருடைய மனைவியுடன் சேர்ந்து வாழலாம் என்று மோசே கூறியுள்ளாரே! அவ்வாறே எங்கள் மத்தியில் வாழ்ந்த ஒருவர் குழந்தைப் பேறில்லாமல் இறந்து போனார். அவருடைய சகோதரர்கள் ஒருவர் பின் ஒருவராக அப்பெண்ணை மணந்தனர். அவர்கள் எவருக்குமே குழந்தைகள் பிறக்கவில்லை. அவர்களும் இறந்துபின் அம்மாதும் இறந்தார். இவர்கள் அனைவரும் மறுபிறவி எடுத்தால், மறுபிறவி எடுத்த அந்தப் பெண்ணை எந்தச் சகோதரர் தன் மனைவியாக ஏற்பார்?" என்று ஒருகேள்வியைக் கேட்டனர். இதற்கு இயேசுபிரான் அளித்த பதில் இது:

# முதன்மையான கட்டளை

அத்தகு காரியங்களில் ஈடுபடுவதுடன் சரி அதற்குமேல்- நடைமுறையில் எதனையும் கடைப்பிடிப்பதில்லை.

இயேசுபெருமானுடைய போதனைகளைக் கேட்கக் குழுமியிருக்கும் பலரில் பல்வேறுபட்ட இயல்புடையவர்கள் இருந்தனர். ஏற்கனவே இயேசுபிரான்கூறிய- விதைக்கப்படும் பயிர்விதைகள் பற்றிய உவமைபோல, தரையின் பல்வேறுபட்ட தன்மையைப் பொறுத்தே, விதை வேரூன்றிப் பரந்து வளர்ந்து பயனளிக்கிறது.

### குறை காண்போர் கூட்டம்

வளமான நிலத்தில் விழும் விதைகள்தான் வேரூன்றி வளர்க்கின்றன.



ஏனையவை நிலத்தின் தன்மைக்கு ஏற்றவாறு, வளர்ச்சியடையவோ, வேரற்று அழிந்து விடவோ செய்கின்றன.

இயேசுபிரானின் அருளுரை கேட்கக் கூடும் பெரும் கூட்டத்தில், அவருடைய போதனைகளில் குறை கண்டு பிடிப்பவர்களும் ஒரு சாரார் இருந்தனர். பரிசேயர் மற்றும் திருச்சட்ட அறிஞர் என்று தம்மைக் கூறிக் கொள்வோரும் அவர்களுடைய ஏவலாளர்களும் இக்கூட்டத்தில் காணப்பட்டனர்! இவர்களும் இயேசுபிரானிடம் இடக்குமுடக்கான கேள்விகளைக் கேட்டு மடக்க நினைப்பதுண்டு. இவர்களுடைய வினாக்களுக்கெல்லாம் தக்க விடைதந்து, அவர்களுடைய கொட்டத்தை அடக்க இயேசுபிரான் தயங்குவதில்லை.

திராட்சைத் தோட்ட உரிமையாளர் ஒருவர் தனது தோட்டத்தை வேறொருவருக்குக் குத்தகையாகக் கொடுத்துவிட்டு யாத்திரை சொன்றார். அவர் தனது ஊர் திரும்பியதும் அத்தோட்டத்தைக் குத்தகைக்காரரிடமிருந்து மீட்டெடுக்க மேற்கொண்ட பிரயாசைகள் எவ்வாறு முறியடிக்கப்பட்டன என்ற கதையை உவமையாக இயேசுபிரான் கூறினார். அவர் அக்கதையைத் தொடர்ந்து கூறுகையில்;

"கட்டுவோர் புறக்கணித்த கல்லே கட்டடத்துக்கு மூலைக்கல் ஆயிற்று. ஆண்டவரால் இது நிகழ்ந்துள்ளது, நம் கண்களுக்கு இது வியப்பாயிற்று!' என்று நீங்கள் மறை நூலில் ஒருபோதும் வாசித்தது இல்லையா? எனவே உங்களிடமிருந்து இறையாட்சி

செய்யப்பட்டுவிடக்கூடும், என்றும் அஞ்சினர்.

### திருமண விருந்து

தன்மீது பழிகூற வழிதேடும் அறிவிலிகளுக்காகவே அரசர் ஒருவரின் மகன் திருமணவிருந்து பற்றிய உவமை ஒன்றைக் கூறினார்:

"விண்ணரசைப் பின்வரும் நிகழ்ச்சிக்கு ஒப்பிடலாம்: அரசர் ஒருவர் தம் மகனுக்குத் திருமணம் நடத்தினார். திருமணத்திற்கு அழைப்புப் பெற்றவர்களைக் கூட்டிக்கொண்டு வருமாறு அவர் தம் பணியாளர்களை அனுப்பினார். அவர்களோ வர விரும்பவில்லை. மீண்டும் அவர் வேறு பணியாளர்களிடம், 'நான் விருந்து ஏற்பாடு செய்திருக்கிறேன். காளைகளையும் கொழுத்த கன்றுகளையும் அடித்துச் சமையல் எல்லாம் தயாராயுள்ளது. திருமணத்திற்கு வாருங்கள்' என அழைப்புப் பெற்றவர்களுக்குக் கூறுங்கள் என்று சொல்லி அனுப்பினார். அழைப்புப் பெற்றவர்களோ அதைப் பொருட்படுத்தவில்லை. ஒருவர் தம் வயலுக்குச் சென்றார்; வேறு ஒருவர் தம் கடைக்குச் சென்றார். மற்றவர்களோ அவருடைய பணியாளர்களைப் பிடித்து இழிவுபடுத்திக் கொலை செய்தார்கள். அப்பொழுது அரசர் சினமுற்றுத் தம் படையை அனுப்பி அக்கொலையாளிகளைக் கொன்றொழித்தார். அவர்களுடைய நகரத்தையும் தீக்கிரையாக்கினார். பின்னர் தம்பணியாளர்களிடம், 'திருமண விருந்து ஏற்பாடாகி உள்ளது. அழைக்கப்பெற்றவர்களோ தகுதியற்றுப் போனார்கள். எனவே நீங்கள் போய்ச் சாலையோரங்களில் காணும் எல்லாரையும் திருமண விருந்துக்கு அழைத்து வாருங்கள்' என்றார். அந்தப் பணியாளர்கள் வெளியே சென்ற வழியில் கண்ட நல்லோர், தீயோர் யாவரையும் கூட்டி வந்தனர். திருமண மண்டபம் விருந்தினரால் நிரம்பியது. அரசர் விருந்தினரைப் பார்க்க வந்த போது அங்கே திருமண ஆடை அணியாத ஒருவனைக் கண்டார். அரசர் அவனைப் பார்த்து, 'தோழா, திருமண ஆடையின்றி எவ்வாறு உள்ளே வந்தாய்?' என்று கேட்டார். அவனோ வாயடைத்து நின்றான். அப்போது அரசர் தம் பணியாளர்களிடம், 'அவனுடைய காலையும் கையையும் கட்டிப்

"உங்களுக்கு மறைநூலும் தெரியாது; கடவுளின் வல்லமையும் தெரியாது. எனவேதான் தவறான கருத்தைக் கொண்டிருக்கிறீர்கள். ஏனெனில் உயிர்த்தெழுந்தவர்களுள் யாரும் திருமணம் செய்து கொள்வதில்லை; அவர்கள் விண்ணகத் தூதரைப்போல் இருப்பார்கள். இறந்தோர் உயிர்த்தெழுதலைப் பற்றிக் கடவுள் உங்களுக்கு உரைத்துள்ளதை நீங்கள் வாசித்ததில்லையா? 'ஆபிரகாமின் கடவுள், ஈசாக்கின் கடவுள், யாக்கோபின் கடவுள் நானே' என்று அவர் கூறியிருக்கிறார். அவர் இறந்தோரின் கடவுள் அல்ல; மாறாக வாழ்வோரின் கடவுள்"

சதுசேயருக்கு இயேசுபிரான் அளித்த பதில் அங்கிருந்த பலரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. சதுசேயருக்கு இதனால் மேலும் ஆத்திர உணர்ச்சி மேலிட்டது. கூட்டத்திலிருந்த திருச்சட்ட அறிஞர் ஒருவரை அணுகி இயேசுபிரானின் வாயை அடைக்கத் தக்க கேள்வி ஒன்றைக் கேட்குமாறு தூண்டினார்கள். அவரும் இயேசுபெருமானிடம், "திருச்சட்ட நூலில் பல கட்டளைகள் உள்ளன. இவற்றுள் தலை சிறந்த கட்டளை எது என்று கூறமுடியுமா?" என்று கேட்டார்.

### தலை சிறந்த கட்டளை

திருச்சட்ட அறிஞரின் கேள்வி இயேசுபிரானை வியப்பில் ஆழ்த்தியது. திருச்சட்ட அறிஞர் என்று தம்பட்டம் அடித்துக்கொள்ளும் ஒருவரே இத்தகைய ஒரு கேள்வியைத் தம்மிடம் கொடுத்தமையால், அவர் அந்த

**இராஜகுமாரன்**

அறிஞர் மீது சற்றுக் கோபங் கொண்டார்.

"'உன் முழு இதயத்தோடும், முழு உள்ளத்தோடும், முழு மனத்தோடும் உன் ஆண்டவராகிய கடவுளிடம் அன்பு செலுத்து.'

இதுவே தலைசிறந்த முதன்மையான கட்டளை.

'உன்மீது நீ அன்பு கூர்வதுபோல உனக்கு அடுத்திருப்பவர்மீதும் அன்பு கூர்வாயாக'

என்பது இதற்கு இணையான இரண்டாவது கட்டளை. திருச்சட்ட நூல் முழுமைக்கும் இறைவாக்கு நூல்களுக்கும் இவ்விரு கட்டளைக்கே அடிப்படையாக அமைகின்றன."

இயேசுபிரான் திருச்சட்ட நூலில் மிகச் சிறந்த கட்டளை எதுவென்று விளக்கிக் கூறியமையினால் திருச்சட்ட அறிஞரும் அவருடைய துணைவர்களும் மேலும் பொறாமைத் தீயில் பொசுங்கினர். குழுமியிருந்த ஏராளமான மக்கள் முன் தன்னை இயேசுபிரான் அவமானப் படுத்திவிட்டதாகவே திருச்சட்ட அறிஞர் கருதினார். அவருடைய கர்வத்தை ஓரளவாவது தட்டிக்குறைக்க விரும்பிய இயேசுபிரான்,

"மேசியாவைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கறீர்கள்?" என்று கேட்டார். பரிசேயர்கள் "தாவீதின் மகன்தான் மேசியா," என்றனர்.

இயேசுபிரான் அவர்களைப்பார்த்து இவ்வாறு மறுவினாத் தொடுத்து விடையும் அளித்தார்:

"அப்படியானால் தாவீது தூய ஆவியின் தூண்டுலால் அவரைத் தலைவர் என அழைப்பது எப்படி?

'ஆண்டவர் என் தலைவரிடம், "நான் உம் பகைவரை உமக்கு அடிபணிய வைக்கும் வரை நீர் என் வலப்பக்கம் வீற்றிரும்!" என்று உரைத்தார்' என அவரே கூறியுள்ளார் அல்லவா! எனவே தாவீது அவரைத் தலைவர் என அழைப்பதால் அவர் அவருக்கே மகனாய் இருப்பது எப்படி?" இவ்வாறு இயேசுபிரான் தொடுத்த வினாவுக்கு ஏற்ற பதிலளிக்க முடியாமல் அனைவரும் திகைத்து நின்றனர்.

(தொடர்ந்து வரும்)

**திருமறை [பு.ஆ] 16 விடை:** வலது புறம் மோசே இடது புறம் எலியா

**பரிசு பெறுவோர்:**

1. **மா. சிவதாசன்,** கூனித்தீவு-9, சம்பூர், மூதூர்.
2. **யேசுமேரி கோமஸ்,** 51, செட்டி வீதி, புத்தளம்.
3. **இ. சிறீதரன்,** சாஸ்திரிகூளாங்குளம், வவுனியா.
4. **என்.எம். ஸாஹிர்,** 118/73, பனிகொட மாவத்தை, நாவலப்பிட்டி.
5. **செல்வி சரோஜினி பர்னாந்து,** 10/6, கிராமோதய மாவத்தை, ஒபயசேகரபுர, ராஜகிரிய.


**திருமறை [பு.ஆ] 19 வினா :-** சிருச்சட்ட அறிஞர் இயேசுபிரனிடம் கேட்ட கேள்வி என்ன?


ஒக்டோபர் 02 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டியமுகவரி:


**திருமறை பு.ஆ.19 – தினமுரசு வாரமலர், த.பெ.இல – 1772, கொழும்பு.**

# தேர்தல் திருவிழா

இந்தியத் தேர்தலை முன்னிட்டு அங்குள்ள சஞ்சிகைகளில் வெளியான சுவையான கருத்துப்படங்களை சரக் சரக் என்று கத்தரித்து தந்துவிட்டு நடையைக் கட்டிவிட்டார் கா.பூ.கந்தசாமியார். இந்தியத் தேர்தல் திருவிழாவை பக்கம் பக்கமாக எழுதுவதைவிட இந்த கருத்துப்படங்களே போதும், யாவும் புரியும்.







↑ யாமறிந்த நடிகர்கள்தான் ராதாரவியும், எஸ்.எஸ். சந்திரனும். இவர்கள் இருவரும் தி.மு.க.வின் நீண்டகால அனுதாபிகள். தி.மு.கவைவிட்டு வை.கோ. பிரிந்து ம.தி.மு.க.(மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம்) ஆரம்பித்தபோது, இவர்களும் அதில் இணைந்தனர். தற்போது ஜெயலலிதாவின் அ.தி.மு.க.வில் ஐக்கியமாகி புரட்சித்தலைவிக்கு புகழாரம் பாடுகிறார்கள்.

**காதிலை பூ கந்தசாமி**




பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.
கிளை:
105, காலி வீதி வெள்ளவத்தை, கொழும்பு-06
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
436331




# ரகம் புதிது

← சிறுவர்களுக்கான பல விளையாட்டுப் பொருட்கள் பெரியவர்களையும் கவர்ந்திழுக்கத் தவறுவதில்லை.

சாவிகளைச் செருகி வைக்கும் சாதனம் போல் இங்கு காணப்படும் பொருட்கள், குட்டி ரோபோக்களைப்போல, துள்ளிக் குதித்து பல விளையாட்டுக்களையும் ஆடிக் களிப்பூட்டவல்லன.


இரவு நேரங்களில் ஒளிபாய்ச்சும் வகைவகையான ஒலிகளை எழுப்பி ஆட்டம் போடும். கண்கவர் பல வர்ணங்களில் இவை சந்தையில் வந்து குவிகின்றன. சிறுவர்களிடையே மட்டுமல்ல, பெரியோர்களிடமும் இதற்கு பலத்த வரவேற்பு.





SRI KALYANY JEWELLS
[illegible]
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
323657


# நிரபராதி



↓ உலகக்கோப்பை போட்டியில் வெற்றியின் விளிம்புவரை சென்று விட்டு கோப்பையை கைநழுவவிட்டது பாகிஸ்தான் அணி.

அணியின் கப்டன் வாசிம்மீது வசைமழை. அவரிட. மோசமானமுறையில் ரகசிய நிதியை வாங்கிக்கொண்டு சதி செய்து விட்டதாகப் புகார் மேல் புகார்.

அத்தனை குற்றச்சாட்டுக்கள் மத்தியிலும் வாசிம் அக்ரம் அசைவில்லை. தன் மகளுடன் பிறந்தநாளைக் கொண்டாடினார். உற்சாகமாக இருந்தார்.

வாசிம் அக்ரமுக்கு இம்மாதிரியான புகார்கள் புதியவை அல்ல. ஏற்கனவே பல தடவை கூறப்பட்ட புகார்கள் தான். அணியின் கப்டன் பதவியும் பல முறை பறிக்கப்பட்டு, மறுபடி அவரே பொருத்தமானவர் என்று தேடி வந்துள்ளது.

இம்முறையும் அப்படிதான் நடந்திருக்கிறது. மறுபடி அக்ரம் கப்டன். அவர் மீதான புகார்களில் உண்மையில்லை என்று தீர்ப்புக் கூறப்பட்டுள்ளது. 11 மாதம் விசாரணை நடந்தது. அதுவரை அக்ரம் விளையாடத் தடை போடப்பட்டது.

↑விளையாட்டில் வெற்றி தோல்விகள் சகஜம். ஆனால் வாசிம் அக்ரம் சிறந்த கப்டன் என்பதை மறுக்க முடியாது.

வாசிம் அக்ரமை மறுபடி கப்டனாக நியமிப்பதில் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை பெருமகிழ்ச்சி அடைவதாக அதன் தலைவர் முஜீப் ரஹ்மான் கூறியிருக்கிறார்.

'மீண்டும் கப்டன் பதவி எனக்குக் கிடைத்திருப்பது, எனக்கு மட்டுமல்ல, பாகிஸ்தான் அணியைச் சேர்ந்த அனைவருக்குமே முக்கியமான விடயமாகும்' என்று கூறியுள்ளார் அக்ரம்.

அது உண்மைதான். உலகக் கோப்பை போட்டியில் நிதி வாங்கிக் கொண்டு தோற்றதாக அணியில் அநேகமாக அனைவர் மீதும் சுமத்திய புகார்களும் தற்போது பொய்யாகிவிட்டன.

# ஒப்பம்



← இது என்ன? போராட்டத்துக்காக சுலோகங்களை எழுதிப் பிடித்திருக்கிறார்களா? இல்லை, கையொப்பங்கள் போடப்பட்ட நீளமான துணியைத்தான் பிடித்திருக்கிறார்கள்.

உலகக் கோப்பைப் போட்டியில் இந்திய கிரிக்கெட் அணி வெல்ல வேண்டும் என்பதற்காக 72 நகரங்களில் 12 இலட்சம் ரசிகர்கள் கையொப்பம் போட்டனர்.

அத்தனை கையொப்பங்களையும் ஒரே நீளமான துணியில் சேகரித்தார்கள். இதன் நீளம் 10.15 கிலோ மீட்டர். இதன் அகலம் 1.36 மீட்டர்.

உலகிலேயே மிக நீளமான கையொப்பத் துணி இதுதான் என்று கின்னஸில் ஏற்கப்பட்டுள்ளது.

உலகக் கோப்பையில் இந்திய அணி தோற்றாலும், இந்திய அணிக்காக போடப்பட்ட கையொப்பங்கள் உலக சாதனை படைத்துள்ளன. காயத்திற்கு மருந்து.

# சவாரிக்கு




↑ மலைப்பாங்கான பகுதிகளில் இலகுவாகப் பயணம் செய்யக்கூடிய 'லைட்ஸ்பீட்' முச்சக்கர சைக்கிள் வண்டி இது.

சாதாரண பாதைகளில் செல்வதானாலும் கரடுமுரடான பாதைகளில் செல்வதானாலும் சிரமமின்றி மிதித்துக் கொண்டு போகலாம். இதன் எடையும் மிகக்குறைவானதே.

நூதனமான [illegible] உருவாக்கப்பட்டுள்ள இந்த முச்சக்கரவண்டி அண்மையில் இடம்பெற்ற சைக்கிள் காட்சியில் பலரையும் கவர்ந்தது. இதனைத் தொடர்ந்து இதன் விற்பனை கனவேகமாக நடைபெற்று வருவதாகக் கூறப்படுகிறது. நம் நாட்டுக்கு இன்னமும் வரவில்லை.

# பெரியது





→ வரண்ட பிரதேசங்களில் வளரும் ஒரு வகைக் கள்ளிச் செடி இது. நமது நாட்டில் காணப்படுவதுபோல் அல்லாமல் 'சகுவாரோ' எனப்படும் இச்செடி மெக்ஸிகோவிலிருந்து அமெரிக்காவிலுள்ள கலிபோர்னியா மற்றும் அரிசோனா மாநிலங்களில் காணப்படுகிறது.

இதன் வளர்ச்சி விசித்திரமானது. முளைக்கத் தொடங்கி பத்து வருடங்கள்வரை இதன் உயரம் 2 சென்டி மீட்டர் (4/5 அங்குலம்) மட்டுமே. 10 வருடங்களின் பின்னர் கிடுகிடென்று வளரத் தொடங்கிவிடும். ஏறத்தாழ 15 மீட்டர் (49 அடி) வரை வளரும். 50வது வயதில்தான் இந்தக் கள்ளிச் செடி பூப்பூக்கும். 200 ஆண்டுகள் வரை வளரும்.

அமெரிக்காவில் அரிசோனா மாநிலத்தில் மரிகோபா மலையில் காணப்பட்ட மரம் 17.67 மீட்டர் (57 அடி 11 3/4 அங்குலம்) வரை வளர்ச்சியடைந்திருந்ததாகக் கூறப்படுகிறது. இதற்குப் பல கிளைகளும் இருந்தனவாம். உலகிலேயே மிக உயரமாக வளர்ந்த கள்ளிச்செடி இதுதான். அதனால் உலகசாதனையாக கின்னஸில் பதியப்பட்டுள்ளது.

# 2 வது பிறந்த நாள் வாழ்த்து



திவ்யா 28.09.99

வல்வெட்டித் துறை காட்டு வளவு திருவிலைப் சேர்ந்த மகேந்திரன் கவிதா தம்பதியினரின் செல்வப் புதல்வி திவ்யா தனது இரண்டாவது பிறந்த தினத்தை 28.09.99 அன்று LEIL 1090, KURLANDSTIEN-56, 1052-OSLO, NORWAY என்ற முகவரியிலுள்ள தனது இல்லத்தில் கொண்டாடினார்.

அன்பு அப்பா, அம்மா, கொழும்பிலிருக்கும் அப்பம்மா, இந்தியாவிலிருக்கும் அம்மம்மா, பூட்டியார், வல்வெட்டித்துறை தயாநிதி மாமா, மாலினி மாமி, பிரசாந்த் அத்தான், கிருத்திகா மச்சாள், வன்னி வீரேந்திரன் சித்தப்பா, பத்மப்பிரியா சித்தி, தம்பி, நரேன் சித்தப்பா, கொழும்பு அப்பம்மா, அப்பப்பா, கண்ணன் சித்தப்பா, ஜேர்மனியிலிருந்து தாதன் பெரியப்பா குடும்பத்தினர், கனடா பிரபு மாமா, சுபாசினி மாமி, சஞ்சீத் தாசன் அத்தான்கள், லண்டன் ரவி மாமா, அருள் சித்தப்பா, ரதி சித்தி, தங்கை, பார்கவி, சுதா மாமி, நோர்வே ஜுலின் அங்கிள், ரெமி அன்ரி, சிவா மாமா, சாந்தி அன்ரி, டினா அக்கா மற்றும் அம்மம்மாமார், அப்பம்மாமார், அம்மாமார், அப்பாமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், அண்ணாமார், அக்காமார், தங்கைமார், மச்சான்மார், மச்சாள்மார், மாமி-மாமாமார்கள், உற்றார் உறவினர் அனைவரும் அவளுடைய பிள்ளையார் அருளால் பல்கலையும் பெற்று சீரும் சிறப்புடனும் நீடூழி வாழவென 'திவ்யா'வை வாழ்த்துகின்றனர்.